
சுவடி : 40
ஏடு : 2
ஆகத்து 2016
*
ஆசிரியர்
**வே.ஆனைமுத்து**
*
ஆசிரியர் குழு
**க. முகிலன்**
**தமிழேந்தி**
**இரா. பச்சமலை**
**வையவன்**
**சி. பெரியசாமி**
**கோவிராமலிங்கம்**
**சி. நடராசன்**
**மங்கலம் அரசன்**
**வாலாசா வல்லவன்**
முனைவர்
**ஆ. முத்தமிழ்ச்செல்வன்**
*
அலுவலக
நிருவாகப் பொறுப்பு
**ப. வடிவேலு**
94441 05892
*
அனைத்துத் தொடர்புகளுக்கும்
**'சிந்தனையாளன்'**
2ஆ/85, கே.எஸ்.ஆர்.நகர்,
எம்.டபிள்யூ.பி. 2ஆம் குறுக்குத் தெரு,
அம்பத்தூர், சென்னை - 53.
தொடர்புக்கு :
94448 04980
044-2625 2119
மின்னஞ்சல் :
sinthanaiyalantamilmonthly
@gmail.com
*
இதழ் வடிவமைப்பு :
**சன் நகலகம்,** சென்னை-5.
9840015179
*
இணையத்தில் படிக்க
**www.keetru.com**
*



# மோடி அரசு மக்களுக்கு எதிரானது! மூன்று ஆண்டுகளில் இந்தியரைப் பாழாக்குவர்! “மோடி அரசு ஒழிக!” என முழங்குவோம்!



**உ**லகம் முழுவதிலும் கி.மு.4000-இல் 8.5 கோடி மக்கள் இருந்தார்கள். கி.பி.1-இல் உலகத்தில் 20 கோடி மக்கள் இருந்தார்கள். அப்போது மனிதனின் சராசரி வயது 5 மட்டுமே. ஏன்?

நல்ல நீரும், நச்சு நீரும் இருந்தன. நச்சு நீரைக் குடித்தவர்கள் உடனே செத்தார்கள். பாம்புகள், காட்டு விலங்குகள் இவற்றின் கடியாலும் மக்கள் செத்தார்கள். இனம் தெரியாத நோய்களுக்கு வைத்தியம் இல்லாமல் செத்தவர்கள் அதிகம். எனவேதான் அப்போது சராசரி வயது 5.

இந்த இயற்கை உயிர்க்கொல்லிகளை அடுத்து, மதங்கள் மனித உயிர்களைக் கொன்றன.

ஜொராஸ்ட்ரியம், பிராமண மதம் (அ) இந்து மதம் மூத்தவை; மூவாயிரம் ஆண்டுகள் பழைமையானவை. அடுத்து, 2600 ஆண்டுகளுக்குமுன் தோன்றியவை சமணமும், பவுத்தமும்.

2016 ஆண்டுகளாக இருப்பது கிறித்துவம்; 1600 ஆண்டுகளாக இருப்பது இஸ்லாம்.

இவ்வளவு மதங்களும் மக்களை நல்வழிப்படுத்தத் தோற்றுவிக்கப்பட்டவை என்றுதான் எல்லா மதக்காரர்களும் சொன்னார்கள். ஆனால் அது பொய்யாகி விட்டது. ஏன்?

**'அரசு' என்கிற அமைப்பு உருவாவதற்கு முன்னும், பின்னும் “என் மதம்தான் உண்மையான மதம்” என்று கூறி, அதை ஏற்காதவர்களை மக்களே கொன்றார்கள்; பின் அரசுகளே கொன்றன. உலகத்தில், மதம் காரணமாகக் கொல்லப்பட்ட மனிதர்களே அதிகம் பேர்.**

இது, இந்து மதம் தவிர்த்த எல்லா மதங்களாலும் ஏற்பட்ட உயிரிழப்பு. பிறவி சாதி - பிறவி வருண ஏற்பாட்டை உருவாக்கியது இந்து மதம் ஒன்றே. மத அடிப்படை, வருண அடிப்படை என்கிற இரண்டு கருவிகளாலும் இந்துக்களில் பெரும்பாலானவர்களை - கீழ்வருணத்தாரை, கி.மு. இரண்டாம் நூற்றாண்டு முதல் - புஷ்யமித்ரசுங்கன் காலந்தொட்டு, கி.பி.19ஆம் நூற்றாண்டு வரை கோடிக்கணக்கான இந்து கீழ்ச்சாதி மக்களை - சமணர்களை - பௌத்தர்களை - இஸ்லாமியர்களைக் கொன்றொழித்தது இந்து மதமே.

அறிவியல் நோக்கு தோன்றாத காலந்தொட்டு, அறிவியல் விளைவித்த அணுகுண்டு வீசப்பட்ட 1945 வரையில் மதம் காரணமாக மக்களிடையேயும் ஆதிக்கம் செலுத்தும் நோக்கம் காரணமாக 'அரசு'களிடையேயும், வர்க்கங்களுக்கிடையேயும் நடத்தப்பட்ட போர்களில் கொல்லப்பட்டவர்களை விட, மதங்களுக்கிடையேயும் வருணங்களுக்கிடையேயும், மத-சாதிகளுக்கிடையேயும் நடந்த இடைவிடாத சண்டைகளால் செத்துப்போனவர்களே அதிகம் பேர்.

இவ்வளவு சாவுகளுக்குப் பிறகும் இன்றைய உலகில் 750 கோடி மக்கள் வாழ்கிறார்கள். இந்தியாவில் 130 கோடி மக்கள் வாழ்கிறார்கள்.

இந்தியாவிலுள்ள 105 கோடி இந்துக்களில், 95 கோடிப் பேர் பார்ப்பனர் அல்லாத கீழ்ச்சாதி சூத்திர-ஆதி சூத்திர மக்கள். 5 கோடிப் பேர் பார்ப்பனர்; 5 கோடிப் பேர் சத்திரியர், வைசியர்.

சூத்திர-ஆதிசூத்திர சாதிகள் இன்னமும் கீழ்ச்சாதி மக்களாகவே அடக்கி வைத்திட, இன்றைய நரேந்திர மோடி அரசு எல்லாம் செய்கிறது.

அப்படிச் செய்திட, 1991இல் காங்கிரஸ் பிரதமர் நரசிம்மராவ் போட்ட அடிப்படையும்; 1996இல் வாஜ்பேயி போட்ட அடிப்படையும்; 2004 முதல் 2014 வரை மன்மோகன் சிங் போட்ட அடிப்படையும் துணை நிற்கின்றன.

**இவர்களுக்கு உதவும் கருவியாக இருப்பது முற்றுரிமை பெற்ற இந்திய அரசு; படை; நீதிமன்றம் இவை. இந்த முற்றுரிமை பெற்ற கருவியான இந்திய அரசைக் கைப்பற்ற, இந்தியா முழுவதிலும் உள்ள எந்தச் சூத்திரனும்-ஆதி சூத்திரனும் என்றும் துணியவில்லை.**

இன்று அந்தக் கருவியைக் கைப்பற்றிக் கொண்ட சூத்திரரான நரேந்திர மோடி, இளம் பருவத்திலேயே இந்து மதக்காப்பாளராகப் உருவாகி, இன்று பிராமண மத ஏவலாளாக - பணக்கார இந்தியர்களின் கையாளாக-உலகப் பணக்கார உலக நாடுகளுக்கு இந்தியாவைச் சுரண்டுகளமாக்கும் தரகராகப் பணியாற்றுகிறார். எப்படி?

1. இந்தியாவின் இறையாண்மைக்குக் கேடு சூழும் தன்மையில், இராணுவத்துக்கான கருவிகளைச் செய்யும் துறையிலும், வானூர்திகளை இயக்கும் துறையிலும் 100 விழுக்காடு அந்நிய நாடுகளின் முதலீடு நுழைய அனுமதி அளித்து, 20.6.2016 அன்று நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் மோடி முடிவெடுத்துள்ளார்.

இத்துறைகளை அந்நியில், மருந்துகள் உற்பத்தித் துறையிலும் 100 விழுக்காடு அந்நிய நாடுகள் முதலீடு செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டுக் கடற்கரைக் குப்பமான சென்னையிலும் மற்றும் சூரத்திலும் தொழிற்சாலைகளை அமைத்திட 1600களில் அனுமதிக்கப்பட்ட பிரிட்டிஷ் வெள்ளையன்தான், 1800க்குள் படிப்படியாக இந்தியா முழுவதையும் கைப்பற்றி முற்றுரிமை உள்ளதான "ஒரே இந்தியாவை" உருவாக்கினான்.

அன்றைய மக்களுக்குக் கல்வி அறிவு இல்லை; அன்று மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகள் இல்லை.

இன்றைய இந்தியாவில் 80 விழுக்காடு மக்கள் கல்வி அறிவு பெற்றிருக்கிறார்கள்; 26 விழுக்காட்டுப் பேர் தரமற்ற உயர்கல்வி பெற்றிருக்கிறார்கள்.

உயர்கல்வி பெற்ற இளைஞர்களில் ஆயிரக்கணக்கானவர்களைத் தேர்வு செய்து, அரசுச் செலவில் மேலைநாடுகளுக்கு அனுப்பி, தரமான இராணுவக் கருவிகளையும், தரமான மருந்துகளையும் உற்பத்தி செய்யக்கூடிய மிக உயர்ந்த அறிவுத் திறனை (Highly Skilled) உடைய கல்வியைக் கற்றுவரச் செய்து, அவர்களை வைத்து இந்திய அரசே இவற்றை உற்பத்தி செய்திட வழிகோலுவதைத்தானே அரசு செய்ய வேண்டும்?

அதைச் செய்யாமல், நேற்றுவரை 49 விழுக்காடு முதல் 74 விழுக்காடு வரை அந்நிய முதலீட்டை அனுமதித்த இந்திய அரசு, இன்று 100 விழுக்காடு அந்நிய முதலீட்டை அனுமதித்தது, ஏன்? இது எங்கே போய் நிற்கும்?

**முதலில் இந்திய மக்களை - படித்த இளைஞர்களை வேலை வாய்ப்பு அற்றவர்களாக ஆக்கும்; இந்தியரைச் சுரண்டும் வகையில் உயர்ந்த விலையில் மருந்துகளை விற்பதில் கொண்டு போய்விடும். இந்நிலையில் அரசியல்வாதிகளும், கல்வியாளர்களும், உயர்கல்வி கற்ற இளைஞர்களும் சுதந்தரத்தின் அருமையையும் சுதந்தர நாட்டுக் குடிமகனுக்கு உள்ள உரிமையின் உயரிய ஆற்றலையும் மாண்பையும் அறியாதவர்களாகவும், இந்திய அரசின் மக்கள் நலனுக்கு எதிரான போக்கைக் கண்டும் காணாதவர்களான வெறும் சோற்றுத் துருத்திகளாகவும் இருப்பது எப்படிச் சரியாகும்?**

"இந்தியாவுக்கு வந்து உற்பத்தி செய்யுங்கள் (Make in India)" என்று கூவி அந்நியனை அழைத்து, அவனுக்கு 5,000 - 10,000 ஏக்கர் நிலமும், நீரும், மின்வசதியும் கொடுத்து - அறிவுத்திறனுள்ள (Skilled) அந்நியர்களை வேலைக்கு அமர்த்திக் கொள்ளவும், அந்நியர்களையே பணமுதலீடு செய்யச் சொல்லியும் இந்திய இளைஞர்களின் வேலை வாய்ப்பைத் தடுப்பதும், இந்தியாவை அந்நியர்களின் சுரண்டுகளமாக மாற்றுவதும் அல்லவா,

மோடி அரசின் இத்திட்டம்? இத்துடன் நின்றதா மோடி அரசு?

2. பள்ளிகளும் கல்லூரிகளும் கோடை விடுமுறைக் குப் பிறகு 2016 சூனில் திறக்கப்பட்டன.

இந்து மதத்தை, களிமண் பக்குவத்திலுள்ள இளங் குழந்தைகள், இளைய ஆண்கள் - பெண்கள் நெஞ் சத்தில் திணிக்கும் திட்டத்தை நிறைவேற்ற வசதியாக - ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் கிளையான விஸ்வ இந்து பரிஷத் வழியாக, வேதபாடசாலைகளை அமைத்து எல்லாக் குழந்தைகளுக்கும் சமஸ்கிருதமும், சமஸ் கிருதத்திலேயே மற்ற எல்லாப் பாடங்களும், வேதக் கணக்குப் பாடமும் கற்றுத்தரத் திட்டமிட்டது மோடி அரசு. இவற்றை 2016லேயே வடஇந்தியாவில் தில்லி, அமிர்தசரஸ் (பஞ்சாப்), பஸ்வாரா (இராசஸ்தான்), மதுரா (உ.பி.) தில்லியை அடுத்த குர்கான் முதலான இடங்களில் அரசு நிதி உதவியுடன் தொடங்க அரசு திட்டமிடுகிறது.

2014இல் அரியானாவில் பா.ச.க. ஆட்சி அமைந்தது. அங்கு எல்லாத் தொடக்கப் பள்ளிகளிலும் கட்டாயமாக சமஸ்கிருதம் கற்றுத்தரப்பட மாநில அரசு முடிவு செய் துள்ளது. அத்துடன் சிறுபான்மையினரான இஸ்லாமி யரின் குழந்தைகள் உருது மொழி கற்கிறார்கள். போதிய இஸ்லாமிய மாணவர்கள் பள்ளிகளில் இல்லாத இடைவெளியைப் பயன்படுத்தி, எல்லாப் பிள்ளைகளுக் கும் சமஸ்கிருதமும் கற்றுத்தர வேண்டி, உருது கற்பிக் கும் இஸ்லாமிய ஆசிரியர்கள் உட்பட எல்லா ஆசிரியர் களுக்கும் சமஸ்கிருதம் அரசின் செலவில் கற்றுத்தரப் படுகிறது.

**நாளைக்குத் தென்மாநிலங்களில், பள்ளிகளில், சமஸ்கிருதம் கற்றுத்தருவதை எப்படி நாம் தடுக்க முடியும்? அதற்கான அதிகாரம் மாநிலங்களுக்கு எங்கே இருக்கிறது?**

சமஸ்கிருதம்-தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், மராட்டி, பஞ்சாபி, பங்களா, இந்தி மொழிகளைப் போல, பல தலைமுறைகளாக-இலட்சக்கணக்கான, கோடிக் கணக்கான மக்களால் பேசப்படுகிற வீட்டுமொழி அல்ல. மேலும், பேச்சு வழக்கில் இல்லாத மொழி; திருமணம், திதி, கருமாதி முதலான சடங்குகளில் புராண முறைப் படி புரோகிதம் செய்யும் பார்ப்பனர்கூட அறிந்திராத மொழி; வேதபாடசாலையில் படித்த சில ஆயிரம் பார்ப் பனர்களால் மட்டுமே சடங்குகளிலும் கோவில்களிலும், பார்ப்பனர் வீட்டுச் சடங்குகளிலும் சாஸ்திரிகளால் பயன்படுத்தப்படும் மொழி. எந்தப் புரோகிதன் - எந்த சாஸ்திரி வீட்டிலும் சமஸ்கிருதம் வீட்டுப் பேச்சு மொழி யாக இல்லை.

**இந்தியாவை "இந்து நாடாக" (Hindu State) ஆக்கிட, மோடி அரசு செய்கிற அடிப்படைப் பணி இது.**

3. 1991 முதல் இந்திய அரசினரால் நவோதயா பள்ளி கள் நிறுவப்படுகின்றன. 6ஆம் வகுப்பிலிருந்தே மாநிலக் கல்வித்திட்டத்திலிருந்து வேறுபட்ட C.B.S.E. திட்டப்படி பாடங்கள் உள்ளன. இந்தி பேசாத மாநிலங் களில் இந்தி ஒரு கட்டாயப் பாடமாக உள்ளது. இப்போது அப்படிப்பட்ட பள்ளிகள் 598 உள்ளன. இப்பள்ளிகளில் இலவசமாக - தரமான கல்வி தரப்படுவது உண்மை; திறமையான சிற்றூர்ப்புற மாணவ, மாணவியர் படிக்க வைக்கப்படுவதும் உண்மை. ஆனால் எல்லோரும் கட்டாயமாக இந்தி கற்க வேண்டும் என்பதும் உண்மை. **மாநில மொழியில் கல்வி தரப்படுவது இப் பள்ளிகளில் அறவே இல்லை.** அப்படிப்பட்ட பள்ளிகளை மேலும், மேலும் பெருக்குவது, வட்டார மொழிகளின் வளர்ச்சி யைத் திட்டமிட்டுத்தடுப்பதாகும். இத்தகைய கல்வித் திட்டம் எதற்காக?

4.1984 வரையில் இந்திய அரசின்கீழ் 247 பொதுத் துறை நிறுவனங்கள் செயல்பட்டன. தொடர் வண்டித் துறை, அஞ்சல் - தந்தி - தொலைபேசித் துறை - கனரக உலைகள் உற்பத்தித் துறை இவை எல்லாமே பொதுத்துறை நிறுவனங்கள்தான். வங்கித்துறை, காப் பீட்டுத் துறை இவையும் பொதுத்துறைகளே. இவற்றில் குறைந்தது 10ஆம் வகுப்புப் படித்தவர்கள் உட்பட்ட பல வகுப்பினரும், ஆண்டுதோறும் இலட்சக்கணக்கா னோர் வேலை பெறமுடியும்.

**இவற்றை நிருவகிக்கும் உயர் அதிகாரம் படைத்த குழுக்கள் (Boards) தொடர்ந்து பார்ப்பனர்கள் மற்றும் மேல்சாதிக்காரர்கள் ஆதிக்கத்திலேயே இருந்தன.**

1970க்குப் பிறகு பட்டியல் வகுப்பினரும், பழங்குடி யினரும் இவற்றில் ஒதுக்கீடு மூலம் வேலை பெற முடிந்தது. 1994க்குப்பிறகு பிற்படுத்தப்பட்ட வகுப்பின ரும் ஒதுக்கீடு மூலம் வேலை பெற முடிந்தது.

இவற்றில் 40 ஆண்டுகளுக்கு மேல், மேலாண்மை இயக்குநர், இயக்குநர்கள், ஆணையர்கள் போன்ற அதிகாரம் வாய்ந்த பதவிகளில் இருந்தவர்களில் முக்கால்வாசிப்பேர் பார்ப்பனர்களே. 1991இல் தனியார் மயம், உலக மயம், தாராள மயம் என்ற தனியார் ஆதிக்கப் பொருளாதாரக் கொள்கையை இந்திய அரசு

ஏற்றது முதல், அவர்கள், அந்தத் துறைகளைப் பாழ டித்தார்கள்; இழப்புக்கு உள்ளாக்கினார்கள். ஊழலை யும் ஒழுங்கீனத்தையும் கழிப்பிணித் தனத்தையும் வளர்த்தார்கள்.

அதன் நேரடி விளைவாகவே, இந்திய அஞ்சல் துறை தோற்றுப் போய், பணியாளர் பற்றாக்குறைக்கு வழிவகுத்தது. அதனால் தூது அஞ்சல் துறை (Courier Post) மற்றும் தனியார் வங்கித்துறை, தனியார் காப் பீட்டுத் துறை, தனியார் வானூர்தித் துறை முதலா னவை விரைந்த வளர்ச்சி பெற்றன.

இப்போது, மோடி அரசு, திட்டக்குழு என்பதைக் கலைத்துவிட்டு, 'நிதி ஆயோக்' என்ற அமைப்பை ஏற்படுத்திய பின்னர், 2014க்குப் பிறகு, பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை விற்று, அவற்றை மூடு வதில் விரைந்து செயல்படுகிறது, மோடி அரசு. அண் மையில் நிதி ஆயோக் நிருவாகக் குழு கூடி, இழப்புக்கு உள்ளாகி இருக்கிற 32 பொதுத்துறை நிறுவனங்களை அடையாளங்கண்டு, அவற்றுக்குரிய பங்குகளை விற்று, அதன்மூலம் ரூ.56,500 கோடியைத் திரட்டுவ தென்று முடிவு செய்துள்ளது.

பொதுத்துறை என்பது நேருவின் காலத்து சோசலி சத் திட்டம் என்று சொல்லிச் சொல்லி, அது ஒழிக்கப்பட வேண்டும் என்று கருதி, அத்திசை நோக்கி மோடி அரசு விரைந்து செயல்படுகிறது.

அடுத்து 14 இலட்சம் பணியாளர்களைக் கொண்ட தொடர்வண்டித் துறையையும் 2017க்குள், மோடி அரசு, தனியாருக்கு விற்றுவிட்டால், அதை நம்பியி ருக்கும் பல நூறு கோடி மக்கள் அதிகமான பயணக் கட்டணச் சுமையைத் தாங்க வேண்டிவரும். பட்டியல் வகுப்பினர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் ஆகிய 95 கோடி மக்கள் பெற்றுவரும் இடஒதுக்கீடு மூலம் கிடைக்கும் இலட்சக்கணக்கான வேலை வாய்ப் பும் பறிபோய் விடும். இவை கவலைக்கு உரியவை அல்லவா?

5. நரேந்திர தாமோதர தாஸ் மோடி, தலைமை அமைச்சராகப் பொறுப்பேற்ற நாள் முதல், ஊரார் வரிப்பணத்தில் உலகஞ்சுற்றும் அரசியல் தலைவராகச் செயல்படுகிறார்.

இந்தியாவில் உள்ள திறன் போதாத உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி கற்ற கோடிக்கணக்கான ஆண், பெண் களிலிருந்து ஆயிரக்கணக்கானோரைத் தேர்வு செய்து, வளர்ந்த நாடுகளுக்கு அரசுச் செலவில் அனுப்பி, கதிர்மின் உற்பத்தி, மருந்துகள் - மருத்துவக் கருவிகள் உற்பத்தி, வானூர்தி உறுப்புகள் உற்பத்தி இவற்றில் திறன்மிக்க பயிற்சி பெறச் செய்து, இந்தியரிடையே மூலதனப் பங்குகள் எழுப்பி, பொதுத்துறை நிறுவனங் களாக கதிர் வாங்கித் தகடு (Solar Panel) மற்றும் துணைக் கருவிகள் உற்பத்தித் தொழிற்சாலைகளை அமைத்து, போர்க் கால விசையில் கதிர் மின் உற்பத்தியைப் (Solar Energy) பெருக்கி-வேளாண்மைக்கும், வீட்டுப் பயன் பாட்டுக்கும், தொழிற்சாலைகளை இயக்கவும் தட்டுப்பாடு இன்றி மின்சாரம் வழங்குவதை விட்டுவிட்டு - உலக மானிடம் அமைதியாக வாழக்கூடாது என்று கருதி 1945 முதல் உழைப்பாளிகளுக்கு எதிராகச் செயல் படுகிற அமெரிக்கத் திருடர்களோடு கூடிக்குலவி, இந்தியா வில் புதியதாக ஆறு அணு உலைகளை நிறுவிட, நாளைக்குப் பதவியை விட்டு நீங்கப் போகிற பாரக் ஒபாமாவுடன் 7.6.2016 அன்று ஒப்பந்தம் போட்டுக் கொண்டு வந்துவிட்டார், மோடி.

உலக அளவில் திறமை அற்ற தொழில் நிறுவனம் என்று அறியப்பட்ட - அமெரிக்க "தோஷிபா வெஸ்ட் அவுஸ்" (Toshiba West House) என்ற நிறுவனமும் - இந்திய அணுமின் கழகமும் இணைந்து 6 அணு உலை களை அமைக்கும் என்பதுதான், அந்த ஒப்பந்தம்.

**2016 மதிப்பீட்டின்படி, இந்த 6 அணு உலைகளை அமைக்க 4 இலட்சம் கோடி ரூபா செலவாகும். இவை எதற்காக இந்தியாவில் வேண்டும்?**

**ஓர் ஆண்டில் 365 நாள்களில் 330 நாள்களில் வெயில் அடிக்கும் பகுதி, இந்தியா.**

நமக்குத் தேவை இந்தியக்குடிமக்களிடம் எழுப்பப் பட்ட கடன் பத்திர முதலீடு, பயிற்சி பெற்ற இந்திய அறிவியல் - பொறியியல் - அணுவியல் அறிஞர்கள்; வல்லுநர்கள் குழுவினால் வரையப்பட்ட திட்டம் இவையே.

கூடங்குளம் அணு உலைகளை அகற்ற வேண்டிய இந்தியாவில், மேலும் 6 அணு உலைகள் ஏன்? ஏன்? என்று கேட்டு, ஒவ்வொரு குடிமகனும் மோடி அரசை எதிர்த்துக் குரல் எழுப்ப வேண்டும்.

**மானிடத்தின் மாண்பை அழித்துக் கொண்டிருப் பவை மதங்கள். இந்து மதம் அதில் முதலிடத் தில் உள்ளது.**

**இந்துமத வெறியரான மோடி, 2017 வரை யிலும் பிரதமராக நீடிப்பது 130 கோடி இந்தி யர்களுக்கும் கேடானது.**

**எனவே, "இந்தியாவை இந்து நாடாக - அகண்ட பாரதமாக அமைக்கத் திட்டமிடும் மோடி ஆட்சி ஒழிக!" என மூலைக்கு மூலை குரலெழுப்பு வோம்! மக்களை அணிதிரட்டுவோம்! வாருங்கள்!**

01.08.2016 **- வே. ஆனைமுத்து**

## மார்க்சிய - பெரியாரிய - அம்பேத்கரியப் பற்றாளர்களே! அறிஞர்களே! கல்வியாளர்களே! செல்வந்தர்களே!

# பெரியார் - நாகம்மை கல்வி அறக்கட்டளை,

## என்ன பணிகளைச் செய்கிறதென அறியுங்கள்! எல்லோரும் எல்லா வகைகளிலும் உதவுங்கள்!

தந்தை பெரியார் அவர்கள், காங்கிரசுக் கட்சி மேடையில், திருப்பூரில், 1922இல், முதன்முதலாகப் "பார்ப்பனியத்துக்கும், நால்வருணத்துக்கும் உயிராக விளங்குகிற மனுநீதியையும், இராமாயணத்தையும் எரிக்க வேண்டும்" என்று பேசினார். அவருடைய அன்பான கொள்கை எதிரியான ஆச்சாரியாருக்கு, அன்று தான் ஈ.வெ.ரா.வின் உண்மை உருவம் தெரிந்தது.

1926 நவம்பர் தேர்தலில் நீதிக்கட்சி தோற்றது. பனகல் அரசரைத் தவிர மற்றெல்லாத் தலைவர்களும் தோற்றார்கள். பார்ப்பனர் ஆதிக்கம் செலுத்துகிற புரோகிதத்தை - இந்துச் சமயச் சடங்குகளை டாக்டர் டி.எம். நாயரைத் தவிர, வேறு எந்தப் பார்ப்பனரல்லாத தலைவரும் கைவிடவில்லை. அவர்கள் அவற்றைப் பின்பற்றிக் கொண்டே, பார்ப்பனர் ஆதிக்கம் செலுத்திய சட்டமன்றப் பதவிகளையும், உயர்கல்வியையும், உயர் நிலை-கீழ்நிலை அரசு வேலைகளையும் பார்ப்பனர் அல்லாதார் பெற வேண்டும் என்பதற்காக-உடலுழைப்பு, பொருள் செலவு, அறிவு ஈகம் எல்லாவற்றையும் 100க்கு 99 தலைவர்களும் செய்தார்கள். ஆதலால், "பார்ப்பனர் அல்லாதார் சுயமரியாதை உணர்வு பெற வேண்டும்" என, 1926 நவம்பரில் ஈ.வெ.ரா. முடிவு செய்தார்.

அவருக்குத் துணை நின்றவர்கள் 1) பனகல் அரசர், 2) ஆர்க்காடு ஏ. இராமசாமி முதலியார், 3) எம்.டி.சுப்பிரமணிய முதலியார் முதலான மேதைகளும் செல்வந்தர்களும் ஆவார்கள்.

ஈ.வெ.ரா.வுடைய வேண்டுகோளை ஏற்று, நீதிக் கட்சியினர், 26.12.1926இல், மதுரையில் "பார்ப்பனர் அல்லாதார் பத்தாவது மாகாண மாநாட்டை"க் கூட்டினர்.

அன்றுதான், "பார்ப்பனர் அல்லாதார் சுயமரியாதை இயக்கம்" தோற்றுவிக்கப்பட்டது. உடனே என்ன எதிர் விளைவு ஏற்பட்டது?

1848இல் மார்க்சும் - எங்கெல்சும் வெளியிட்ட, "பொதுவுடைமைக் கொள்கை அறிக்கையை (Communist Manifesto)"க் கண்டு, உலக முதலாளிகள் அலறியது போலத், தமிழ்நாட்டுப் பார்ப்பனர் அலறினர். பொதுவுடைமை அறிக்கையைக் கண்டு, வளர்ச்சி நிலையிலிருந்த உலக ஆலைத் தொழிலாளர்களும் வேளாண் தொழிலாளர்களும் விடுதலை உணர்வு பெற்றது போல, தமிழ்நாட்டுச் சற் சூத்திரரும், சூத்திரரும், தீண்டப்படாதாரும் சுயமரியாதைக் கொள்கையைக் கைக் கொண்டு பிறவி வருணசாதி, தீண்டாமை, பார்ப்பனப் புரோகிதம் இவற்றை ஒழித்தே தீரவேண்டும் எனப் பொங்கி எழுந்தனர்; ஈ.வெ.ரா.வைப் பின்பற்றினர்.

மூன்று தென்மாவட்டங்களில் கோவில் நுழைவு உரிமை மறுக்கப்பட்ட நாடார் சமூகத்தைச் சார்ந்த ஊ.பு.அ. சவுந்தர பாண்டியன் மற்றும் ஜே.எஸ். கண்ணப்பர், செங்கற்பட்டு எம். கிருஷ்ணசாமி ரெட்டி, ஜெயராம ரெட்டி, பி.டி. ராஜன், 1927-1929இல் முதலாவது அமைச்சராக இருந்த டாக்டர் ப. சுப்பராயன் ஆகிய பெரிய படிப்பாளிகளும் பெருஞ் செல்வந்தர்களும் 1929 பிப்ரவரி 17, 18இல் கூடி, "முதலாவது மாகாண சுயமரியாதை மாநாட்டை" செங்கற்பட்டில் நடத்தினர்.

"சுயமரியாதைக் கொள்கையின்-இயக்கத்தின் கர்த்தா - தோற்றுநர் ஈ.வெ.ரா." என உலகுக்கு அறிவித்தனர்.

அருப்புக்கோட்டை சூரிய. ஆறுமுக. முத்து நாடார், தம் "நாடார் குல மித்திரன்" கிழமை ஏட்டில், 25.2.1929 இல், "ஈ.வெ. ராம சகாப்தம் 4" எனத் தலையங்கப் பகுதியில் பதிவு செய்தார்.

உடனடியாக ஈ.வெ.ரா. என்ன செய்தார்?

அதுசமயம் அவர் ஈரோட்டில் கட்டிய மாடி வீட்டில், மேல் தளத்தில், "இளைஞர்களுக்கான சுயமரியாதைப் பயிற்சிப் பாடசாலை" ஒன்றை சர்.ஏ. இராமசாமி முதலியார், டாக்டர் ஆர்.கே. சண்முகம் செட்டியார் இருவரையும் அழைத்துத் தொடங்கி வைத்தார்.

இடையிடையே சில நாள்கள் பயிற்சி வகுப்பை நடத்தினார். 1944 முதல் 1949 முடிய, தொடர்ச்சியாக, கோடை காலத்தில், மாணவர் பயிற்சி வகுப்பை நடத்தி, அவர்களைக் கொண்டு சுயமரியாதைக் கொள்கைகளை நாடெங்கும் பரப்பினார். பின்னர் 15 ஆண்டுக் காலம் நீண்ட இடைவெளி.

நான் 1964இல், என் தனிப் பயிற்சிக் கல்லூரிக்காக, சுயமரியாதை இயக்கத்துக்கு உரிய "தென்னூர் பெரியார் இல்லம்" என்பதைப் பெரியாரிடம் வாடகைக்குப் பெற்றேன்.

"நாம், இக்கட்டடத்தில் கொள்கைப் பயிற்சி வகுப்பு நடத்த வேண்டும்" எனப் பெரியாரிடம் வேண்டினேன். பயிற்சியாளர்களுக்கு வேண்டிய உணவுக்கான பொருள்களை வாங்கித் தந்தார்; என்னையே பொறுப்பாளனாக அமர்த்தினார்.

10 நாள்கள் அவரே இருந்து பயிற்சி அளித்தார்.

1964 முதல் 1972 முடிய பல ஊர்களில் இருவரும் பயிற்சி வகுப்பை நடத்தினோம்.

தந்தை பெரியார் மறைவுக்குப் பின், பல பிரிவு களாக இயங்கும் பெரியார் இயக்கத்தினர், தொடர்ந்து பயிற்சி வகுப்புகளை நடத்துகின்றனர்.

மார்க்சியக் கட்சியினர், இந்துமத இயக்கத்தினர், காந்திய இயக்கத்தினர் திட்டமிட்டுப் பயிற்சி வகுப்புகளை நடத்துகின்றனர்.

**அந்தந்தக் கொள்கையில் நாட்டமுள்ள கல்வி யாளர்களும், செல்வந்தர்களும் - பண உதவி, கற்பிக்கும் பணி உதவி இவற்றை மனமுவந்து அளிக்கின்றனர்.**

இவற்றையெல்லாம் தூக்கித்தின்கிற அளவில்,

1) பார்ப்பனர்கள், ஒரு வேதம், புரோகிதம், சமற்கிரு தம் இவற்றை, இலவச உணவும் இடமும் கொடுத்து, 12 ஆண்டுகளுக்குப் பார்ப்பனச் சிறார்களுக்குக் கற்பிக்கும் "வேத பாடசாலை"களை நூற்றுக் கணக்கில், தமிழ்நாட்டில் நடத்துகின்றனர்.
2) இஸ்லாமிய, ஹசரத்கள், மவுல்விகள், செல்வந்தர் கள் ஆகியோர் "அரபிக் கல்லூரி"களை நிறுவி, 7 ஆண்டுகளுக்கு குர்-ஆன், ஷரியத், அரபி மொழி இவற்றைக் கற்றுத்தரும் மதகுரு பயிற்சியை அளிக்கிறார்கள்.
3) கிறித்துவர்கள் "இறையியல் கல்லூரி"களை நிறுவி, கிறித்துவத்தில் சான்றிதழ்ப் பயிற்சி முத லான பட்டயப் பயிற்சி, பட்டப்படிப்புப் (B.Theo.), (B.Div.) பயிற்சியை அளிக்கிறார்கள்.

**இவற்றை உன்னிப்பாக உணருங்கள்!**

**"பெரியார்-நாகம்மை கல்வி அறக்கட்டளை" சார்பில், நாங்கள் என்ன செய்கிறோம் என்பதைப் பற்றி, மனங்கொண்டு அறிந்திட முன் வாருங்கள்!**

1. புத்தர் 2650 ஆண்டுகளுக்கு முன்னர் நால்வரு ணத்தையும், வேள்வியையும் எதிர்த்தார்.
2. திருவள்ளுவர் 2050 ஆண்டுகளுக்குமுன் பிறவி யால் சுமத்தப்பட்ட மானிட இழிவையும், வேள்வி யையும் கண்டனம் செய்தார்.
3. காரல் மார்க்சு 1853இல் மனுநீதியின் அநீதியைக் கண்டனம் செய்தார். 1858இல் இந்தியர்கள் 'பசு வணக்கம், அநுமார் வணக்கம்' செய்வதைக் கண் டித்தார்.
4. 1865இல் வடலூர் வள்ளலார் வேதம், ஆகமம், சாதிஇவற்றை எதிர்த்தார்.
5. மகாத்மா புலே நால்வருணம், புரோகிதம், பெண் ணடிமை இவற்றை 1870இல் எதிர்த்து இயக்கம் நடத்தினார்.
6. 1882இல் அத்திப்பாக்கம் அ. வேங்கடாசல நாயகர் வேதம், புராணம், சாதி, சோதிடம் எல்லாவற்றை யும் கண்டித்தார்.
7. 1922 முதல் 1973 முடிய தந்தை பெரியார் நால் வருணம், தீண்டாமை, புரோகிதம், இராமாயணம், பெண்ணடிமை இவ்வளவையும் காக்கும் மனு நீதியை எதிர்த்தார்; இயக்கம் நடத்தினார்.
8. மேதை டாக்டர் அம்பேத்கர் 1927இல் மனுநீதியை எரித்தார்.

மார்க்சிய-பெரியாரிய-அம்பேத்கரியக் கொள்கை யாளர்கள் இன்றும், மேலே கண்டவாறு உள்ள எல்லா மேதைகளின் கொள்கைகளையும் இடைவிடாது பரப் புரை செய்கிறோம்.

**இவற்றுள் எதில் எதில், எத்தனை விழுக்காடு வெற்றி கண்டோம் என நாம் சிந்திக்கக் கடமைப் பட்டுள்ளோம்.**

**இவ்வளவு இக்கட்டான சூழலில், "பெரியார் - நாகம்மை கல்வி அறக்கட்டளை" சார்பில், "சுய மரியாதை வாழ்வியல் சான்றிதழ்ப் பயிற்சி வகுப் பினை" 2015 ஆண்டு சூலை இறுதியில் தொடங் கினோம். 2016 ஆகத்து முடிய, 26 பயிற்சியாளர் களுக்கு, 40 ஞாயிறுகளில் பயிற்சி அளித்தோம்.**

**1. பௌத்தம், 2. வள்ளுவம், 3. மார்க்சியம், 4. லெனினியம், 5. காந்தியம், 6. பெரியாரியம், 7. அம்பேத்கரியம், 8. பாவேந்தம் ஆகிய எண் வகைத் தத்துவங்களையும்; 9. தமிழ்மொழித் திறன் மேம்பாட்டுப் பயிற்சியையும், 10. கணினி அறிமுகப் பயிற்சியையும் 40 ஞாயிறுகளில் பத்து வகையான பாடங்களை, தலைசிறந்த பேராசிரியர் களைக் கொண்டு கற்பித்துள்ளோம்.**

**பயிற்சியாளர்களுக்கும், பயிற்றுநர்களுக் கும் நண்பகல் உணவு, இருவேளை தேநீர் வழங் கும் கடமையையும் ஆற்றியுள்ளோம்.**

**மேலே கண்ட சான்றிதழ்ப் பயிற்சித் தேர்வில் வெற்றி பெற்ற பயிற்சியாளர்களுக்கு, வரும் 17.9.2016 சனி அன்று, அறக்கட்டளை வளாகத் தில், தந்தை பெரியாரின் 138ஆம் பிறந்த நாள் பெருவிழாவில், சான்றிதழ்களையும், பயனுறு நூல்களையும் வழங்கிட உள்ளோம்.**

**எங்கள் அறக்கட்டளை 2016-2017க்கான பயிற்சி வகுப்பையும் உடனே தொடங்கிட உள்ளது.**

**நல்ல நூலகத்தையும், கடமை உணர்வுடன் கூடிய பயிற்றுநர்களாகப் பணிபுரியும் சிறந்த அறிஞர்களையும் கொண்டு மேற்கொள்ளப்பட் டுள்ள எங்களின் பணி சிறக்க, எல்லாத் தமிழ்ப் பெருமக்களும், செல்வந்தர்களும் மனமுவந்து நல்ல அளவில் நன்கொடை அளித்துப் பேருதவி புரிய வேண்டுகிறோம்.**

**- வே. ஆனைமுத்து**

# ‘மாதொருபாகன்’ வழக்கில் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பு

**- க. முகிலன்**

ஒன்றரை ஆண்டுக்குமுன் பெருமாள் முருகன் எழுதிய ‘மாதொருபாகன்’ நூல் குறித்து எழுந்த சிக்கல் தொடர்பான வழக்கில், சென்னை உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி சஞ்சய் கிஷன் கவுல், நீதிபதி புஷ்பா சத்தியநாராயணா ஆகியோரைக் கொண்ட அமர்வு 5.7.2016 அன்று தீர்ப்புக் கூறியது. முற்போக்குச் சிந்தனை யாளர்களும் இயக்கங்களும் மகிழ்ச்சிப் பொங்க இத் தீர்ப்பை வரவேற்றுள்ளனர். இந்துத்துவ வாதிகளும் வலதுசாரியினரும் இதைப் “புண்பட்ட மக்களின் உணர்வு களைக் கருத்தில் கொள்ளாத - நியாயமற்ற தீர்ப்பு” என்று கூறுகின்றனர். இந்துத்துவத்தின் “அறிவொளி முக”மாகக் கருதப்படும் எஸ்.குருமூர்த்தி இத் தீர்ப்பை விமர்சனம் செய்து, எழுதிய கட்டுரை “பாரதப் பண்பாட்டை”த் தூக்கிப் பிடிக்கும் ‘தினமணி’யில் 8.7.2016, 9.7.2016 ஆகிய நாள்களில் இரண்டு பகுதியாக வெளி வந்தது.

மாதொருபாகன் நூலை எழுதிய பெருமாள் முருகன், அரசுக் கல்லூரியில் பேராசிரியராகப் பணிபுரிபவர். சாகித்திய அகாதமி விருது பெற்றவர். திருச்செங் கோட்டைச் சொந்த ஊராகக் கொண்ட வர். மாதொருபாகன் நூல் 2010ஆம் ஆண்டு காலச்சுவடு பதிப்பகத்தால் வெளியிடப்பட்டது.

மாதொருபாகன் ஒரு நாவல். அதன் கதை 1940 களில் நிகழ்ந்ததாகத் தக்க தரவு களுடன் புனையப் பட்டுள்ளது. காளியும் பொன்னாவும் கணவன்-மனைவி. இவர்களுக்குத் திருமணமாகிப் பல ஆண்டுகளாகியும் மகப்பேறு வாய்க்க வில்லை. அக்காலத்தில் நிலவிய சமூகக் கண்ணோட்டத் தின்படி காளி ஆண்மையற்றவன் என்றும் பொன்னா மலடி என்றும் பலவகையிலும் பழிப்புக்கு ஆளாகின்ற னர். காளியும் பொன்னாவும் மகப்பேறு வேண்டிப் பல கோவில்களுக்குச் செல்கின்றனர். பலவகையான விரதங்கள் இருக்கின்றனர். உடலை வருத்துகின்ற சடங்குகளைச் செய்கின்றனர். ஆயினும் மகப்பேறு வாய்க்கவில்லை.

திருச்செங்கோட்டில் மலைமீது அமைந்துள்ள அர்த்தநாரீசுவரர் கோயில் வளாகத்தில் மிகவும் சரி வான பாறை மீது இருக்கும் “வரட்டிக்கல்” என்று கூறப்படும் உருண்டையான பெரிய குண்டுக்கல்லைச் சுற்றிவந்தால் குழந்தை பிறக்கும் என்கிற நம்பிக்கை நீண்டகாலமாகக் கொங்கு நாட்டுப் பகுதியில் நிலவி வந்தது. காளியும் பொன்னாவும் வரட்டிக்கல்லைச் சுற்றி வந்து அர்த்தநாரீசுவரரிடம் வேண்டுதல் செய்தும் குழந்தைப் பிறக்கவில்லை. பெரியார் ஈ.வெ. இராமசாமி யின் பெற்றோரும் பிள்ளை வரம் வேண்டி இந்த வரட்டிக்கல்லை வலம் வந்தனர் என்று ஆய்வாளர் ஆ.இரா. வேங்கடாசலபதி கூறுகிறார்.



மகப்பேறு இன்மை காரணமாக உறவினர்களால், மற்றவர்களால் பல நேர்வுகளில் பழிப்புக்குள்ளான காளியும் பொன்னாவும் பெரும் மனஉளைச் சலில் உழன்றனர். அந்நிலையில், காளியின் அம்மாவும் பொன்னா வின் தாயும் சேர்ந்து, திருச் செங்கோட்டில் அர்த்தநாரீசுவரர் கோயில் திருவிழாவின் 14ஆம் நாள் வைகாசி விசாகத் திரு நாளில் தேரோட்டம் முடிந்த பின் இரவில் நடக்கும் காமக் கூத்துக்கு பொன்னாவை அனுப்புமாறு காளியிடம் கூறுகின்றனர். அப் போது பொன்னா கருத்தரிப்பாள் என்று சொல்கின்றனர். காளி அதை மறுக்கும் போது பொன்னாவின் சகோதரனும் காமக் கூத்துக்கு அனுப்புமாறு வலியுறுத்துகிறான்.

காமக்கூத்து நடைபெறும் இரவில் கணவன் மூலம் மகப்பேறு வாய்க்காத பெண்கள் வேறு வேறு ஆடவருடன் உறவு கொண்டு கருத்தரிப்பது என்கிற வழக்கம் இருந்தது. குடும்பத்தாரின் ஒப்பு தலுடன் இது நடைபெற்றது. இவ்வாறு பிறக்கும் குழந் தையைச் சாமி கொடுத்த குழந்தை என்று கூறுவார் கள். அக்குழந்தைகளுக்குக் ‘குழந்தை சாமி’ என்றும் ‘தகப்பன் சாமி’ என்றும் பெயரிடுவது வழக்கம். மாதொருபாகன் கதையில் குடும்பத்தாரின் வற்புறுத் தலின் பேரில் பொன்னா காமக்கூத்துக்குச் சென்றாள். கருத்தரித்தாள். குழந்தை பிறந்தது. நாட்டுப்புற வழக் காற்றின் அடிப்படையில் அங்கு நடப்பிலிருந்த இக்கதை எழுதப்பட்டதாகப் பெருமாள் முருகன், நூலின் முன்னு ரையில் குறிப் பிட்டுள்ளார்.

மாதொருபாகன் நூலின் இரண்டாம் பதிப்பு 2011ஆம் ஆண்டும், மூன்றாம் பதிப்பு 2012ஆம் ஆண்டும்

வெளிவந்தன. மாதொருபாகன் நூல் அனிருதன் வாசுதேவனின் ஆங்கில மொழிபெயர்ப்பில் "ONE PART WOMAN" என்ற தலைப்பில் உலக அளவில் நூல்களைப் பதிப்பிக்கும் "பெங்குயின்" நிறுவனத்தால் வெளியிடப்பட்டது. 2010 முதல் நான்காண்டுகளில் இந்நூல் தமிழில் 5000 படிகள் விற்றுத் தீர்ந்தன. இந்த நான்கு ஆண்டுகளில் மாதொருபாகன் கதையைப் படித்த எவரும் இக்கதையால் தன் மனம் புண்பட்டதாகக் கூறவில்லை.

ஆனால், திடீரென்று 2014 திசம்பரில், திருச்செங்கோட்டில் ஒரு பெருங்கூட்டம் மாதொருபாகன் கதை, கொங்கு மண்டலத்தின் வேளாளக் கவுண்டர் சாதிப் பெண்களையும், சமூகத்தையும் இழிவுபடுத்துவதாகக் கூறி அந் நூலைத் தடைசெய்ய வேண்டும்; பெருமாள் முருகனைப் பணியிலிருந்து நீக்கவேண்டும் என்று கோரி, போராட்டத்தில் ஈடுபட்டனர். சங்பரிவாரங்களும் - சாதி ஆதிக்கவாதிகளும் தன்னலநோக்குடன் திட்டமிட்டுத் திடீரென மாதொருபாகன் நூல் எங்கள் உள்ளங்களைப் புண்படுத்துகிறது-எங்களை இழிவுபடுத்துகிறது என்று கூறித் தங்கள் வீட்டுப் பெண்களையும் போராட்டத்தில் ஈடுபடுத்திப் பெரும் கலவரத்தை ஏற்படுத்தினர்.

பெருமாள் முருகனைத் தொலைப்பேசி வாயிலாகத் தகாத சொற்களால் பழித்தனர்; கொலை மிரட்டல்கள் விடுத்தனர். வீட்டுக்குள்ளேயே அவர் முடங்கிக் கிடக்கும் வகையில் திருச்செங்கோட்டு நகரில் கொந்தளிப்பான சூழ்நிலையை உண்டாக்கினர். திருச்செங்கோட்டு நகரில் கடையடைப்பு நடத்தி ஒட்டுமொத்த மக்களும் பெருமாள் முருகனுக்கு எதிராக இருப்பது போன்ற தோற்றத்தைக் காட்டினர்.

பெருமாள் முருகனின் கருத்துரிமைக்கு எதிராக மத-சாதி ஆதிக்கச் சிறு கும்பல் நடத்திய அழிம்புகளைச் செயலலிதா தலைமையிலான தமிழக அரசு தடுக்க முயலவில்லை. பெரியாரின் வழிவந்ததாகச் சொல்லிக் கொள்ளும்-தமிழ்நாட்டின் பெரிய அரசியல் கட்சிகளான தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் காந்தியாரின் மூன்று குரங்கு பொம்மைகள் போல் இருந்தன. தமிழகத்தில் கடந்த சில ஆண்டுகளாகப் பெருகிவரும் சாதி ஆணவக் கொலைகள்-இளவரசன், கோகுல்ராஜ் படுகொலைகள் குறித்து இந்த இரண்டு திராவிடக் கட்சிகளும் கருத்துக் கூறாமல் அமைதி காக்கின்றன. காரணம், கவுரவக் கொலைகளில் கொல்லப்படுவோர் தாழ்த்தப்பட்டவர் களாக இருப்பதால், ஆணவக் கொலை செய்தவரின் அக்குறிப்பிட்ட சாதியின் வாக்குகள் தமக்குக் கிடைக்காமல் போய்விடுமோ என்கிற அச்சமே ஆகும்.

எழுத்தாளர்களில் ஒரு பிரிவினரே பெருமாள் முருகன் பக்கம் நின்றனர். கர்நாடகத்தில் யூ.ஆர்.



*சென்னை உயர்நீதிமன்ற*
*தலைமை நீதிபதி எஸ்.கே. கவுல்*

அனந்தமூர்த்தி எழுதிய 'சம்ஸ்காரா' என்ற நூலுக்கு எதிர்ப்பு எழுந்த போது, கர்நாடகத்தின் அனைத்து எழுத்தாளர் களும் ஒன்றுதிரண்டு அனந்தமூர்த்திக்கு ஆதரவாக நின்று அந்த எதிர்ப்பை முறியடித்தனர். தமிழ்நாட்டில் அத்தகைய நிலை ஏற்படாதது வெட்கக்கேடு! பெருமாள் முருகனுக்கு ஆதரவாக மார்க்சிய - பெரியாரிய - அம்பேத்கரிய இயக்கங்கள் குரல் கொடுத்தன.

சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் பொருட்டு என்ற பெயரில் நாமக்கல் மாவட்ட நிர்வாகம் 10-1-2015 அன்று சமாதானப் பேச்சுவார்த்தைக்கு வருமாறு போராட் டக்காரர்களின் சார்பில் எட்டுப் பேருக்கும், பெருமாள் முருகன் மற்றும் இந்நூலைப் பதிப்பித்த காலச்சுவடு கண்ணனுக்கும் அழைப்பு விடுத்தது. அந்த எட்டுப் பேரில் இருவர் இந்து முன்னணித் தலைவர்கள். மற்ற ஆறு பேர் சாதி அமைப்புகளின் தலைவர்கள், கோயில் நிருவாகக் குழு உறுப்பினர்கள். இந்த எட்டுப்பேரில் யுவராஜ் ஒருவர். யுவராஜ், கோகுல்ராஜ் சாதி ஆணவக் கொலையில் கைது செய்யப்பட்டு இப்போது சிறையில் இருக்கிறார். மத-சாதி ஆதிக்கக் கும்பல் எந்தப் பெயரால் அட்டூழியச் செயல்களில் ஈடுபட்டாலும் ஆட்சியாளர்கள் தொடக்கத்திலேயே அவர்களைக் கட்டுப்படுத்தாமல், வளரவிட்டு வேடிக்கைப் பார்ப்பதும், மேலும் அவர்களை ஊக்குவிப்பதுமான கேடான போக்கு இந்தியா முழுவதுமே நிலவுகிறது. அந்த எட்டுப்பேரில் எவரும் அமைதிப் பேச்சில் நேரடியாகக் கலந்து கொள்ளவில்லை. அவர் களுக்குப் பதிலாக வேறு ஆட்களை அனுப்பினர். அந்த அளவுக்குச் சாதி ஆணவம் அவர்களிடம் தலைக்கேறி இருக்கிறது. ஆனால் பெருமாள் முருகன் நேரில் தனியாகச் சென்றார்.

சமாதானப் பேச்சுவார்த்தை நடப்பதற்குமுன், 7.1.2015 அன்று பெருமாள் முருகன் வெளியிட்ட அறிக்கையில், ''மாதொருபாகன் நூல் எவருடைய மனத்தையேனும் புண்படுத்தியிருக்குமானால், அதற்காக அவர்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்'' என்று வருத்தம் தெரிவித்திருந்தார். ஆனால் ஆதிக்க சாதிவெறியர்கள் அதை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டனர்.

எனவே, நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் அலுவலகத்தில், 10-1-2015 அன்று சமாதானப் பேச்சுவார்த்தை நடந்தது. மாதொருபாகன் நூலின் கதைக்களம் திருச்செங்கோடு என்று இருப்பதை அந்நூலின் அடுத்த பதிப்பில் நீக்கி விடுவதாகப் பெருமாள் முருகன் கூறினார். ஆனால் அந்த ஓநாய்களின் கூட்டம் அதை ஏற்கவில்லை. இறுதியாக, பெருமாள் முருகனிடம் நிபந்தனையற்ற மன்னிப்பை அவர் கைப்பட எழுதி வாங்கியது மாவட்ட நிர்வாகம். அதனால் பெரும் மன உளைச்சலுக்கு உள்ளான பெருமாள் முருகன் அன்றிரவே தன் முகநூலில், ''எழுத்தாளன் பெருமாள் முருகன் இறந்துவிட்டான்'' என்று அறிவித்தார்.

பெருமாள் முருகனின் இந்த அறிவிப்பு, தமிழகத்தில் மட்டுமின்றி இந்தியா முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. பல்வேறு துறைகளைச் சார்ந்த வல்லுநர்களும், அறிஞர்களும், எழுத்தாளர்களும் பெருமாள் முருகனுக்கு ஆதரவாக அறிக்கைகளைத் தனியாகவும், கூட்டாகவும் வெளியிட்டனர். பெருமாள் முருகன் தன் எழுதுகோலைத் தானே முறித்துக் கொண்ட முடிவை மாற்றிக் கொள்ள வேண்டும் என்றும் அவர்கள் கோரியிருந்தனர்.

2013ஆம் ஆண்டு மகாராட்டிரத்தில் மருத்துவரான நரேந்திரத போல்கர் மூடநம்பிக்கை ஒழிப்பு - பகுத்தறிவு நோக்கு என்பதை அடிப்படையாகக் கொண்டு பரப்புரை செய்து வந்தார். அது ஓர் இயக்கமாக வளர்ந்தது. எனவே சங்பரிவார வெறியர்கள் தபோல்கரைப் படுகொலை செய்தனர். அதன்பின்னர் இதே காரணத்துக்காக இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியினரான கோவிந் பன்சாரேவைக் கொன்றனர். இதேபோல் கர்நாடகத்தில் கல்புர்கி என்கிற பகுத்தறிவாளரைக் கொன்றனர். தமிழ்நாட்டில் பெருமாள் முருகனை அதுபோல் கொலை செய்ய முடியாத காரணத்தால், அவருள் இருக்கும் எழுத்தாளனைப் பெருமாள் முருகனே கொல்லும் படியான கொடிய நிலைக்கு அவரை ஆளாக்கினர்.

பெருமாள் முருகன் நிபந்தனையற்ற மன்னிப்பை எழுதிக் கொடுத்த பிறகும், கொங்குவேளாளர் சங்கங்களின் கூட்டமைப்பு, நாமக்கல் மாவட்ட செங்குந்த மகாஜன சங்கம், வேல்முருகன், வெள்ளியங்கிரி ஆகியோர் தனித்தனியாக சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர். பெருமாள் முருகனின் மாதொருபாகன் நூலைத் தடைசெய்ய வேண்டும்; பெருமாள் முருகன் மீது குற்றவியல் வழக்குப் பதிவு செய்ய வேண்டும் என்று அவர்கள் கோரியிருந்தனர். 10-1-2015 அன்று நடந்த சமாதானப் பேச்சின் முடிவுகளை இரத்துச் செய்ய வேண்டும் என்று தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள், கலைஞர்கள் சங்கத்தின் சார்பில் அதன் தலைவர் ச.தமிழ்ச்செல்வன், உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார். மாதொருபாகன் நூலைத் தடைசெய்யக் கூடாது என்று கோரி அந்நூலைப் பதிப்பித்த காலச்சுவடு ஆசிரியர் கண்ணன் சார்பில் தமிழ்நாடு மனித உரிமைக் கழகத்தின் தலைவராகவும் வழக்குரைஞராகவும் உள்ள வி.சுரேஷ், உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார்.

தலைமை நீதிபதி எஸ்.கே. கவுல், நீதிபதி புஷ்பா சத்தியநாராயணா ஆகியோர் ஓராண்டுக்குமேல் இந்த வழக்கை விசாரித்தனர். இந்த வழக்கின் மீதான தீர்ப்பை 5-7-2016 அன்று வழங்கினர். இந்தத் தீர்ப்பில், ''நாமக்கல் மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையில் நடந்த பேச்சுவார்த்தையில் எடுக்கப்பட்ட முடிவு செல்லாது; யாரையும் கட்டப்படுத்தாது. பெருமாள் முருகன் மீதான குற்றவியல் நடவடிக்கைகள் இரத்து செய்யப்படுகின்றன. மாதொருபாகன் நூலை விற்பனை செய்வதற்குத் தடைவிதிக்கக் கோரிய வழக்குகள் தள்ளுபடி செய்யப்படுகின்றன'' என்று கூறப்பட்டுள்ளது.

160 பக்கங்கள் கொண்ட இத்தீர்ப்பின் முதன்மையான சில பகுதிகளைச் சுட்டிக்காட்டுவது பொருத்தமாகும். ஆனால் அதற்குமுன் ஒரு செய்தியைக் குறிப்பிட வேண்டியுள்ளது.

தலைமை நீதிபதியாக உள்ள எஸ்.கே. கவுல் அல்லாமல் வேறொரு நீதிபதி இந்த வழக்கை விசாரித்திருந்தால் மாறுபட்ட தீர்ப்பு கிடைத்திருக்கவும் வாய்ப்புண்டு. ஏனெனில் 2013 சூலையில் மூன்று நீதிபதிகளைக் கொண்ட உச்சநீதிமன்ற அமர்வு மருத்துவக் கல்விக்கான பொது நுழைவுத் தேர்வு கூடாது என்று தீர்ப்பளித்தது. 2016 ஏப்பிரல் மாதம் அவ்வர் அடங்கிய உச்சநீதிமன்ற அரசமைப்புச் சட்ட அதிகார அமர்வு, மருத்துவப் படிப்புக்கான பொது நுழைவுத் தேர்வை இந்தக் கல்வி ஆண்டே நடத்த வேண்டும் என்று தீர்ப்பு வழங்கியது. ஆகவே நீதிபதிகளைப் பொறுத்தும் தீர்ப்புகள் மாறுபடுவதுடன், பெரும்பாலான நீதிபதிகள் அரசின் மன வோட்டத்திற்கு ஏற்பத் தீர்ப்பு வழங்குவது என்பதே இப்போது பெருவழக்காக இருக்கிறது.

தற்போது சென்னை உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக உள்ள எஸ்.கே. கவுல், 2008இல் தில்லி உயர்நீதிமன்றத்தில் நீதிபதியாக இருந்தபோது-புகழ்

பெற்ற ஓவியரான எம்.எஃப். உசேன் அலி இந்துத்துவ வெறியர்களால் தொடர்ந்து தாக்கப்பட்டதால் அவர் இந்தியாவைவிட்டு வெளியேறி, கத்தார் நாட்டின் குடியுரிமை பெற்று வாழ்ந்து கொண்டிருந்தபோது, அவர் தொடர்பாக நடந்த வழக்கில் ‘‘90 அகவையினரான உசேன் இந்தியாவில் அவருடைய வீட்டில் உரிமையுடன் அமர்ந்து அவர் விரும்புகின்றவாறு திரைச்சீலையில் வண்ண வண்ண ஓவியங்களைத் தீட்டட்டும்’’ என்று கூறி, அந்த முதிய ஓவியரின் உரிமையை நிலைநாட்டினார். அதேபோன்று 5.7.2016 அன்று அளித்த தீர்ப்பிலும் நீதிபதி கவுல், ‘‘எழுத்தாளர் பெருமாள் முருகன் புத்துயிர்ப்புப் பெற்று மீண்டும் எழுதவேண்டும்’’ என்று தன் உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தி இருக்கிறார்.

**அரசமைப்புச் சட்ட விதி 19(1)(a) தனிமனிதக் கருத்துச் சுதந்தரத்தை உறுதி செய்கிறது. அதேசமயம் விதி 19(2)இல் கருத்துச் சுதந்தரத்திற்குச் சில கட்டுப்பாடுகளும் வரையறுக்கப்பட்டுள்ளன. நீதிபதி கவுல் தன்னுடைய தீர்ப்பில் மாதொருபாகன் நூல் அரசமைப்புச் சட்ட விதி 19(2)இன்கீழ் வைத்து ஆராயப்பட வேண்டியதாக இல்லை என்று கூறியுள்ளார்.**

இத்தீர்ப்பில் நீதிபதிகள், ‘‘மாதொருபாகன் நாவல் சிறந்த இலக்கியநயத்துடன் எழுதப்பட்டுள்ளது. சமூக வரலாற்றில் மனிதர்கள் எதிர்கொள்ளும் உணர்ச்சிப் பூர்வமான சூழ்நிலைகள் இக்கதையில் கலைநயத்துடன் பின்னப்பட்டுள்ளன. மகப்பேறு வாய்க்கப் பெறாத கணவன்-மனைவிக்கு - முன்னொரு காலத்தில் இருந்ததாகக் கருதப்படும் ஒரு பழக்கமும் வழக்கமும் - அது விரும்பத்தகாததாக இருந்த போதிலும் - இக்கதையின் கணவன்-மனைவியான காளி-பொன்னா ஆகியோரின் முன் வைக்கப்படுகிறது. மகப்பேறு இல்லாத கணவன்-மனைவியை இத்தகைய தீர்வை நோக்கித் தள்ளப்படுகின்ற அளவுக்கு அவர்கள் பழிப்புகளுக்கும் புறக்கணிப்புகளுக்கும் ஆளாகின்றனர்’’ என்று கூறியுள்ளனர்.

அவர்களுக்குள் அன்பாக இருந்த கணவன்-மனைவியை உறவினர்களும், மற்றவர்களும் கூறிய பழிச்சொற்களால் காளி-பொன்னாவைக் குத்திக் குருதி சிந்த வைத்த வன்முறையே, மகப்பேற்றிற்கான மாற்று வழியை நாடச் செய்தது. காளி மறுத்த போதிலும் இவ்விணையரின் அம்மாக்களும் பொன்னாவின் உடன்பிறந்தவனும் வலியுறுத்தி தேர்த் திருவிழாவின் 14ஆம் நாள் வைகாசி விசாக இரவில் நடக்கும் காமக் கூத்துக்கு அனுப்புகின்றனர் என்பது கதையின் ஒரு முக்கியமான கூறாக இருந்தபோதிலும், கதையின் முதன்மையான நோக்கம் குழந்தை இல்லாத ஒரு கணவன்-மனைவி சமூகத்தில் சந்திக்கும் அவமானங்கள், துன்பங்கள், மன அழுத்தங்கள் ஆகியவற்றைப் படம்பிடித்துக் காட்டுவதாகவே இருக்கிறது என்று நீதிபதிகள் கூறியுள்ளனர்.

மேலும் நீதிபதிகள், ‘‘இந்த நாவலைப் படிக்கத் தொடங்கிய போது இடையில் புத்தகத்தை மூடிவைக்க முடியாத அளவில் தொடர்ந்து படிக்கத் தூண்டியது. குழந்தை இல்லாத ஒரு கணவன்-மனைவியின் துயரம் படிப்பவரின் உள்ளத்தை உருக்குவதாக உள்ளது. தமிழில் இந்த நாவலைப் படிக்கும் வாய்ப்பிருந்திருந்தால் இன்னும் சிறந்த இலக்கிய உணர்வுடன் படித்திருக்கலாமே என்று நாங்கள் நினைத்தோம். ஆயினும் ஆங்கில மொழியாக்கம் மூலத்தை அப்படியே பிரதிபலிப்பதாகக் கருதுகிறோம்’’ என்று தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளனர்.

**இத்தீர்ப்பின் மேலும் சில பகுதிகள் :**

‘‘நாங்கள் இந்த நாவலில் உள்ள பல பகுதிகளை இத்தீர்ப்பில் அப்படியே கொடுத்துள்ளோம். அதனால் இந்தத் தீர்ப்பைப் படிப்பவர்களும் நெஞ்சை நெகிழ வைக்கும் இந்த நாவலின் சிறப்பை உணருவார்கள். ஆயினும் நாவலை முழுமையாகப் படிக்கும் போது தான் அதன் முழு இலக்கிய உயர்வை உணர முடியும். இந்த நாவல் உங்கள் உள்ளத்தை உலுக்கும் - ஆனால் இதன் எதிரிகள் படம்பிடித்துக் காட்டும் தன்மையில் அல்ல. குழந்தை இல்லாத கணவன்-மனைவியின் துன்பங்கள், அவர்களின் சொற்கள் மூலமாக வெளிப்படுத்தியிருப்பதைப் படிக்கும் எவருடைய மனமும் துன்பத்தில் உறைந்து போகும். இதுவே இந்த நாவல் எவர் மீதும் ஏற்படுத்தும் தாக்கமாகும்.’’

‘‘நீங்கள் ஒரு நூலைப் படிக்க விரும்பவில்லையானால், அதற்கு எளிமையான ஒரே வழி அந்தப் புத்தகத்தை மூடி ஒதுக்கி வைத்துவிடுங்கள். அந்த நூலைத் தடை செய்ய வேண்டும் என்பது தீர்வல்ல. எல்லாவற்றிலும் ஆபாசத்தைப் பார்க்கும் கண்ணோட்டம் உடையவர்கள் இதைப்பற்றித் தீர்மானிக்க அனுமதிக்கக் கூடாது. சில பேர் இந்தக் கதையால் மனக் கொதிப்படைந்திருக்கிறார்கள் என்பதாலேயே, அவர்கள் பகை உணர்ச்சியுடன் செயல்படுவதற்கு உரிமை படைத்தவர்களாகிவிடமுடியாது. பழிவாங்கும் நோக்கத்துடன் மனக் கொதிப்புடன் உள்ள பிரிவினரைக் கையாள இயலவில்லை என்று அரசு கூறுவதை ஏற்க இயலாது.’’

‘‘வைகாசி விசாக நாளில் தேர்த் திருவிழாவுக்கு வருகிற பெண்கள் எல்லோருமே விபச்சாரிகள் என்று பெருமாள் முருகன் படம் பிடித்துக் காட்டியுள்ளார் என்று இந்நூலை எதிர்ப்பவர்கள் கூறுவதை, இந்த நூலைப் படிக்கும் எவரும் ஏற்கமாட்டார். அவர்களின் கருத்து,

இந்த நூலைச் சரியாகப் படித்துப் புரிந்து கொள்ளாத தால் உண்டானதாகும்.''

''மத-சாதிய ஆதிக்கச் சக்திகள் சட்டத்தைத் தங்கள் கையில் எடுத்துக் கொண்டு, புதினங்களைப் படைப் போரையும், எழுத்தாளர்களையும் அடிபணியச் செய்ய முயல்வது என்கிற போக்கு அண்மைக்காலமாக வளர்ந்து வருவது மிகவும் கவலைக்குரியதாகும்.''

இந்துத்துவத்தின் 'அறிவாளி முகமாக'த் திகழும் எஸ். குருமூர்த்தி, தினமணிக்கு எழுதிய கட்டுரையில், ''இந்த நாவலின் கருத்துகளால் மனம் புண்பட்ட கொங்கு வேளாள சமூகத்தைப் பொறுத்தவரையில் வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவதாக இத்தீர்ப்பு அமைந்திருக்கிறது; இத்தீர்ப்பு அச்சமூகத்தின் உணர்வு களைக் கருத்தில் கொள்ளாமல் 'கருத்துச் சுதந்தரம்' என்கிற கோணத்தில் மட்டுமே வழங்கப்பட்டிருக்கிறது என்பதுதான் விமர்சனத்துக்கு இடமளிக்கிறது'' என்று எழுதியிருக்கிறார். இந்துத்துவம் தவிர்த்த வேறு எந்தவொரு மாற்றுக்கருத்தையும் எதிர்த்து ஒடுக்கும் பாசிச மனப்போக்கு கொண்ட குருமூர்த்தி போன்றவர் களிடமிருந்து, வேறு எந்த எதிர்வினையை எதிர்பார்க்க முடியும்?

ஆண்-பெண் பாலியல் உறவு, குடும்பம், கணவன்-மனைவி உறவு முதலானவை மனித சமூகத்தின் நெடிய வரலாற்றில் பல்வேறு மாற்றங்களை அடைந்து வந்திருக்கின்றன. ஒருதார மணம் என்பது நிலை பெற்ற பிறகு, மக்கட்பேறு - உயர்வான ஒரு தகுதி என்றான பிறகும்கூட, சமூகத்தில் கணவன்-மனைவி உறவுக்கு அப்பால் மாற்றுக் கருத்தரிப்பு நடைமுறைகள் இருந்தன. அத்தகைய மாற்றுக் கருத்தரிப்பு முறை நிலவியதாகக் கூறும் நாட்டுப்புற வழக்காற்றின் அடிப்படையில்தான் மாதொருபாகன் கதையில் பொன்னா கருத்தரிப்பதாகப் பெருமாள் முருகன் காட்டியுள்ளார்.

இப்போது மகப்பேற்றினை அடைவதற்கான மருத்துவ அறிவியல் வியக்கத்தக்க அளவில் வளர்ந் துள்ளது. பெரியார் பல ஆண்டுகளுக்கு பரப்புரை செய்த முன் 'சோதனைக் குழாய்க் குழந்தை' (Test Tube Baby) முறை இப்போது நடப்புக்கு வந்துவிட்டது. இன்று ஒரு குறிப்பிட்ட விழுக்காட்டினர் கணவன் அல்லாத ஆணின் விந்தணுவைக் கொண்டோ, மனைவி அல்லாத பெண்ணின் சினை முட்டையைக் கொண்டோ, சிலபோது இரண்டும் அயலவருடையதாகவோ கருத் தரிக்கச் செய்து குழந்தை பெற்றுக் கொள்கின்றனர். இத்தகைய வாய்ப்புகள் இல்லாத ஒரு காலத்தில் நிலவிய மாற்றுக் கருத்தரிப்பு முறையைக் கதையில் காட்டியதற்காகப் பெருமாள் முருகனை எதிர்ப்பது அப்பட்டமான கருத்துப் பாசிசமேயாகும்.



*மதுரையில் 2015 சனவரியில் பெருமாள் முருகனை ஆதரித்து நடத்திய ஆர்ப்பாட்டம்*

**முன்பு ஊர்களில் பசுக்களைச் சினைப்படுத்த பொலி காளைகளை வளர்த்தது போல், கணவனால் குழந்தை யைப் பெறமுடியாத பெண்களுக்குக் குழந்தையை உண்டாக்குவதற்காகப் பொலிகாளை போல் சில இளை ஞர்கள் சமூக அங்கீகாரத்துடன் இருந்தனர். கணவன் வெளியே சென்ற பின் இந்த இளைஞன் தன் செருப்பு களை வீட்டின் வாயிலில் விட்டுவிட்டு உள்ளே செல்வான். கணவன் இந்தக் காலணிகளைக் கண்டதும் திரும்பிச் செல்வான் என்பதைப் பெரியார் பல தடவைகள் எழுதி யும் பேசியும் இருக்கிறார். முன்பு சமூகத்தில் இருந்த நடப்பையும் இப்போது ஏற்பட்டிருக்கிற மாற்றத்தையும் கூறுவதே பெரியாரின் நோக்கம். முப்பது ஆண்டுகளுக்கு முன் சிறந்த திரைப்பட இயக்குநர்களில் ஒருவரான மகேந்திரன் இத்தகைய மாற்றுக் கருத்தரிப்பைப் மையமாகக் கொண்டு ''பூட்டாத பூட்டு'' என்ற திரைப் படத்தை எடுத்தார். பெருமாள் முருகனின் நோக்கமும் அதுவே ஆகும்.**

**மகாபாரதத்தில், திரௌபதிக்கு அய்ந்து கணவர்கள் என்பது ஒரு காலத்தில் இருந்த நடைமுறையாகும். கணவன் மூலம் குழந்தை பெற்றுக்கொள்ளாத நிலை யில், கணவன் இறக்க நேரிட்டால், அப்பெண், கணவ னின் உடன்பிறந்தவருடன் உறவு கொண்டு குழந்தை பெற்றுக் கொள்ளலாம் என்று இந்து மத சாத்திரங்கள் கூறுகின்றன. பெருமாள் முருகன் கதையை ஆபாசம் என்று கூறினால், இந்துமதப் புராணங்களில் புழுத்து நெளியும் ஆபாசக் கதைகளுக்கு குருமூர்த்தி போன்ற வர்கள் என்ன பதில் சொல்வார்கள்?**

**எனவே இந்துத்துவ-சாதிய வெறிக் கும்பலை எதிர்த்து வீழ்த்துவோம்!1**


பகுதி II

# காஷ்மீரைப் பாருங்கள்
# நம்மால் அறியப்பட்ட காஷ்மீர்!
# நாம் அறிய வேண்டிய காஷ்மீர்!
# ஜம்மு-காஷ்மீர் அரசமைப்பும், இந்திய அரசமைப்பும்

12

2016 சூலை இதழில் ஜம்மு-காஷ்மீர் அரசமைப்புச் சட்டத்திலுள்ள,

**"The Constitution of JAMMU AND KASHMIR"**




"ஜம்மு-காஷ்மீர் அரசமைப்புச் சட்டம்" என்ற தனிச்சட்டம் போன்று, இந்தியாவிலுள்ள வேறு எந்த ஒரு மாநிலத்துக்கும், அந்த மாநிலத்துக்கான அரச மைப்புச் சட்டம் என்று ஒன்று இல்லை என்பதை, இறுதியில் குறிப்பிட்டிருந்தோம்.

அக்கட்டுரையில் ஜம்மு-காஷ்மீர் அரசமைப்புச் சட்டத்தின் "புகுமுகம் = PRELIMINARY" என்பதன் தமிழ்மொழி பெயர்ப்பையும், அதன் கீழேயே அதன் ஆங்கில வடிவத்தையும் வெளியிட்டிருந்தோம்.

இனி, அச்சட்டத்தில் உள்ள சிறப்புக் கூறுகளைப் பற்றி எழுதுவோம்.

அப்படிப்பட்ட சட்டத்தின் அட்டை முகப்பை அப் படியே ஒன்றாம் பத்தியில் வெளியிட்டுள்ளோம்.

மேலே கண்ட அரசமைப்புச் சட்டம் எத்தனைப் பகுதிகளையும் (Parts), விதிகளையும் (Articles), அட்டவணைகளையும் (Schedules) கொண்டுள்ளது என்பதை இக்கட்டுரையில் காண்போம்.

| | | |
|---|---|---|
| Part I | - | Preliminary = முகப்புரை |
| Part II | - | The State = மாநிலத்தின் தன்மை |
| Part III | - | Permanent Residents = மாநிலத்தின் நிரந்தரக் குடிகள் |
| Part IV | - | Directive Principles of State Policy = மாநில அரசின் வழிகாட்டு நெறிகள் |
| Part V | - | Executive = நிருவாக உறுப்புகள் |
| Part VI | - | The State Legislature = மாநிலச் சட்டமன்றம் |
| Part VII | - | The High Court = உயர்நீதிமன்றம் |
| Part VIII | - | Finance, Property, Contracts = நிதி, சொத்து, ஒப்பந்தங்கள் |
| Part IX | - | Public Services = பொது நிருவாகப் பணியாளர்கள் |
| Part X | - | Elections = தேர்தல்கள் |
| Part XI | - | Miscellaneous Provisions = பல் பொருள் வகையான துறைகள் |
| Part XII | - | Amendment of the Constitution = அரசமைப்புச் சட்டத்திருத்தம் |
| Part XII | - | Transitional Provisions = இடைமாறு பாட்டுக்கான துறைகள் |

மேலே கண்ட 13 பகுதிகளின் கீழ், 1 முதல் 158 விதிகள் (Articles) அடங்கியுள்ளன.

இவற்றை அடுத்து ஆறு அட்டவணைகள் (Schedules) உள்ளன.

இந்த 6 அட்டவணைகளுள், முதலாவது அட்ட வணை (First Schedule) என்பது, ஜம்மு-காஷ்மீர் அரசமைப்புச் சட்டத்தின் 1965 ஆண்டையத் திருத்தச்

சட்டத்தின் பிரிவு 16 (Section 16)இன்படி முற்றிலுமாக நீக்கப்பட்டுவிட்டது (Omitted).

அதனால், மேலே கண்ட முதலாவது அட்டவணையில் என்ன விவரங்கள் அடங்கியிருந்தன என்பதை, நான் பெற்றுள்ள "ஜம்மு-காஷ்மீர் அரசமைப்புச் சட்டத்தின்" 1970ஆம் ஆண்டைய ஜம்மு-காஷ்மீர் அரசுப் பதிப்பிலிருந்து அறிய வழிவகை இல்லை. (இப்பதிப்பை, ஜம்முவிலிருந்து 1993 செப்டம்பரில் ஒரு நண்பரால் விடுவிக்கப்பட்டு, நான் பெற்றேன்). நிற்க.

மேலே கண்ட ஜம்மு-காஷ்மீர் அரசமைப்பின் கீழ், ஜம்மு-காஷ்மீர் பட்டியல் வகுப்பினர் (Scheduled Castes) மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்க்கான (Backward Classes) இடஒதுக்கீடு பற்றிய நடைமுறை விதிகள் (Reservation Rules), 28-4-1970ஆம் நாளிட்ட அறிவிக்கையின் படி (Notification Dated 28th April 1970), அட்டவணைகள் பகுதியை அடுத்து வெளியிடப்பட்டுள்ளன.

13 உள்சாதிகளை உள்ளடக்கிய பட்டியல் வகுப்பினருக்கு, ஜம்மு-காஷ்மீர் அரசமைப்புச் சட்டத்தின்கீழ் 22-12-1956 ஆணையின்படி, அந்த நாள் முதல் இடஒதுக்கீடு வழங்கப்படுகிறது.

சமுதாயத்திலும் கல்வியிலும் பிற்படுத்தப்பட்டோருக்கான 1969ஆம் ஆண்டைய ஆய்வுக்குழு (Backward Classes Committee of 1969) அறிக்கையின்படி, 61 + 23 = 84 உள்சாதிகளை உள்ளடக்கிய பிற்படுத்தப்பட்டோருக்கு 01.5.1970 முதல் ஜம்மு-காஷ்மீர் மாநில அரசு இடஒதுக்கீடு வழங்குகிறது. இவை இருக்க.

**அரசமைப்புச் சட்டம் பற்றிய விதிகளை நாம் ஏன் படிக்க வேண்டும் என்று கருதாமலும், இவற்றைப் புரிந்துகொள்ளுவது கடினமாக உள்ளது என்று நினைத்துப் புறக்கணிக்காமலும் ஒவ்வொருவரும் துன்பப்பட்டாவது படியுங்கள். ஏன்?**

**அரசமைப்புச் சட்டத்தைப் பற்றி நாம் அறிந்திருந்தாலும், அறியாமல் இருந்தாலும், ஜம்மு-காஷ்மீர் உள்ளிட்ட இந்தியாவிலுள்ள 130 கோடி குடிமக்களுக்கும் உரிமைகளை வழங்கவும், அவர்களின் உரிமைகளைப் பறிக்கவும் முற்றதிகாரம் பெற்ற ஒரே கருவி அரசமைப்புச் சட்டம் தான்.**

**எனவே, படியுங்கள்! ஜம்மு-காஷ்மீர் மக்கள் பெற்றிருந்த சிறப்பு உரிமைகள் பலவும் பறிக்கப்பட்ட வரலாற்றையும், அதன் பின்னரும் வேறு எந்த இந்திய மாநிலத்துக்கும் இல்லாத சில சிறப்பு உரிமைகளை ஜம்மு-காஷ்மீர் மாநிலம் பெற்றிருப்பதையும் பற்றிப், படிக்கத் தெரிந்த ஒவ்வொரு தமிழரும் அறிந்துகொள்ள ஆவல் கொள்ளுங்கள்.**

**(தொடரும்)**

## மடல் பகுதி

மேன்மைமிகு ஆசான் தந்தை பெரியார் ஈ.வெ. ராவின் நெருங்கிய தொண்டர் ஐயா வே.ஆனைமுத்து அவர்கட்கு, தங்கள் கொள்கையும் கருத்தையும் எம் தலைமேல் ஏற்றுச் செயல்படும் மானமிகு நாத்திகர், எல்.சுந்தரராசன் - பெரியார் படிப்பக நிறுவனத் தலைவர் பணிவன்புடன் எழுதிய முடங்கல் : நலன்; இஃது போல் தங்கள் உடல்நலமும் மனநலமும் ஏனைய நம் குடும்பத்திலுள்ள அனைவருடைய நலனையும் அறிய மிக்க அவா.

தங்கள் பணி போல் யாரும் இந்தக் கிழத்தன்மையில் வைராக்கியமாகச் செய்யவில்லை; செய்யப் போகிறவரும் யாரும் இருக்காது என்று யாம் ஐயப்படுகிறேன்.

தாங்கள் பல வருடங்களுக்கு முன்னால், நம் சிந்தனையாளன் மாத இதழில், நம் ஆசான் ஈ.வெ.ரா. பெரியார் கொள்கையாளர்கள் எந்தக் கட்சியிலும் இயக்கத்திலும் இருந்தாலும், தங்கள் நிழற்படங் களை அனுப்பி வைக்கும்படிக் கேட்டிருந்தீர்கள். பழைய தங்கள் முகவரிக்கு யாம் முழு உருவப்படமும், முத்திரை, படமும் இருமுறை அனுப்பி வைத்தேன்,

நான் விடுதலை தலையங்கத்தில் ஐயா ஈ.வெ.ரா. சுயசிந்தனை கருத்துகளைச் சின்ன எழுத்தில் அச்சிட்டு எழுத்து சிதைந்து வருகிறது. அதைப் பொன்னெழுத்தில் பொறிக்க வேண்டாம். தெளிவாகவும், மிகுந்த பொலிவாகவும் போடச் சொல்லி பலமுறை யாம் மடல் விடுத்தேன். மிக்கப் பொறுப்பிலுள்ள மெத்தப் படித்த ஐயா, விடுதலை ஆசிரியர் கடலூர் கி. வீரமணி, M.A., B.L., செவி சாய்ப்பதில்லை. தாங்களாவது ஒரு சின்ன கை ஏடு போன்ற புத்தகமாவது வெளியிடுங்கள்.

அதோடல்லாமல், நான் என் முகவரியைத் தெளிவாக முழுமையாக அச்சிட்டு ஒட்டி அனுப்புங்கள் என்றால் அது செய்ய நேரமில்லை போலும். என்னமோ சொல் போல் இருக்கு! நாமெல்லாம் கூலிக்கா மார் அடிக்கிறோம். தாம் கொண்ட கொள்கைக்கு உயிர்விடத் தயார் நிலையில் இருக்கிறோம். வணக்கம் பல கோடி.

தங்கள் செய்ந்நன்றி மறவாத **எல். சுந்தரராசன்,**
இருமூளை, மேலவெளி.

## வெண்மணி பிறந்தநாள்

கோவை சூலூர் ம. சரவணக்குமார் - தா. ராசலட்சுமி இணையரின் அன்பு மகள் 7ஆம் வகுப்பு மாணவி, **ரா.ச.வெண்மணியின்** 13ஆம் பிறந்த நாள் வரும் 12-8-2016 வெள்ளியன்று வர இருப்பதன் மகிழ்ச்சியாக, "சிந்தனையாளன்" வளர்ச்சி நிதியாக ரூ.1,000 வே. ஆனைமுத்துவிடம் 23.7.2016இல் வழங்கினார். வாழ்க வெண்மணி!

# சுயமரியாதை உள்ள தமிழர்கள் வடமொழி இதிகாசங்களைப் படிக்கலாமா?

- ஈ.வெ.ரா.

இந்தி என்பது பார்ப்பன ஆதிக்கத்திற்காக ஏற்படுத்தப்பட்ட புரட்டு என்பதைத் தவிர அதில் எவ்வித உண்மைத் தன்மையும் இல்லை என்பதை அறிவுள்ள எவரும் ஆட்சேபிக்க மாட்டார்கள் என்றே கருதுகின்றோம். இந்திய நாட்டில் முப்பத்தைந்தரை கோடி மக்கள் இருந்தாலும் பல பாஷை, பல மதம், பல நாகரிகம், பல நடை, உடை, பாவனைகளாக இருந்து வருவதை யாவரும் மறுக்க முடியாது. அப்படி இருந்தாலும் மக்களுக்குள் மதத்தின் பேராலும், சாதியின் பேராலும் பாஷையின் பேராலும் போட்டிகள் நடந்து வருவதும் மறுக்கக் கூடியவை அல்லவென்றே சொல்லுவோம்.

இந்த நிலைமையிலுள்ள சமூகங்களைப் பிரிவினைக்கு ஆதாரமாய் இருப்பதைக் கண்டுபிடித்து அவைகளை ஒழிக்க முயற்சிக்காமல் கண்மூடித்தனமாய் எல்லோரையும் இந்தி கற்றுக்கொள்ள வேண்டுமென்று அரசியலின் பேரால் நிர்ப்பந்திப்பது எப்படி ஒழுங்காகும்? என்று கேட்கின்றோம்.

இந்தி என்பது அநேகமாக வடமொழியின் சார்போ அல்லது திரிபோ ஆகும். இந்த நாட்டில் ஆரியர்கள் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்ட வடமொழிக்கு உயர்வு கொடுக்கப் பல வழிகளிலும் சூழ்ச்சி செய்து உலக வாழ்க்கையில் ஒரு ஒடிந்து போன குண்டுசிக்கும் பயன்படாத பாஷையாகிய அவ் வடமொழிக்கு எவ்வளவு பணம் செலவழிக்கப்பட்டு வருகின்றது என்பது வெகுநாளாகத் தமிழ்மக்கள் கவனித்துவரும் சங்கதியாகும்.

இப்போது மறைமுகமாய் வடமொழியை ஆதரிக்கவும், ஆரிய நாகரிகம் சமயக்கொள்கை ஆகியவைகளை நிலைநிறுத்தவும் இந்தியை அரசியல் விஷயமாக ஆக்கி, அதைக் கதரைப் போல்- ஏன் கதரைவிட அதிகமாக ஒவ்வொருவருக்குள்ளும் புகுத்தப் பார்ப்பது எவ்வளவு வஞ்சமான காரியம் என்பதை நமது சோணகிரிகள் அநேகர் இன்னும் உணரவே இல்லை. தமிழ்ப் பண்டிதர்கள் சாம்பலையும் மண்ணையும் குழைத்து சூடுபோட்டதுபோல் மேலெல்லாம் தீட்டிக் கொண்டு சிவ, சிவ, சிவ என்பதற்கும் ராம, ராம, ராம என்பதற்கும் உதவுவார்களே தவிர, மற்றபடி நமது மக்கள் மீது அனாவசியமான ஒரு பாஷை சூழ்ச்சித் திறத்தில் சுமத்தப்படுகின்றதே என்கின்ற அறிவும், கவலையும் சிறிதும் கிடையாது என்றே சொல்ல வேண்டியிருக்கின்றது. இன்றைய தினம் இந்திய மக்களுக்கு அவரவர்கள் சொந்த பாஷை தவிர வேறு பாஷை தெரிய வேண்டுமானால் அது இங்கிலீஷ் பாஷை என்றே நாம் தைரியமாய்ச் சொல்லுவோம்.

உலகமே தங்கள் கிராமம் தான் என்று எண்ணிக் கொண்டிருந்த காலம் மலையேறி இப்போது நிலப் பரப்பு, நீர்ப்பரப்பு முழுவதும் தெரிந்து 200 கோடி மக்களையும் சகோதரர்களாகப் பாவித்து வாழ வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும்போது, உலக, செலாவணி பாஷை எதோ அதை மனிதன் அறியாமல்-கபீர்தாஸ் இராமாயணத்தைப் படிக்க வேண்டிய இந்தி பாஷை எதற்குப் படிக்க வேண்டும் என்று கேட்கின்றோம்.

தமிழ் மக்களுக்குச் சுயமரியாதை என்பது பல துறைகளில் வரவேண்டியிருப்பதை இந்தி ஆதிக்கமும் இனியும் அதிகமாய் வலியுறுத்துகின்றது என்றே சொல்லுவோம். தமிழ் பாஷை பாண்டியத்தியம் என்பது இப்போதே அநேகமாய் பார்ப்பனர்களிடமேயிருக்கின்றது. தமிழ் பாஷையின் சங்கத் தலைவர்கள் பார்ப்பனர்களாய் இருக்கின்றார்கள் என்பதோடு, இந்தப் பார்ப்பனர்கள் தமிழர்களை இந்தி படிக்கக் கட்டாயப் படுத்துகின்றார்கள் என்றால் தமிழ் பாஷைக்காரர்களின் சுயமரியாதை எவ்வளவு என்பதைத் தமிழர்களே உணர்வார்களாக!

அரசியல் தத்துவத்தின் பயனாய்த் தமிழ்நாட்டுப் பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாதார் பணத்தில் இந்தி கற்று இந்தியத் தலைவர்களாகிய வடநாட்டுத் தலைவர்கள் இடமெல்லாம் பார்ப்பனர்களே போய் காரிய தரிசிகளாய் அமர்ந்து, அவர்களே தென்னாட்டுப் பிரதிநிதிகளாகி அவர்களது ஆதிக்கத்திற்கே இந்திய அரசியலைத் திருப்பிப் பயன்படுத்திக் கொண்டு வருகின்றார்கள்.

**ஆகவே அரசியல் துறையில் இருக்கும் பார்ப்பனரல்லாதாருக்கும் அறிவு இருந்தாலும் அதைப் பார்ப்பனர்களுக்குத் தக்க விலைக்கு விற்றுவிட்டார்கள் என்றாலும், அரசியலில் இல்லாத பார்ப்பனரல்லாதார்கள் அறிவை யாவது தக்க வழியில் உபயோகிக்கத் தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டாமா? என்று கேட்கின்றோம்.**

**- 'குடிஅரசு', துணைத் தலையங்கம், 10.5.1931**

இந்நாட்டில் பார்ப்பனியம் தாண்டவமாடத் தொடங்கிய காலம் முதல் ஏதாவது ஒரு வகையில் புராணங்களை

யும், பார்ப்பனியங்களையும் பரப்பும் நோக்கத்துடனேயே எல்லாப் பாஷைகளும் ஆதிக்கம் பெற்று வந்திருக்கின்றன. உலக வழக்கில் ஒரு சின்னக் காசுக்கும் பயன்படாத சமஸ்கிருத பாஷைக்கு இன்றைய தினம் இந்நாட்டில் இருக்கும் ஆதிக்கமும், அதற்கெனவே பல ஏற்பாடும், செலவும், மெனக்கேடும் பார்ப்பனியத்தைப் பரப்பவே செய்யப்பட்டு வருகின்றன. சமஸ்கிருத காலேஜ், சமஸ்கிருத பாடசாலை மற்றும் சமஸ்கிருத வளர்ச்சிக்கு ஏற்ற முயற்சிகள் முழுவதும், சமஸ்கிருத வாழ்க்கைக்குச் சிறிது பாகமும் வேண்டிய அவசியமில்லாத மக்களின் செலவிலேயே நடைபெற்று வருகின்றன. இது இந்த நாட்டு மக்களின் சுயமரியாதையற்ற தன்மைக்கு ஒரு பெரும் உதாரணமாகும்.

இதைத் தட்டிப்பேச இன்றைய சட்டசபை, மந்திரி சபை ஆகியவைகளில் ஒரு சிறு மூச்சு விடவும் ஆள்கள் இல்லை. போதாக்குறைக்கு இன்று இந்தி பாஷை ஒன்று புதிதாக முளைத்து இந்திய மக்கள் மீது ஆதிக்கம் செலுத்த முயற்சிகள் வெகு பலமாய்ச் செய்யப்பட்டு வருகின்றது. இது இந்நாட்டு மக்களுக்கு பாஷை விஷயத்திலும் சுயமரியாதையில்லையென்பதற்கும் ஒரு உதாரணமாகும்.

தமிழ்நாட்டுக்கு இந்தி என்ன அவசியத்திற்கு என்று கேட்க, ஒரு தேச பக்தராவது இன்று தேசிய வாழ்வில் இல்லை. தேச பக்தக் குழாம் பெரிதும் கூலிக்கு மாரடிப்பவர்களாலேயே நிரப்பப்பட்டுவிட்டதால் பார்ப்பனத் தலைவர்களுக்கும், பார்ப்பனர்களால் பிடித்து வைக்கப்பட்ட தலைவர்களுக்கும் அடிமைகளாய் இருந்து அவர்கள் உபதேசித்த தேசிய மந்திரத்தை உருப்போட்டு, ஜெபித்து வயிறு வளர்ப்பதைவிட வேறு யோக்கியதை இல்லாமல் போய்விட்டது.

இந்த நாட்டில் இன்றைய தமிழ்ப் பாஷையே தமிழ் மக்களின் சுயமரியாதைக்கும், மனிதத்தன்மைக்கும் சுதந்தரத்திற்கும் நேர் விரோதமாகவிருக்கின்றது என்பதைப் பல தடவை சொல்லி வந்திருக்கின்றோம். இன்றைய தமிழ்ப் பாஷையில் பெரிய இலக்கியமாய் பாவிக்கப்படுவதாகிய கம்பராமாயணம், பெரிய புராணம் ஆகிய இவ்விரண்டும் கூட-மானமுள்ள, சுயமரியாதை வீரம் ததும்பிய இரத்த ஓட்டமுள்ள, தமிழ் மக்களால் சுட்டுப் பொசுக்க வேண்டிய புத்தகமாகும். தமிழ் மக்கள் என்று சொல்லிக் கொள்ளுகின்றவர்களுக்குப் போதிய மான உணர்ச்சி இல்லாததாலேயே அவற்றிற்குத் தமிழ்நாட்டில் இன்னமும் இடமிருக்க வேண்டியதாகிவிட்டது. இன்றைய தினம் தமிழ் படித்து. தமிழ்ப் பாஷையில் பற்றுக்கொண்டு, தமிழைத் தாய்ப் பாஷையாய்க் கொண்ட ஒருவனாவது தன்னுடைய தமிழ்த்தாய் வடமொழிப் புருஷனுடன் சோரத்தனம் செய்து கொண்டிருக்கின்றாளா இல்லையாவென்றும், பிள்ளைகளையெல்லாம் கூட வடமொழிப் புருஷனுக்கு உதவும்படியாகவே அவனைப் போலவே பெற்றுக்கொண்டுமிருக்கின்றாளா? இல்லையாவென்றும் அப்படிச் சோரத்தனம் செய்ததில். முதல் தரப்பிள்ளைகளாயும் சிரஞ்சீவிப் பிள்ளைகளாயும் இந்தக் கம்பராமாயணமும் பெரிய புராணமும் இருக்கின்றதா இல்லையா என்றும் கேட்பதோடு, இந்த வடமொழிப் புருஷனுக்கு தங்களது தமிழ்த்தாயைக் கூட்டிவிட்டுப் பெருமை யடைவதன் மூலமே தமிழ்ப் பண்டிதர்கள் இன்று உயிர் வாழ்ந்து ஜீவனம் செய்து வருகின்றார்களா இல்லையாவென்றும் கேட்கின்றோம்.

**(- 'குடிஅரசு', தலையங்கம், 14.6.1931)**

## காஞ்சி அ. இளமாறன் பிறந்த நாள் விழா




*காஞ்சி மாவட்ட மா.பெ.பொ.க. செயலாளர் சி. நடராசன்-உசாராணி இணையரின் பெயரன் ந.அறிவுச்செல்வன்-ரேகா இணையரின் மகன் **அ.இளமாறன்** முதலாவது பிறந்த நாள் விழா 23.7.2016 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு, காஞ்சிபுரம் வைகுண்டபெருமாள் வடக்கு மாடவீதி ராதா பார்ட்டி அரங்கத்தில் சிறப்புற நடைபெற்றது. திருக்குறள் பேரவைத் தோழர் காஞ்சி குறளமிழ்தன் தொடக்க உரையாற்றினார். மீ.சோ. தமிழ்முகில் திருக்குறள் ஓதி விழாவினைச் சிறப்பித்தார். இதன் மகிழ்வாக சிந்தனையாளன் வளர்ச்சி நிதியாக ரூ.500/- வழங்கப்பட்டது.*

# ஆரிய மத வண்டவாளம் :
# சைவ, வைணவ, ஆதாரங்கள் சொல்லுவது என்ன?

**சித்திரபுத்திரன் என்ற பெயரில் ஈ.வெ.ரா.**

**இத்**தலைப்பில் சென்ற வாரம் சைவ, வைணவர்கள் ஒருவரை ஒருவர் எவ்வளவு இழிவுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பற்றி, இராமாயணத்தில் உள்ளபடியும், காஞ்சிப் புராணத்தில் உள்ள படியும் ஆதாரங்களோடு எழுதப்பட்டிருந்ததை வாசகர்கள் படித்தறிந்திருக்கக் கூடும்.

இந்த வாரம் வைணவர்களுக்கு மிகவும் முக்கியமான சாஸ்திர ஆதாரமும் பதினெட்டுப் புராணங்களில் அதி முக்கியமானதுமான பாகவதத்தில் இருந்து சிவனை வைணவர்கள் ஆபாசமாய் இழிவுபடுத்தியிருப்பதற்கு மற்றொரு சேதி எடுத்துக்காட்டப்படுகிறது. அதாவது ஸ்ரீமத் பாகவதம் பண்டிதர் இஞ்சிக்கொல்லை, ஆர். சிவராம சாஸ்திரியார், அவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப் பட்டது. 1912ஆம் வருஷம் சென்னை புரோகரிசிவ் பிரசில் அச்சடிக்கப்பட்டதுமான பாகவத தமிழ் வசனம் என்னும் புத்தகத்தில் 8ஆவது ஸ்கந்தம் 12ஆவது அத்தியாயம் 846, 847, 848, 849-வது பக்கங்களில் “பரமசிவன் விஷ்ணுவின் மோகினி ரூபத்தைப் பார்க்க விரும்பியது” என்ற தலைப்பில் இருப்பதாகும். சற்று தயவு செய்து இதையும் படித்துப் பாருங்கள்.

என்னவென்றால், சிறீ மகாவிஷ்ணு மோகினி வேஷங் கொண்டு அசுரர்களை மோகிக்கும்படிச் செய்து ஏமாற்றி, தேவர்களுக்கு அமிர்தத்தைக் கொடுத்தார் என்கின்ற சங்கதியைப் பரமசிவன் கேள்விப்பட்டு, கைலாயத்தில் இருந்து பார்வதியுடன் விஷ்ணுவிடம் வந்து, விஷ்ணுவை வணங்கி-ஜகத்காரணரே, தேவ தேவரே, நீரே பூரணர். நீரே நித்தியர், உம்மைவிட வேறு கடவுளே இல்லாதவரே (என்றும் இன்னும் பல வாறாகவும் சொல்லிப் பிரார்த்தித்ததாக இரண்டு பக்கம் எழுதப்பட்டிருக்கிறது) என்று பிரார்த்தித்து விட்டு, தேவாதி தேவரே தங்களுடைய எல்லா அவதாரத்தையும் தெரிசித்தேன், மோகினி வேஷத்தை மாத்திரம் பார்க்க வில்லை. அதனைப் பார்க்க வந்தேன், காட்டி அருள வேண்டுமென்றார்.

அதனைக் கேட்ட மகாவிஷ்ணுவானவர், அது அசுரர்களை ஏமாற்ற எடுத்த வேஷமானதால் அதைக் காண்பவர்களை மோகிக்கச் செய்யும். மன்மதனை அதிகப்படுத்தும், சாமிகள்தான் அதைத் தோத்திரஞ் செய்வார்கள் என்று சொல்லி மறைந்து, ஒரு நந்தவனத்தில் பந்தாடிக் கொண்டிருக்கும் ஒரு அழகிய பெண்ணாகத் தோன்றினார்.

சிவனும் பார்வதியும் நான்கு புறமும் விஷ்ணுவைத் தேடிப் பார்த்துக் காணாமையால், நந்தவனத்தைப் பார்க்க, அதில் ஒரு பெண் வந்து விளையாடிக் கொண்டிருப்பதைப் பார்த்து, சிவன் புத்தி கலங்கி, பார்வதியும் சிவகணங்களும் பக்கத்தில் இருப்பதைக்கூட நினைக்காமல் அவளை (மோகினியை) பார்த்தார். மோகினி வேஷம் போட்ட பெண், பந்தடிக்கும் கவனத்தில் தனது ஆடை (சேலை)யை மெல்ல நழுவ விட்டுவிட்டாள். அதைப் பார்த்த பரமசிவனுக்கு காமம் அதிகரித்துவிட்டது. மன்மதன் தனது முழு சக்தியையும் பிரயோகித்தான். பார்வதி பார்த்திருக்கப் பார்த்திருக்க வெட்கமில்லாமல் சிவன் மோகினியின் பின்சென்றான். மோகினி (விஷ்ணு) ஓடி ஒரு மரத்தில் மறைந்து கொண்டாள்.

சிவன் ஓடோடி அவளைப் பிடித்தான். அவள் திமிரிக்கொண்டு வேகமாக ஓடினாள். சிவன் வேகமாக ஓடி அவள் மயிரைப் பிடித்து இழுத்து, இரு கைகளால் ஆலிங்கனம் செய்து கொண்டு பலவந்தம் செய்தான்.

அவள் அவிழ்ந்த தலைமயிருடன் ஆடையின்றியே சிவனை வஞ்சித்து நழுவிக் கொண்டு ஓட்டமெடுத்தாள்.

சிவன் புத்தி இழந்து, காமங்கொண்ட ஆண் யானையின், இந்திரியம் கீழே சிந்தப்படுவது போல் தனது இந்திரியத்தை நிலத்தில் சிந்த விட்டுக் கொண்டே பின் தொடர்ந்தார். சிவனுக்கு இந்திரியம், வெளிப்பட்டவுடன் மோகினி (விஷ்ணு) மறைந்து விட்டாள். சிவன் ஏமாந்தான்.

**அந்த இந்திரியம் எங்கு எங்கு நிலத்தில் விழுந்ததோ அந்த இடம் எல்லாம் தங்கம் வெள்ளி விளையும் சுரங்க பூமியாக ஆகிவிட்டன.**

**அந்த இந்திரியம் எங்கு எங்கு காடுகளிலும், வனங்களிலும், மலைகளிலும், நதிகளிலும், குளங்களிலும் விழுந்ததோ அங்கெல்லாம் சிவனின் சான்னித்தியம் விளங்குகிறது. மகரிஷிகளும், தேவர்களும் அங்கு விளங்குகிறார்கள்.**

சிவன் இம்மாதிரி தனது இந்திரியம் சிந்தப்பட்ட பின் புத்தி வந்து, நான் விஷ்ணுவினால் ஏமாற்றப்பட்டு மூடனாக்கப்பட்டேனே என்று கருதியதுடன், மகாவிஷ்ணு

வின் மகிமை தெரிந்தவரானதால் இது சகஜம்தான் என்று திருப்தியடைந்தார்.

என்பதாக, இந்தப்படி பாகவத மூலத்தின் 8ஆவது ஸ்கந்தம் 12ஆம் அத்தியாயம் 1 முதல் 37ஆவது சுலோகம் வரை உள்ள விஷயத்தின் மொழிபெயர்ப்பு என்று குறிப்பிட்டிருக்கிறது. இது இப்படியிருக்க இந்த பாகவத விஷயங்களைத் தமிழில் கவியாகப் பாடப் பட்ட பாகவத புராணம் என்னும் நூலிலும், மோகினி உருக்காட்டிய அத்தியாயம் பாட்டு 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15, 16, 17, 18, 19, 20, 21 வரை இன்னும் மோசமாகப் பாடப்பட்டிருக்கிறது.

அதாவது, விஷ்ணுவின் மோகினி அவதாரத்தைப் பார்க்க, சிவன் பார்வதியுடன் கயிலையிலிருந்து வைகுண் டத்துக்குச் சென்று, விஷ்ணுவை நமஸ்கரித்து, எமது சுவாமியே என்று வணங்கி, மோகினி வேஷத்தைக் காட்டு என்றான். விஷ்ணு பெண் உருவத்தை எடுத்தான்.

சிவனுக்கு காமம் ஏற்பட்டு, பொலிகாளை எருது போல் பெண்ணின் கிட்டப்போனான்,

விஷ்ணு ஓட்டம் காட்டினான். சிவன் புத்தி கலங்கி தன் இடுப்பில் உள்ள ஆடை (புலித் தோல்) அவிழ்ந்து கீழே விழுந்ததும் கவனியாமல், ஓடி எட்டி பெண்ணின் மயிரைப் பிடிக்க முயன்றான். முடியவில்லை. மோகத் தால் சிவனின் இந்திரியம் கொட்டிப் போய்விட்டது.

பிறகு சிவனுக்குப் புத்தி வந்து, சுவாமி உன் பெருமையை அறியாமல் மோசம் போனேன் என்று விஷ்ணுவுக்கு நமஸ்காரம் செய்தான். உடனே விஷ்ணு சங்கு சக்கரத்துடன் காட்சியளித்து மறைந்தார்.

**சிவன் கைலாயத்துக்குச் சென்று விஷ்ணுவின் பெருமையைப் பார்வதிக்குச் சொன்னான், என்று இருக்கிறது. சிவனும், விஷ்ணுவும் இடுப்பில் துணி இல்லாத ஆணும், பெண்ணுமாய் தெருவில் ஓடிய ஓட்டத்தைக் கண்ட வைகுண்டத்தில் உள்ள ஆண் களும் பெண்களுமான தேவர்கள், முனிவர்கள் நம் வைகுண்டப் பிராப்த்தி அடைந்தவர்கள், சிரிக்காவிட்டாலும், இந்தக் கதையைப் படித்து நடித்து காலட்சேபம் செய்து ஸ்ரவணானந்தம் செய்து வாழும் சைவ வைணவ பக்தர் சிரிக்கா விட்டாலும், பகுத்தறிவும், சுயமரியாதையும் இல்லாத மானமற்ற கூலிப் பண்டிதர்கள் சிரிக் காவிட்டாலும், மற்ற உண்மைத் தமிழ் மக்கள் இப்படிப்பட்ட ஆரிய மதத்தையோ, இந்து மதத் தையோ, சைவ, வைணவ மதங்களையோ பற்றி என்ன நினைப்பார்கள் என்று கேட்பதே இந்த வியாசத்தின் இலட்சியமாகும்.**

*06.11.1943 குடிஅரசிலிருந்து...*

## செ. அய்யனார் - கோ. தமிழரசி சாதி மறுப்புத் திருமணம்

உடையார்பாளையம், வல்லம் இலக்குமணன் - தனத்தம்மாள் மகன் வழிப் பேத்தியும், கேரளா இராமச்சந்திரன் - சாந்தம்மாள் மகள் வழிப் பேத்தியும், திருச்சி, உய்யக்கொண்டான் திருமலை வனச்சரகர் இல. கோவிந்தசாமி - கோ. ஜெயஸ்ரீ ஆகியோரின் இளைய மகளுமான **தமிழரசி;** திருக்கோவிலூர், ஒட்டம்பட்டு, வீ. செயராமன் - வசந்தா ஆகியோரின் மகன் **அய்யனார்** ஆகிய மணமக்கள், 10-7-2016 ஞாயிறு காலை 10 மணிக்கு, உய்யக்கொண்டான் திருமலை, யோகலட்சுமி திருமண மண்டபத்தில், மா.பெ.பொ.க. பொதுச் செயலாளர் வே.ஆனைமுத்து தலைமையில், சாதி மறுப்பு வாழ்க்கை ஒப்பந்த உறுதி மொழியை ஏற்றனர்.

மணமகள் தந்தை வழிப் பாட்டி தனத்தம்மாள், தாய்வழிச் சிறிய பாட்டனார் கேரளா இராதாகிருஷ் ணன் குரூப், மணமகனின் தாய் வசந்தா, ஒட்டம் பட்டு ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் நா. முனுசாமி, வல்லம் அ.வே. மாயகிருஷ்ணன், கு. விமல்குமார்-கோ. விடுதலைச் செல்வி இணையர்; ஆகியோர் முன்னிலை ஏற்றனர். திருச்சி மாவட்ட மா.பெ.பொ.க. செயலாளர் இரா. கலியபெருமாள், “நாளை விடியும்” ஆசிரியர் பி.இரெ. அரசெழிலன், தி.க.மு. நற்குணம், மகாலிங்கம் ஆகியோர் வருகை தந்து சிறப்பித்தனர். மணமக்கள் “சிந்தனையாளன்” வளர்ச்சி நிதியாக ரூபா 1,000 வழங்கினர்.

வாழ்க்கை ஒப்பந்த விழா பகல் 12 மணிக்கு நிறைவெய்தியது.

## தில்லிச் செய்தி

புதுதில்லி பெரியார்-அம்பேத்கர் தொண்டு நிறு வனத்தின் உறுப்பினர்கள் பா.இராமமூர்த்தி, வழக்கு ரைஞர் லெனின் வினோபர் ஆகிய இருவரும் புதிததாக அமைச்சர் பொறுப்பேற்றுள்ள மய்ய அரசின் சுகாதாரத்துறை இணை அமைச்சர் அனிதா படேல் அவர்களை 8-7-2016இல் சந்தித்து அனைத் திந்திய ஒடுக்கப்பட்டோர் பேரவையின் புரவலர்-தலைவர் வே.ஆனைமுத்து அவர்களுடைய வாழ்த் துச் செய்தியை நேரில் அளித்ததுடன் தங்களுடைய வாழ்த்துகளையும் தெரிவித்தனர். கடந்த ஆண்டு புதுதில்லியில் ஆனைமுத்து கூட்டியிருந்த நாடாளு மன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் அனிதா படேல் கலந்து கொண்டு உரையாற்றிய நிகழ்வையும் அப்போது அவ்விருவரும் நினைவுகூர்ந்தனர்.

செய்தி : கலசம்

# தாய்மொழியும் சாஸ்திரியாரும்

**க**ல்வி கற்பதினால் மக்களுக்கு அறிவு வளரும்; அறிவு வளருவதினால் மக்கள் வாழ்வு உயரும்; மக்கள் வாழ்வு உயர்வதினால் நாடு சிறப்புறும். இதைத்தான் நாம் அனுபவத்தில் பார்க்கிறோம். உலகில் எந்த நாடு இன்று சிறப்புற்று விளங்குகிறதோ அதற்கு எது காரணமாக இருந்தது என்று எண்ணிப் பார்த்தால், அந்நாட்டு மக்களின் கல்வி வளர்ச்சியென்பதே புலனாகும்.

அதுபோலவே, உலகில் எந்த நாடு இன்று பின்னணியிலிருந்து வருகிறதோ, அது முற்போக்கடைய வேண்டுமென விரும்பினால், அந்நாட்டின் கல்வி வளர்ச்சியடைய வேண்டும். ஒரு நாடு கல்வியில் வளர்ச்சிடைய வேண்டுமானால், அது அந்நாட்டின் தாய்மொழியினால்தான் முடியும். பிறநாட்டின் அறிவு நுட்பங்களை அறிந்து வந்து, தங்கள், தங்கள் தாய்மொழியின் வாயிலாக எழுதி, தங்கள் நாட்டு மக்களை அறிவு பெறச்செய்து, இன்று ஒப்புயர்வற்றவர்களாகச் செய்திருப்பதைத்தான் உலகில் பார்க்கிறோம். தாய்மொழியொன்றிருக்கப் பிற மொழியினால் அறிவைப் புகட்டுவதோ அல்லது தாய் மொழியின் மூலமாக அறிவை புகட்டுவது கஷ்டமான காரியமென்றோ எந்த நாடும் கருதி, தாய்மொழி மூலமாக அறிவை வளர்க்கத் தயங்கினதில்லை.

இந்நாட்டில்தான், தாய்மொழி மூலம் அறிவை புகட்டுவது அவ்வளவு எளிதல்லவென்றும் அவசரப் படக் கூடாதென்றும் கூறப்படுகிறது. உண்மையிலே இது விசித்திரமான வாதமாகும். உலகில் எல்லா நாடுகளிலும் 100க்கு 60, 70, 90 என்ற விகிதத்தில் கல்வி கற்றவர்களாக இருக்க, இந்நாட்டில் மட்டும் 100க்கு 8 அல்லது 10 விகிதம் கல்வி கற்றவர்களாக இருக்கக் காரணம், தாய்மொழி மூலம் கல்வி புகட்டப்படாததே யாகும். தாய்மொழி மூலம் கல்வி புகட்டப்பட்டிருந்தால், இன்று இந்நாட்டின் மக்களின் அறிவு வளர்ச்சி இந்நிலையிலா இருக்கும்?

உண்மை அவ்வாறு இருக்க, "ஆரம்பக் கல்வியிலிருந்து பாடங்களைத் தாய்மொழியில் போதிப்பது என்பது முடியாது. இது மிகவும் அவசரமான காரியமாகும். தேசியக் கல்விக்குப் பாதகம் விளையாத விதத்தில் இந்த சீர்திருத்தத்தைப் படிப்படியாக அமலுக்குக் கொண்டுவர வேண்டும்" என்று மகாகனம் வி.எஸ். சிறீனிவாச சாஸ்திரியார் லயோலா காலேஜ் தர்க்கக் கூட்டத்தில் 28ஆம் தேதி மாலை பேசியிருக்கிறார்.

ஆரம்பக் கல்வியிலிருந்து பாடங்களைத் தாய்மொழியில் கற்பிப்பது முடியாதென்று இந்நாட்டில் இவரைப் போன்றாரைத் தவிர வேறு நாடுகளில் யாரேனும் வெட்கமின்றி சொல்லத் துணிவாரா? பாடங்கள் எனப் படுவது அறிவு. அறிவு வளர்ச்சி தாய்மொழியின் மூலமல்லாமல் வேறு எந்த மொழியின் மூலம் புகட்டுவது? இதை அறிஞர் எவரும் ஒப்புக் கொள்ளார் என்றே கருதுகின்றோம்.

கனம் சாஸ்திரியார் இவ்வாறு கருதுவதற்குக் காரணம் அவரது பேச்சிலே அடுத்தபடியாகக் காணப்படுகிறதை யாவரும் அறியலாம்.

அதாவது தேசியக் கல்விக்குப் பாதகம் விளையாத விதத்தில் இந்தச் சீர்திருத்தம் படிப்படியாக அமலுக்குக் கொண்டுவர வேண்டும் என்று குறிப்பிட்டிருப்பதே யாகும். இதனால், தாய்மொழியில் எல்லாப் பாடங்களும் கற்பிக்க ஆரம்பித்துவிட்டால், தாய்மொழியின் மூலமாக மக்கள் அறிவைப் பெற்றுவிட்டால், ஆரியர்கள் காணும் கனவாகிய தேசியக் கல்விக்கு இடமேயில்லாது போய் விடும் என்பதுதான், இவரது அச்சத்திற்குக் காரணமாகும்.

**'தேசியம்' என்ற பெயரால், பல காலமாக சுதந்தரத்துடன் விளங்கிய மக்களை, தனி கலை, மொழி, நாகரிகம் முதலியவைகளில் தலைசிறந்து விளங்கும் தனி இன மக்களை ஆரியத்திற்கும் இந்து ஆதிக்கத்திற்கும் அடிமைப்படுத்தி வைக்க முயற்சிப்பது போல், தேசியக் கல்வியின் பெயரால் அந்தந்த இன மக்கள் அவரவர்களுடைய தாய் மொழியில் அறிவுபெற்று வாழ்க்கை உயர்வடைந்து நாடு சிறப்புறுவதைத் தடுத்து ஆரிய ஆதிக்கத்திற்கு அடிமையாயிருந்து வந்தது போல் இனியும் பல காலம் இருந்து வரட்டும் என்பதைத் தவிர இதில் வேறு என்ன அர்த்தமிருக்க முடியும்?**

**தாய்மொழியின் மூலம் எல்லாப் பாடங்களையும் கற்பிக்காத நாடு ஒரு நாளும் முன்னேற முடியாது. உதாரணத்திற்கு சீனாவையும் சப்பானையும் எடுத்துக் கொள்ளுங்கள். சப்பான், அய்ரோப்பிய நாட்டு அறிவை, தனது தாய்மொழியில் கற்பித்துத் தனது மக்களை அறிவு பெறச் செய்ததினால் தான் இன்று ஒரு வல்லரசாக விளங்குகிறது. சீனா அதனைச் செய்யாததனால் வல்லரசுகளின் தயவை நாடி நிற்க வேண்டிய நிலையிலிருக்கிறது. தாய்மொழியை உயிருடன் பெற்றிருக்கும் எந்த நாட்டு மக்களும் சாஸ்திரியார் வாதத்தை ஒப்புக்கொள்ளார். தமிழகம் தனி நாடாகப் பிரிக்கப்படாதவரை தாய்மொழி வளர்ச்சிக்கு மட்டுமல்ல-எடுத்ததற்கெல்லாம் தேசியத்தைக் குறுக்கே கொண்டுவந்து போட்டு முட்டுக் கட்டையிடுவார்கள் என்பதை இதிலிருந்தாவது தமிழர்கள், திராவிடர்கள் எண்ணிப் பார்ப்பார்களாக!**

**- "விடுதலை", 1.2.1943**

# தந்தை பெரியாரும் பெருந்தலைவர் காமராசரும்

- குட்டுவன்

சமூக மாற்றத்திற்கும் ஆக்கத்திற்கும் தந்தை பெரியாரின் 70 ஆண்டு காலப் பணிகள் ஈடு இணை யற்றவையாகும். பெரியாரின் சமூக அரசியல் கணிப்புகள், அவரின் பட்டறிவு, பகுத்தறிவு போன்ற விழுமியங்கள் இன்று பெரிதும் போற்றப்படுகின்றன; ஆய்வுக்கு உட் படுத்தப்படுகின்றன.

20ஆம் நூற்றாண்டில் ஆசிய ஆப்பிரிக்க தென் அமெரிக்க நாடுகளில் விடுதலைப் போர்கள் உச்சத்திற்குச் சென்றன. 1940க்குப் பிறகு பல நாடுகள் காலனி ஆதிக் கத்திலிருந்து விடுதலை பெற்றன. இந்த விடுதலைப் போராட்டங்களை வழி நடத்திய பல தலைவர்களின் எண்ணங்கள் 1990ஆம் ஆண்டிற்குப் பிறகு அறிமுகப் படுத்தப்பட்ட தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கல், உலகமய மாக்கல் நடவடிக்கைகளாலும், அதனை ஒட்டிய அரசியல் மாற்றங்களாலும் பல பின்னடைவுகளைச் சந்தித்தன, சந்தித்தும் வருகின்றன. இச்சூழலில் தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர் ஆகியோரின் கருத் தாழமிக்க சிந்தனைகள் இன்றளவும் இந்தியத் துணைக் கண்டத்திற்குத் தேவைப்படுகிற அளவிற்குத் தனித்தன் மையோடு விளங்குகின்றன. பொருளாதாரச் சரிவு களுக்கு இடையில் மத-சமூக ஆதிக்கப் பிற்போக்குச் சக்திகள் இன்று செல்வாக்குப் பெற்று வருவதற்கு இந்த இரு சிந்தனையாளர்களின் கருத்துகள் சரியான தீர்வாக அமைகின்றன.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் தந்தை பெரி யாரின் பங்கு அளப்பரியதாகும். காங்கிரசு இயக்கத்தில் அவர் பங்கு கொண்டபோது மிகத் தீவிரமான கருத்து களை விடுதலை இயக்கம் தொடர்பாக முன்வைத்தார். காந்தியின் வழியை ஏற்றுக்கொண்டு மதுவிலக்கு, கதர் பரப்புரை, விற்பனை ஆகிய தளங்களில்-முனைப்போடு தொண்டுகள் பல புரிந்தார். அண்மையில் பெரியார் விடுதலைக் களத்தில் ஆற்றிய பணிகள் தொடர்பாகப் பல புதிய செய்திகள் வெளிவந்துள்ளன. இந்தியாவின் சீர்த்திருத்தச் செம்மல் என்ற புகழப்படுகிற இராஜராம் மோகன் ராய் தனது அண்ணன் மறைந்த போது அவரது அண்ணியை உடன்கட்டை ஏறுவதற்கு வலியுறுத்திய தைச் சகிக்க முடியாமல் பழமைவாத இந்துத்துவத்தை ஏற்க மறுத்தார். தான் பிறந்த குலின் பார்ப்பன (Kul Orahmbs) சமூகத்தில் 10 வயது 15 வயதில் பெண்களுக்கு மணம் முடிப்பதையும், ஆண்கள் 3 அல்லது 4 முறை திருமணம் செய்து கொள்வதையும் கண்டு கொதித்தார். பெண்கள் இழிந்த மிருகங்களாக நடத்தப்படுவதையும் அறிந்த ராய், சமூகச் சீர்திருத்தக் கருத்துகளை வலி யுறுத்தினார். தனது இறுதிக் காலத்தில் மொகலாய



மன்னரால் இங்கிலாந்து நாட்டிற்கு அனுப்பப்பட்டார். மன்னரின் வேண்டுகோளுக்கு இணங்க இங்கிலாந்து நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் மன்னர் மானியத்தை 30 ஆயிரம் பவுண்ட் அளவிற்கு கிழக்கிந்தியக் குழுமம் உயர்த்தித் தர வேண்டும் என்று ஆதரவு திரட்டினார். அந்நேரத்தில், இங்கிலாந்தில் 1833 செப்டம்பர் 27இல் ராய் மறைந்தார் என்று வரலாற்று ஆய்வாளர் ராமச் சந்திர குகா ‘‘புதிய இந்தியாவின் சிற்பிகள்’’ என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். இதே நூலில்தான் பெரியாரின் தன்னலமற்ற சமூகச் சீர்த்திருத்தப் பணிகளையும் பொதுத் தொண்டினையும் ஆய்வு நோக்கோடு தனிக்கட்டுரையாக குகா வெளியிட்டுள்ளார்.

சிங்கப்பூர் தேசியப் பல்கலைக் கழகத்தின் பேராசிரி யரும் ஆய்வாளருமான பெர்னாட் பாட் (Oerbard Oate), இந்திய மொழிகளில் சுருக்கெழுத்து (SHrt abd) வளர்ச்சியையும் வரலாற்றையும் ஆய்வு செய்துள்ளார். தமிழில் சுருக்கெழுத்து 1920இல் தான் தொடங்கியது. ஆங்கிலத்தில் பிட்மென் சுருக்கெழுத்தின் அடிப்படையில் தமிழ் மொழியின் எழுத்துகளும் சுருக்கெழுத்துக்களாக மாற்றப்பட்டன. இம்முயற்சியில் சென்னைப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றிய சிலரும் மற்ற சில ஆய்வாளர் களும் சுருக்கெழுத்து உருவாவதற்குத் தங்களின் பங்களிப்பை அளித்துள்ளனர். பிரித்தானிய ஏகாதிபத் தியம் மாநிலங்களின் மொழிகளில் அரசியல் தலைவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதைக் கண்காணிப்பதற்காக, காவல் துறையின் உளவுப் பிரிவில் சுருக்கெழுத்தர்களை

நியமித்தனர். இன்றைய சுருக்கெழுத்து, பல காலக் கட்டங்களில் செம்மைப்படுத்தப்பட்டு இன்று செய்தி ஊடகத் துறை களுக்கும் பயனளித்து வருகிறது.

கோவை மாவட்டத்தில் உள்ள உத்தமபாளை யத்தில் 1924ஆம் ஆண்டில் பெரியார் ஆற்றிய உரை தான் தமிழ்நாட்டில் முதன்முதலில் சுருக்கெழுத்தில் எழுதப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டது. இதுதான் பிற்காலத்தில் விரிவாக்கம் அடைந்த சுருக்கெழுத்து முறைக்கு முன்னோடியாகவும் தரம் உயர்த்தப்பட்ட முறையாகவும் எடுத்துக்கொள்ளப்பட்டது. 60 பக்கங்களில் அவ்வுரை இடம் பெற்றுள்ளது. மேலும் சுதேசி இயக்கத்தின் கொள்கையை மக்களிடத்தில் எடுத்துச் சொல்லும் வகையில் அமைந்தது என்று ஆய்வாளர் சுட்டியுள்ளார். தந்தை பெரியாரின் பேச்சைக் கேட்பதற்கு சாதாரண நெசவுத் தொழிலாளர்கள் மற்ற தொழிலா ளர்கள் அனைவரும் பெரும் கூட்டமாகப் பங்கேற்றனர். முகமது ராவுத்தர் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது என்று காவல் துறையின் இரகசியக் குறிப்பேட்டில் இடம் பெற்றுள்ளது. இத்தகைய ஈடுபாட்டோடு இருந்த காங்கிரசு இயக்கத்தை விட்டுப் பெரியார் விலகுவதற்கு சமூக நீதி, சமூகச் சீர்த்திருத்தம் ஆகியனவே முதன்மையான காரணங்களாக அமைந்தன. சான்றாக 1927ஆம் ஆண்டு காந்தியுடன் பெங்களூர் மாநகரில் பெரியார் சந்திப்பு மேற்கூறிய கருத்தியலை உறுதி செய்கின்றது. அச்சந்திப்பின் உரையாடலில்

பெரியார் : இந்து மதம் ஒழிந்தாக வேண்டும்.

காந்தியார் : ஏன்?

பெரியார் : இந்து மதம் என்பதாக ஒரு மதம் இல்லை.

காந்தியார் : இருக்கிறதே!

பெரியார் : இருக்கிறதாகப் பார்ப்பனர் கற்பித்து அதை மக்கள் மனத்தில் அப்படி நினைக்கும்படிச் செய்திருக் கிறார்கள்.

காந்தியார் : எல்லா மதங்களும் அப்படித்தாமே?

பெரியார் : அப்படி அல்ல மற்ற மதங்களுக்குச் சரித்திர சம்பந்தமான ஆதாரங்களும் மதக்காரர் கள் எல்லோ ராலும் ஒப்புக் கொள்ளக்கூடிய கொள்கைகளும் உண்டு.

காந்தியார் : இந்து மதத்துக்கு அப்படி ஒன்றும் இல்லையா?

பெரியார் : என்ன இருக்கிறது? ஒருவன் பிராமணன்; ஒருவன் சூத்திரன்; ஒருவன் பஞ்சமன் என்கிற இந்த பேதப் பிரிவுத் தன்மையல் லாமல், வேறு என்ன பொதுக் கொள்கைகள். பொது ஆதாரங்கள் இருக்கின்றன? அதுவும் பிராமணன் உயர்ந்தவன்-சூத்திரன், பஞ்சமன் தாழ்ந்தவன் என்கிற தன்மை, நடப்புத் தவிர வேறு என்ன இருக்கிறது?........

காந்தியார் : நீங்கள் சொல்வது எல்லாம் சரி. அதாவது இந்து மதம் என்பதாக ஒரு மதம் இல்லை. உண்மைதான் நான் ஒப்புக் கொள்கிறேன். அதற்குக் குறிப்பிட்ட கொள்கை இல்லை என்பதையும் ஒப்புக் கொள்கிறேன். ஆத லால்தான் நாம் ஒரு இந்துமதவாதி என் பதை ஒப்புக் கொண்டு நம் இஷ்டம் போல் அதற்குக் கொள்கை ஏற்படுத்திக் கொள்ள லாம்.......இந்துமதம் என்பது இல்லாத மதம் ஆனதால், அந்த மதத்தின் பெயரால் யாரும் மகான்களாக ஆகி எதையும் சொல்லலாம். அப்படியே இந்து மதத்தில் ஏற்பட்ட பல பெரியோர்கள் மகான்கள் பலவற்றைச் சொல்லியிருக்கிறார்கள். ஆதலால் நாமும் அந்த மதத்தை வைத்துக் கொண்டே அநேக சீர்திருத்தங்களை இந்தக் கால மனித வர்க்கத் தேவைக்கு ஏற்றபடி செய்யலாம்.

பெரியார் : மன்னிக்க வேண்டும் - அதுதான் முடியாது.

காந்தியார் : ஏன்?

பெரியார் : இந்து மதத்தில் உள்ள சுயநலக் கும்பல் அதற்குச் சற்றும் இடம் கொடுக்காது.

காந்தியார் : ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்? இந்து மதத் தில் தீண்டாமை இல்லை என்று சொல் வதை இந்து மதத்தினர் யாவரும் ஒப்புக் கொள்ளவில்லையா?

பெரியார் : ஒப்புக்கொள்வது என்பது ஒன்று; ஒப்புக் கொண்டபடி நடப்பது என்பது வேறு. ஆகை யால் இது காரியத்தில் நடக்காது.

காந்தியார் : நான் காரியத்தில் செய்கிறேன். இந்த 4, 5 வருடங்களில் எவ்வளவு மாறுதல்கள் ஏற்பட்டிருக்கிறது என்பதை நீங்கள் உணர வில்லையா?

பெரியார் : உணருகிறேன். அடிப்படையில் மாறவில்லை. தங்களுக்கு உள்ள செல்வாக்கைக் கண்டும் தாங்கள் அவர்களுக்கு வேண்டியிருக்கின்ற சுயநலத்திற்கு ஆகவும் ஒப்புக்கொண்டதாக நடிக்கிறார்கள். அதைத்தான் தாங்கள் நம்புகிறீர்கள்.

காந்தியார் : (சிரித்துக்கொண்டே) யார் அப்படி நடிக்கிறார்கள்?

பெரியார் : பார்ப்பனர்கள் யாவரும்தான்.

காந்தியார் : எல்லாப் பார்ப்பனருமா?

பெரியார் : ஆம். ஏன் தங்கள் கூட இருக்கும் பார்ப்பனர் கள் எல்லோரும்தான்

காந்தியார் : அப்படியானால் உங்களுக்கு ஒரு பார்ப்ப னரிடம் கூட நம்பிக்கை இல்லையா?

பெரியார் : நம்பிக்கை ஏற்படமாட்டேன் என்கிறது.

காந்தியார் : இராசகோபாலாச்சாரியாரிடம் கூட உங்களுக்கு நம்பிக்கை இல்லையா?

பெரியார் : அவர் நல்லவர்; உண்மையானவர்; தியாகி; சுயநலமில்லாதவர். ஆனால் இவையெல்லாம் அவர்களது வகுப்பு நலனுக்கு அவர் உண்மையான தொண்டர்; நல்ல தியாகி; அத்தொண்டில் சுயநலமில்லாதவர். ஆனால் என் வகுப்பு நலத்தை அவரிடம் ஒப்படைத்து விடச் சுலபத்தில் எனக்கு மனம் வராது.

காந்தியார் : உங்கள் கருத்து என்ன? இந்து மதம் ஒழிய வேண்டும்-பிராமணர்கள் ஒழிய வேண்டும், என்று நான் கருதலாமா?

**பெரியார் : இந்துமதம் அதாவது இல்லாத பொய்யான இந்து மதம் ஒழிந்தால்தான் பிராமணன் இருக்க மாட்டான். இந்து மதம் இருப்பதால் பிராமணன் இருக்கிறான். நானும் தாங்களும் சூத்திரர்களாக இருக்கிறோம். எல்லாவித ஆதிக்கமும் பிராமணர்கள் கையில் இருக்கிறது.**

**இந்தச் சந்திப்பில்தான் - பெரியார் காந்தியிடம், இந்து மதத்தில் மாத்திரம்தான் பார்ப்பனர்களே யாவரும் இன்டலிஜன்சியாவாக படித்தவர்களாக இருக்கிறார்கள். மற்றவர்கள் அநேகமாக 100க்கு 90க்கு மேற்பட்ட மக்கள் படியாதவர்களாக-ஏமாளிகளாக இருக்கிறார்கள். ஆகவே ஒரு சமுதாயத்தில் ஒரு சாதி மாத்திரமே இன்டலிஜன்சியாவாக, ஆதிக்க-காரர்களாக இருக்க முடியும் என்றால், அந்த மதம் அந்தச் சாதி தவிர்த்து மற்ற சாதியாருக்குக் கேடானதல்லவா? என்று தெளிவாகச் சுட்டினார்.**

2014இல் மோடி அரசு அமைந்த பிறகு எடுக்கப்படும் எல்லாவித மதம் சார்ந்த, சமஸ்கிருத-இந்தி மொழிகள் திணிப்பு நடவடிக்கைகளும், சமூகநீதிக் கொள்கையில் வெற்றி பெற்று வருகிற மாநிலங்களில் கல்வியின் அடிப்படையைத் தகர்க்கும் முயற்சிகளும்; உயர்நீதி, உச்ச நீதி மன்ற அமைப்பு முறைகளும், உயர்சாதியினருக்கு ஆதரவாக அளிக்கப்படுகின்ற தீர்ப்புகளும் பெரியாரின் கருத்து இன்றும் நாட்டிற்குத் தேவைப்படுகிறது என்பதைப் பறைசாற்றுகின்றன. தந்தை பெரியாருக்குத் தனிமனிதர்கள் அல்லது சில கட்சிகளுடைய தலைவர்கள் முதன்மையானவர்கள் அல்ல. வாழ்நாள் முழுவதும் அவர் வலியுறுத்திய கொள்கைகளுக்குக் கேடு வரும் போது, அதை எதிர்க்கின்ற வலிமையும் துணிவும் பெரியாரின் ஆளுமையின் தனிப்பண்பாகும்.

1952இல் இந்தியப் பொதுவுடைமைக் கட்சியைத் தேர்தலில் பெரியார் ஆதரித்தார். அதன் காரணமாகப் பெருமளவில் பொதுவுடைமைக் கட்சியினர் வெற்றி பெற்றார்கள். 1952இல் இராஜாஜி சென்னை மாகாண முதல்வரானார். 1952 சட்டமன்ற தேர்தலில் காங்கிரசுக் கட்சிக்குப் பெரும்பான்மையான இடங்கள் கிடைக்காத சூழலில், இராஜாஜியைச் சென்னை மாகாண முதல்வர் ஆக்கினர். அப்போது பெரியார் முதல்வர் இராஜாஜிக்குத் தனது ஆதரவினை அளித்து, அதற்கான பின்வரும் விளக்கங்களையும் அளித்துள்ளார். "உங்களுக்குத் தெரியும் - நண்பர் ஆச்சாரியார் பதவிக்கு வந்ததும் நான் அவரைப் பாராட்டினேன். மற்றவர்களைவிட ஆச்சாரியார் எவ்வளவோ மேல் என்று பேசினேன். கம்யுனிஸ்ட் காரர்களைவிட ஆச்சாரியார் பரவாயில்லை என்று எழுதினேன். அவரை ஆதரித்தேன்; தோழர் ஜீவானந்தமும் ராமமூர்த்தியும் மக்களிடம்; இப்போது ஆச்சாரியார் மட்டு மல்ல. நாட்டை ஆள்வது. ஆச்சாரியாரும் இராமசாமியும் பேசிக் கொண்டு இந்நாட்டை ஆள்கிறார்கள். அதற்குக் காரணம் 1.கண்ட்ரோலை (Control) எடுத்தார்.

2. கைத்தறிப் பிரச்சினையில் சில நன்மைகளைச் செய்தார்.

3. தஞ்சையில் பண்ணையார் பாதுகாப்புச்சட்டம் கொண்டு வந்தார். நாம் எல்லாவற்றையும் எதிர்க்க வேண்டியதில்லை. திராவிடர் கழகத்தைப் பொறுத்த வரை சட்டசபைக்குப் போவதில்லை; மந்திரியாக முயல்வதில்லை; தேர்தலில் நிற்பதில்லை என்பது அனைவருக்கும் தெரியும். யார் வந்தாலும் நமக்கான காரியங்களைச் செய்யும்படிப் பார்த்துக் கொண்டாலே போதும்.

இராஜாஜி குலக்கல்வித் திட்டத்தை 1953இல் அறிமுகப்படுத்தியபோது அவருக்கு எதிராகப் பெரும் களம் அமைத்தார். தமிழ் மாகாண காங்கிரசுக் கட்சியின் தலைவராக இருந்த பெருந்தலைவர் காமராசர் குலக் கல்வித் திட்டத்தைப் பெரியார் வழியைப் பின்பற்றி எதிர்த்தார்.

பெருந்தலைவர் காமராசர் அவரது ஆட்சிக்காலத்தில் தமிழர்களுக்காகச் செய்த சாதனைகள் அளப்பரியன. தமிழ்நாட்டில் பள்ளிக்கல்வியில் ஒரு பெரும் புரட்சியே நடைபெற்றது எனலாம். அது போன்று மதிய உணவுத் திட்டம் வெற்றி பெறப் பெருந்தலைவர் காமராசர் காட்டிய ஈடுபாட்டினைக் கல்வி நெறிக் காலவர் நெ.து.சுந்தரவடிவேலு தனது நினைவலைகள் நூலில் சுட்டியுள்ளார். ஆரம்பக் கல்வியும் மதிய உணவுத் திட்டமும் அரசியலுக்கு அப்பாற்பட்டு ஒரு மக்கள் இயக்கமாக வளர்ந்தன. சான்றாக 1.11.1957இல் மதிய உணவுத் திட்டம் காஞ்சிபுரத்தில் தொடங்கப்பட்டது. சட்டமன்ற உறுப்பினர் அறிஞர் அண்ணாவை நெ.து.சுந்தரவடிவேலு அழைத்தார். தன்னுடைய பெயரை அழைப்பிதழில் போட

வேண்டாம், நான் விழாவில் கலந்து கொள்வேன் என்று அண்ணா குறிப்பிட்டார். நெ.து.சு வியப்படையும் அளவிற்கு அறிஞர் அண்ணா விழா மேடைக்கு வருகிறார். அண்ணா வாழ்நாளில் ஆற்றிய சிறிய உரை என்ற தலைப்பில், நெ.து.சு. அந்நூலில்-''படிக்கும் ஏழைச் சிறுவர்களைக் காப்பது சமுதாயத்தின் பொறுப்பு. நான் சட்டமன்ற உறுப்பினராகிவிட்டதால் அதற்காக ரூபாய் நூற்றைம்பது கிடைக்கிறது. அதில் மாதம் ரூ.50ஐ பகல் உணவுத்திட்டத்திற்கு என் பங்காகச் செலுத்துவேன். உங்களைப் பாராட்டிப் பேசினால் பல இடங்களில் அழுக்காறு அலைகளை எழுப்பும்-உங்களுக்குத் தொல்லை கொடுக்கும் என்பதால் என் பெயரைப் போடவேண்டாமென்று சொன்னேன்'' என அண்ணா பேசினார். தலைவர்கள் என்னை இமையெனக்காத்த பாங்கினை எண்ணி எண்ணிப் பரவசமடைகிறேன். காரணம் அண்ணா கலந்து கொண்ட நிகழ்ச்சியைப் பற்றிக் காமராசரிடம் சென்று சிலர் கூறியபோதுகூட, பெருந்தலைவர் காமராசரும் கல்வி அமைச்சர் சி.சுப்ரமணியமும், சுந்தரவடிவேலு செய்ததில் தவறு ஒன்றும் இல்லை என்று பாதுகாத்ததாக நெ.து.சு. இந்நூலில் குறிப்பிடுகிறார்.

பெருந்தலைவர் காமராசர், பக்தவத்சலம், அறிஞர் அண்ணா ஆகியோரிடம் நேர்முக உதவியாளராக இருந்த மறைந்த சாமிநாதன் எழுதிய மூன்று முதல்வர்களுடன் என்ற நூலில் இது போன்ற மற்றொரு நிகழ்ச்சியைக் குறிப்பிட்டுள்ளார்.

1967 சூலை 14ஆம் நாள் இரவு முதல்வர் அண்ணாவிடம் கோப்புகளில் கையொப்பம் வாங்கி முடித்த பிறகு திரு.சாமிநாதன்- நாளை நான் விடுப்பில் செல்கிறேன். தலைவர் காமராசரின் பிறந்தநாளில் கடந்த பத்தாண்டுகளாக, காலையில் முதலில் என் குடும்பத்தோடு சென்று இனிப்புகளை வழங்கி வாழ்த்துச் சொல்வது எனது கடமையாகக் கொண்டிருக்கிறேன். பெருந்தலைவர் காமராசரை அவரது பிறந்தநாளில் காணவில்லை என்றால் எனது மனது துயருறும் என்று கூற, அறிஞர் அண்ணா பெருந்தலைவர் காமராசருக்கு எனது வாழ்த்தினைச் சொல்லுங்கள்-ஏதாவது செய்தி இருந்தால் கேட்டு வாருங்கள் என்று குறிப்பிட்டார்.

மறுநாள் சூலை 15இல் பெருந்தலைவரின் இல்லத்திற்கு காலையில் திரு.சாமிநாதன் குடும்பத்துடன் காலை 5.30 மணிக்குச் சென்றபோது, காமராசர் ஏன் வந்தாய்? முதலமைச்சரின் அலுவலகத்தில் பணியாற்றுகிற நீ விடுப்பு எடுத்துக் கொண்டு வருவது உனது பணிக்கு ஆபத்து வந்துவிடாதா? என்று கேட்டுள்ளார். அதற்கு முதல்வர் அண்ணாதான் ஒரு நாள் பணிவிடுப்பு எடுத்து அவருடன் இருந்து வா என்று என்னை அனுப்பினார் என்று கூறினார். மேலும் தலைவர் காமராசரிடம் ஏதாவது எனக்குச் செய்தி இருந்தாலும் கேட்டு வா என்றும் கூறி அனுப்பினார் எனக் கூறினேன். இதைக் கேட்டு மகிழ்ந்த காமராசர், நான் விடைபெறும்போது, சென்னை காவல் ஆணையர் மிகவும் நேர்மையானவர்; சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதில் வல்லவர். அவரை மாற்ற வேண்டாம் என்று நினைக்கிறேன். இதை அண்ணாவிடம் கூற முடியுமா என்றார் காமராசர். மறுநாள் முதல்வர் அண்ணாவை நான் சந்தித்தபோது, மேற்கண்ட நிகழ்வுகளைக் குறிப்பிட்டேன். அப்போது அண்ணா காமராசர் விரும்பியபடியே காவல் ஆணையர் தொடர்வார். இந்த முடிவை நான் முன்பே எடுத்து விட்டேன். எனினும் இதை காமராசரிடம் கூறிவிடு என அண்ணா பேசினார் என்று குறிப்பிட்டு-நான் முதல்வராக உள்ளவரை, நீ என் உதவியாளராகத் தொடர்வாய் என்று குறிப்பிட்டதை, சாமிநாதன் தனது நூலில் பதிவு செய்துள்ளார்.

அரசியலில் காமரசாசரும் அண்ணாவும் பின்பற்றிய மாண்புகளும் தகைமைகளும் இன்று எந்த நிலையில் தாழ்ந்துள்ளன என்பதைக் கவலையோடு நோக்க வேண்டியுள்ளது.

இது போன்று, பெருந்தலைவர் காமராசர், அவரை எதிர்த்து 1967சட்டமன்றத் தேர்தலில் வெற்றி கண்ட பெ.சீனுவாசன் திருமணத்திற்கு முன்னதாகவே சென்று விட்டுக் காத்திருந்தார். திருமணம் முடிகிற வரை விழா மேடையில் அமர்ந்து மகிழ்வோடு தனது வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

மேலும் 17-9-1967இல் திருச்சியில் நடைபெற்ற தந்தை சிலை திறப்பு-பிறந்தநாள் விழாவில் அறிஞர் அண்ணா முற்பகலில் பங்கு பெற்றார். பெருந்தலைவர் காமராசர் பிற்பகலில் பெரியாரின் சிலையைத் திறந்து வைத்தார். இது போன்ற எண்ணற்ற நிகழ்வுகள் காமராசருக்கும் பெரியாருக்கும் இருந்த கொள்கை உறவை எடுத்தியம்புகின்றன. தமிழ்நாட்டில் காமராசர் ஆட்சி திராவிட இயக்கத்தின் மறுபதிப்பாகவே இருந்தது என்று கூறப்படும் கருத்து மிகைப்படுத்தப்பட்டதல்ல.

பெரியாரும் காமரசாரும் இறுதிநாள்கள் வரை எளிமையான-எடுத்துக்காட்டான முறையில் வாழ்ந்தார்கள். இந்த இருவரும் விதைத்த சமூக நீதிக் கொள்கை இன்று நடுவண்அரசின் பணிகளிலும் உயர் கல்விகளிலும் பல இடர்களுக்கு இடையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இதன் காரணமாகத்தான் யூனியன் வங்கியின் உயர் அலுவலர்களாக நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளீர்கள் என்பதை நன்கு உணர்ந்துள்ளீர்கள்.

தமிழ்நாட்டில் பெரியார் காமராசர் பின்பற்றிய நெறிகளை-இடஒதுக்கீட்டுக் கொள்கையின் தேவையை அடுத்த தலைமுறைக்கும் நீங்கள் எடுத்துச் செல்ல வேண்டும்.

*(யூனியன் வங்கிப் பணிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினைச் சேர்ந்த அலுவலர்களுக்கான **10.7.2016** அன்று மாமல்லபுரத்தில் நடை பெற்ற சமூக நீதி விழாவில் ஆற்றிய உரையின் சுருக்கம்)*

# இரோம் ஷர்மிளாவின் பதினாறு ஆண்டுகள் போராட்டத்தின் முடிவும் ஆயுதப் படைகள் சிறப்பு அதிகாரச் சட்டம் குறித்த உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பும்

க. முகிலன்

மணிப்பூரின் இரும்புப் பெண்மணி என்று போற்றப்படும் இரோம் ஷர்மிளா, ஆயுதப்படைகள் சிறப்பு அதிகாரச் சட்டத்தைத் திரும்பப் பெற வேண்டும் என்று கோரி 16 ஆண்டுகளாக நடத்திய உண்ணாநோன்புப் போராட்டத்தை 2016 ஆகத்து 9 அன்று முடித்துக் கொள்ளப் போவதாக 26.7.2016 அன்று அறிவித்தார். நீதிமன்றத்திலிருந்து வெளியே வந்தபோது செய்தியாளர்களிடம் இம்முடிவை அறிவித்தார்.

1950களில் நாகாலாந்து விடுதலைப் போராட்டம் இந்தியாவின் வடகிழக்குப் பகுதியில் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதனால் 1958ஆம் ஆண்டு நடுவண் அரசு, மணிப்பூர் உள்ளிட்ட ஏழு வடகிழக்கு மாநிலங்களில் அண்டை நாட்டவரின் ஊடுருவலைத் தடுப்பதற்காக எனக்கூறி ஆயுதப் படைகள் சிறப்பு அதிகாரச் சட்டத்தைப் பிறப்பித்து நடைமுறைப்படுத்தியது. 1980ஆம் ஆண்டு மணிப்பூர் கலவரப் பகுதியாக அறிவிக்கப்பட்டது. காலம் செல்லச்செல்ல வடகிழக்கு மாநில மக்களைக் கொடுமைப்படுத்துவும் கொல்லவும் ஆயுதப்படையினரால் இச்சட்டம் தவறாகப் பயன்படுத்தப்பட்டது. தவறு செய்யும் ஆயுதப்படையினர்மீது நடவடிக்கை எடுக்க மாநில அரசுக்கு அதிகாரம் இல்லை.

2000ஆம் ஆண்டு நவம்பர் 2 அன்று மணிப்பூரின் புறநகர்ப் பகுதியான மலோம் பேருந்து நிலையத்தில் பேருந்துக்காகப் பொதுமக்கள் காத்திருந்த போது, அசாம் ஆயுதப்படையினர் கண்மூடித்தனமாகத் துப்பாக்கியால் சுட்டதில் பத்துப் பேர் மாண்டனர். ஆனால் இது தொடர்பாகப் பாதுகாப்புப் படையினர் முறையாக எந்த விளக்கமும் தரவில்லை.

மலோம் படுகொலையை நேரில் பார்த்துக் கொதித்தெழுந்த 27 அகவை இளம் பெண்ணாக இருந்த இரோம் ஷர்மிளா ஆயுதப் படைகள் சிறப்பு அதிகாரச் சட்டத்தை மணிப்பூர் மாநிலத்திலிருந்து திரும்பப் பெறக்கோரி, 4.11.2000 அன்றுமுதல் தண்ணீரும், உணவும் அருந்தாமல் தொடர்ந்து உண்ணாநிலைப் போராட்டம் நடத்தப் போவதாக அறிவித்துப் போராட்டத்தைத் தொடங்கினார். மூன்று நாள்களுக்குப் பிறகு, அவரைக் காவல்துறையினர் கைது செய்து, தற்கொலைக்கு முயன்றதாக வழக்குப் பதிவு செய்தனர். அவர் மூக்கின் வழியாகக் குழாய் மூலம் நீர்ம உணவை வலுக்கட்டாயமாகச் செலுத்தினர்.

ஆயினும் எதற்கும் அஞ்சாமல், இரோம் ஷர்மிளா தன்னுடைய உண்ணாநிலைப் போராட்டத்தைத் தொடர்ந்தார். தற்கொலை வழக்கில் கைது செய்யப்படும் ஒருவரை ஓர் ஆண்டு வரையில் மட்டுமே சிறையில் அடைக்க முடியும். அந்த வகையில் இரோம் ஷர்மிளா



ஒவ்வொரு ஆண்டும் விடுதலை செய்யப்பட்டு, பின்னர் உண்ணாவிரதம் இருந்ததற்காக மீண்டும் கைது செய்யப்படுவார், கடந்த 16 ஆண்டுகளாக இவ்வாறு விடுதலையாவதும் மீண்டும் கைதாவதும் நடந்து வந்தது. இந்நிலையிலும் மணிப்பூர் மாநில உரிமைகளை மீட்கக் கோரிப் பொது மக்களுடன் இணைந்து பல்வேறு கட்டப் போராட்டங்களில் அவர் ஈடுபட்டார். மணிப்பூர் தலைநகர் இம்பாலில் சவகர்லால் நேரு மருத்துவமனையில் ஒரு பகுதியை அவருக்கென்று ஒதுக்கி அதுவே அவரது சிறைச்சாலையாக மாற்றப்பட்டது. இப்போது இரோம் ஷர்மிளா 44 அகவையினர்.

அமைதி வழியில் அரசை எதிர்த்து ஆண்டுக்கணக் கில் போராடிய இரோம் ஷர்மிளா மாபெரும் போராளி யாக உலக அளவில் அறியப்பட்டார். பாராட்டுகளும், விருதுகளும் குவிந்தன. பல ஆண்டுகளாகக் கட்டாயப் படுத்தப்பட்ட நீர்ம உணவு மட்டுமே உட்கொண்டதால் இரோம் ஷர்மிளாவின் உடலின் உள் உறுப்புகள் பல வகையிலும் பாதிக்கப்பட்டிருப்பதாக ஏற்கெனவே பல தடவைகள் செய்திகள் வெளிவந்தன. மூக்கில் குழாய்ப் பொருத்தப்பட்டுள்ள நிலையில் உள்ள இராம் ஷர்மிளா வின் தோற்றம் போராட்டத்தின் குறியீடாகியது.

26.7.2016 அன்று, இம்பாலில் செய்தியாளர்களிடம் தன் போராட்டத்தை 9.8.2016 அன்று முடித்துக் கொள் வதாக அறிவித்த போது, ''16 ஆண்டுகள் போராடியும் ஆயுதப்படைகள் சிறப்புச் சட்டம் திரும்பப் பெறப்பட வில்லை. எனவே அரசியல் ரீதியாகப் போராடப் போகிறேன். அடுத்து நடைபெறவுள்ள தேர்தலில் கட்சிச் சார்பில்லாமல் போட்டியிடப் போகிறேன். சிறையிலிருந்து வெளிவந்த பின் திருமணம் செய்து கொள்ளப் போகிறேன்'' என்று சொன்னார்.

சில ஆண்டுகளுக்கு முன்பே போராட்டத்தை முடித்துக் கொண்டு, தன் காதலனைத் திருமணம் செய்து கொள்ள இரோம் ஷர்மிளா முடிவு செய்ததாகவும், மணிப்பூர் போராட்ட இயக்கத்தினர் அதைத் தடுத்தாகவும் செய்தி கள் வந்தன. கண்ணாடியில் தன் முகத்தைப் பார்க் காமல், தலை சீவாமல், தன் அம்மாவைப் பார்க்காமல், தன் போராட்டத்தைத் தொடர்ந்தார். இரோம் ஷர்மிளா வீரஞ்செறிந்த போராட்டத்தை நடத்திக் காட்டியிருக் கிறார் என்பதில் எவரும் அய்யம் கொள்ள முடியாது. மனிதநேயத்தையும் உயிர்வாழும் உரிமையையும் நேசிக்கும் எவரும் இரோம் ஷர்மிளாவின் முடிவை மகிழ்ச்சியுடன் வரவேற்பார்கள். அரசை எதிர்த்துக் கொண்டு, கடுமையான துன்பங்களை ஏற்றுப் பல ஆண்டுகள் கொள்கை உறுதியுடன் போராடிய அவருடைய போர்க்குணம் வருங்கால இளைய தலைமுறையி னருக்கு வழிகாட்டியாக விளங்கும்.

**ஆயுதப்படைகள் சிறப்பு அதிகாரச் சட்டத்தின் இன்றைய நிலை**

மணிப்பூரில் ஆயுதப்படைகள் சிறப்பு அதிகாரச் சட்டத்தின் கொடிய நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட குடும்பத்தினரும் மனித உரிமைகள் விழிப்புணர்வு இயக்கமும் இணைந்து 2013ஆம் ஆண்டு உச்சநீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தனர். நடுவண் அரசின் பாதுகாப்புப் படையினராலும் மணிப்பூர் மாநிலத்தின் காவல்துறையாலும் ''போலி மோதல்களில்'' (Fake Encounters) 1,528 பேர் கொல்லப்பட்டுள்ளது குறித்து முழுமையாக விசாரிக்க வேண்டும் என்பதே அவர்களின் இன்றைய கோரிக்கையாகும்.

ஆயுதப்படைகள் சிறப்புச் சட்டம் சிற்சில மாற்றங் களுடன் 1990 முதல் ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மக்களின் உரிமை களைத் தன் 'பூட்ஸ் காலால்' நசுக்கும் இச்சட்டத்தைத் திரும்பப் பெற வேண்டும் என்று பலதரப்பினரும் தொடர்ந்து குரல் கொடுத்து வருகின்றனர்.

1997இல் ஆயுதப்படைகளின் சிறப்பு அதிகாரச் சட்டத்துக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட பல வழக்குகளை யும் இணைத்து ஒரே வழக்காக ஆக்கி உச்சநீதிமன்றம் விசாரித்தது. அப்போது இச்சட்டம் செல்லும் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. ஆயினும் என்ன செய்ய வேண்டும் - என்ன செய்யக்கூடாது என்று இராணுவ உயர் அதிகாரிகள் வகுத்துள்ள விதிகளுக் குட்பட்டே ஆயுதப்படையினர் செயல்பட வேண்டும் என்று கண்டிப்பான ஒரு கருத்தைக் கூறியது.

2005இல் நீதிபதி ஜீவன் ரெட்டி தலைமையிலான ஆய்வுக்குழு ஆயுதப்படைகள் சிறப்பு அதிகாரச் சட்டத் தை நீக்க வேண்டும் என்று பரிந்துரைத்தது. ஆயி னும் இச்சட்டத்தின் சில பிரிவுகளை 2004ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சட்ட விரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்துடன் இணைக்கலாம் என்றும் கூறியிருந்தது. ஆனால் ஜீவன் ரெட்டி குழுவின் அறிக்கையை அரசு முறைப்படி வெளியிடவில்லை. வேறு வழிகளில் அது வெளியானது.

2013ஆம் ஆண்டு பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் தொடுத்த வழக்கில், 1,528 பேர் காணவில்லை என்கிற பட்டியலில் அங்கொன்றும் இங்கொன்றுமாக ஆறு பேரின் பெயரைத் தெரிவு செய்து, அந்த ஆறு பேர் தொடர்பாக நடந்தவற்றை விசாரிப்பதற்காக உச்சநீதி மன்றம் சந்தோஷ் ஹெக்டே தலைமையிலான குழுவை அமைத்தது.

சந்தோஷ் ஹெக்டே குழு ஆய்வு செய்த பின் அளித்த அறிக்கையில், ''அந்த ஆறு பேரும் போலி மோதல் களில் (Fake Encounters) கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

இக்கொலைகளை அசாம் ஆயுதப்படையினரும் மணிப்பூர் சிறப்பு அதிரடிப்படையினரும் செய்திருக்கிறார்கள். மேலும் மணிப்பூர் காவல்துறையினர் அதன் பங்கிற்கு - கொலை செய்யப்பட்டவர்களின் குடும்பத்தினர் வாய் திறக்காமல் இருப்பதற்காக - அவர்கள் மீது முதல் தகவல் அறிக்கையைப் (FIR) பதிவு செய்து மிரட்டி வைத்துள்ளனர்'' என்று கூறப்பட்டுள்ளது.

சந்தோஷ் ஹெக்டே ஆய்வு செய்த பட்டியலில், 7ஆம் வகுப்பு மாணவன் ஆசாத்கான் கொல்லப்பட்ட விவரம் இடம்பெற்றுள்ளது. 2009 மார்ச்சு 4ஆம் நாள் பக்கத்து வீட்டின் முற்றத்தில் செய்தித்தாள் படித்துக் கொண்டே, பள்ளிக்குச் செல்வதற்காகத் தன் நண்பனின் வருகைக்காகக் காத்திருந்தான். அப்போது அதிரடிப் படையினரும் இராணுவத்தினரும் அம்மாணவனின் வீட்டுக்குப் பக்கத்தில் இருந்த ஒரு வீட்டைச் சோதனையிட்டனர். அப்போது ஆயுதப் படையினருள் சிலர் ஆசாத்கானை அடித்தனர். தவளைபோல் தத்தித்தி வருமாறு செய்து அருகில் இருந்த வயல்வெளிக்கு அழைத்துச் சென்றனர். ஆசாத்தின் பெற்றோரும் மற்றவர்களும் அச்சிறுவனை விட்டுவிடுமாறு மன்றாடினர். ஆயுதப் படையை சேர்ந்த ஒரு ஆள் பெற்றோரின் கண்ணெதிரிலேயே அப்பையனைத் துப்பாக்கியால் சுட்டான். அதன்பின் ஆயுதப்படையினர் காவல்துறைக்கு அளித்த அறிக்கையில், முசுலீம் தீவிரவாதிகளுடன் துப்பாக்கிச் சண்டை நடந்தபோது ஆசாத்கான் குறுக்கே வரநேரிட்டதால் (Cross Fire) குண்டடிப்பட்டு இறக்க நேரிட்டது என்று தெரிவித்தனர்.

இந்த நிகழ்ச்சி நடப்பதற்கு முன்பு, 2004 சூலை 11 அன்று தங்கஜம் மனோரமா என்ற இளம் பெண்ணை அசாம் ஆயுதப் படையினர் கைது செய்தனர். இரவு முழுவதும் அப்பெண்ணைக் கொடிய முறையில் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கியபின் சுட்டுக் கொன்றுவிட்டனர். அடுத்த நாள் குண்டடிப்பட்டு இறந்த நிலையில் மனோரமாவின் உடல் கண்டறியப்பட்டது. இதுகுறித்து ஆயுதப் படையின் சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில், தங்கஜம் மனோரமா படையினரால் எச்சரிக்கை செய்த பிறகும் தொடர்ந்து தப்பி ஓடியதால் சுடப்பட்டார் என்று கூறப்பட்டது. அவருடைய உயிர்நிலை உறுப்பில் பல குண்டுகள் பாய்ந்திருந்தன. எனவே தப்பி ஓடிய நிலையில் அவர் சுடப்படவில்லை என்பது அப்பட்டமான பொய். தங்கஜம் மனோரமாவின் கொடிய படுகொலையைக் கண்டித்து, மணிப்பூரின் நடுத்தர அகவையினரான 12 பெண்கள் அசாம் ஆயுதப் படையின் தலைமை அலுவலகத்தின் முன் ''இந்திய இராணுவமே - எங்களைக் கற்பழி'' என்கிற பதாகையின் பின் நின்று முற்றாகத் தங்கள் ஆடைகளைக் களைந்த நிலையில் போராட்டம் நடத்தினர். இது இந்தியாவை மட்டுமின்றி உலகையே உலுக்கியது.

2013ஆம் ஆண்டு உச்சநீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கை விசாரித்த நீதிபதி மதன் பி. லேக்கூர்,



நீதிபதி யு.யு. லலித் ஆகியோரைக் கொண்ட அமர்வு 9.7.2016 அன்று 85 பக்கங்கள் கொண்ட இடைக் காலத் தீர்ப்பை வழங்கியது. ஆயுதப்படைகள் சிறப்பு அதிகாரச் சட்டப்படி, இராணுவ நீதிமன்றம் தவிர வேறு எங்கும் ஆயுதப்படையினரின் செயல்பாடுகள் குறித்துக் கேள்வி கேட்க முடியாது என்றிருந்த நிலையை இத்தீர்ப்புத் தகர்த்துள்ளது.

கலவரப் பகுதியில் (disturbed area) ஆயுதப்படை யால் கொல்லப்பட்ட ஒருவர் பயங்கரமான குற்றச் செயல்கள் புரிபவராகவோ, ஒரு தீவிரவாதியாகவோ, அரசுக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போரிடுபவராகவோ இருந்தாலும் அந்த இறப்பு குறித்துத் தீவிரமாக விசாரிக் கப்பட வேண்டும். அந்நிகழ்வில் ஆயுதப்படைக்கு அளிக் கப்பட்ட அதிகாரத்தைவிட அதிகமான தன்மையில் வன்முறை பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பது கண்டறியப் பட வேண்டும். இத்தகைய கொலை நிகழ்வுகள் விசார ணைக்குரியவை என்று தேசிய மனித உரிமைகள் ஆணையத்தால் பரிந்துரைக்கப்பட்ட பின்னர் உளவுத் துறையால் தீர விசாரிக்கப்பட வேண்டும் என்று உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. தம்மை எவரும் தட்டிக்கேட்க முடியாது என்றிருந்த ஆயுதப்படைகளின் ஆணவப் போக்கிற்கு இது ஒரு சம்மட்டி அடியாகும்.

ஆயுதப்படையினர் மீதான விசாரணைக்கு வழி வகுப்பது, கடமையைச் செய்வதற்கான அவர்களின் மன உறுதியைக் குலைக்கும் என்று நடுவண் அரசு நீதிமன்றத்தில் வாதிட்டது. அப்போது நீதிபதிகள், ''அரசு இதன் இன்னொரு பக்கத்தையும் பார்க்க வேண்டும்; சனநாயக நாட்டில் ஒரு குடிமகன் துப்பாக்கியின் முனைக்கு அஞ்சி நடுங்கிக் கொண்டிருக்கிற காட்சியைக் காண வேண்டும்'' என்று அரசுக்கு அறிவுறுத்தினர். ஒரு ஈயை அடிப்பதற்காக ஒரு பெரிய சம்மட்டியைப் பயன் படுத்துவது போன்ற தன்மையில் ஆயுதப்படையினர் நடந்து கொள்ளக்கூடாது என்று நீதிபதிகள் கூறினர்.

உச்சநீதிமன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பில் கூறப் பட்டுள்ள சில பகுதிகள் :

''மணிப்பூரில் இயல்பு நிலையை மீண்டும் நிலை நாட்ட வேண்டும் என்ற பெயரில், ஆயுதப்படையினரைச் சிறப்பு அதிகாரங்களுடன் நிலையாக அங்கே வைத் திருப்பது சனநாயகத்தின் செயல்பாட்டைக் கேலிக் கூத்தாக்குவதாகும்.''

''கலவரப் பகுதி என அரசால் அறிவிக்கப்பட்ட பகுதியில் ஒருவர் கையில் ஆயுதத்தை வைத்துக் கொண்டிருப்பதாலேயே அவரைப் 'பகைவன்' என்று கருதக்கூடாது; அதன் காரணமாக அவரைத் தீவிரவாதி என்று முத்திரைக் குத்தக்கூடாது.''

''மணிப்பூரிலும் அதையொட்டியுள்ள மாநிலங்களி லும் பதட்டமான சூழ்நிலை இருப்பதை இந்த நீதி மன்றம் அறிந்திருக்கிறது. ஆயினும் ஆயுதப்படையி னரின் எத்தகைய நடவடிக்கை பற்றியும் விசாரிப்ப தற்கே இடமில்லாத நிலைமை இருப்பதுதான் எங் களைக் கவலையடையச் செய்கிறது. பெரும்பாலான நிகழ்வுகளில் முதல் தகவல் அறிக்கை கூடப் பதிவு செய்யப் படவில்லை. மாறாக சில நிகழ்வுகளில் பாதிக்கப்பட்ட வர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது.''

சட்டவிரோதமான முறையில் ஆயுதப்படையின ரால் தான்தோன்றித் தனமாகக் கொல்லப்பட்ட 1528 பேரின் சாவு குறித்து விசாரிக்க வேண்டும் என்பதே வழக்கின் கோரிக்கையாகும். சட்ட விரோதமாகவும், போலி மோதல் என்ற பெயரிலும் கொல்லப்பட்டிருக் கிறார்கள் என்பதற்குப் போதிய ஆதாரங்கள் இருப் பதாக உச்சநீதிமன்றத்தால் கருதப்படும் 62 பேரின் இறப்பு விவரத்தை முறையாகப் பட்டியலிட்டுத் தரு மாறு, இவ்வழக்கைத் தொடுத்த மனித உரிமை விழிப் புணர்வு இயக்கத்தின் இயக்குநர் மெய்ஹங்பாம் ராகேஷை உச்சநீதிமன்றம் கேட்டுள்ளது.

ராகேஷ் 'தி இந்து' ஆங்கில நாளேட்டின் செய்தி யாளரிடம் பேசிய போது, ''இந்தப் படுகொலைகள் குறித்து வழக்கமான முறையில் விசாரித்தால் நீதி கிடைக்காது. சிறப்பு விரைவு விசாரணை மூலமே நீதி கிடைக்க வாய்ப்புண்டு'' என்று கருத்துரைத்துள்ளார்.

ஆயுதப் படையின் சிறப்பு அதிகாரச் சட்டத்தை எதிர்ப் பவர்கள், உச்சநீதிமன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பை வரவேற்றுள்ளனர். ஆனால் உச்சநீதிமன்றத்தின் ஆணைகள் எந்த அளவுக்கு நடைமுறைப்படுத்தப்படும் என்பது நடுவண் அரசும் இராணுவமும் எடுக்கும் நடவடிக்கைகளைப் பொறுத்தே அமையும்.

**அதற்காகக் காத்திருக்காமல் மணிப்பூரிலும் ஜம்மு-காஷ்மீரிலும், சத்தீஷ்கரின் சில பகுதிகளிலும் நடப்பில் உள்ள ஆயுதப்படைகள் சிறப்பு அதிகாரச் சட்டத்தை உடனடியாக விலக்கிக் கொள்ள வேண்டும் என்றும், இச்சட்டத்தை அடியோடு நீக்க வேண்டும் என்றும் மனித உரிமைப் பாதுகாப்பிலும் சனநாயகத்திலும் அக்கறை கொண்டுள்ள அனைவரும் தொடர்ந்து போராட வேண்டும். போராட்டங்கள் மூலமே உரிமை களை வென்றெடுக்க முடியும் என்பது வரலாறு புகட்டும் பாடமாகும்.**

# புரட்சிப்பெண் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி

**மருத்துவர் க. சோமாஸ் கந்தன், M.D.,** கோவை



*டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி*

இன்று தமிழ்நாட்டில் அர்த்தம் கெட்டு, அசிங்கப் பட்டு, அவமானப்பட்டுப் புனிதம் கெட்டுப் போன சொற்கள் இரண்டு. ஒன்று, 'புரட்சி'. மற்றொன்று, 'அம்மா' என்பவையாகும்.

காலில் விழுவதே புரட்சியென எண்ணிக்கொண்டிருக்கின்ற வெட்கமற்ற மனிதர்கள் வாழும் நாட்டில் சோவியத் புரட்சி, சீனப்புரட்சி, கியூபாப் புரட்சி, வியட்நாம் புரட்சி, எகிப்துப் புரட்சி, பிரெஞ்சுப் புரட்சி ஆகிய புரட்சிகள் பற்றிய வரலாறுகளை அறிந்துகொள்ள வேண்டும் என்ற எண்ணம் எழ வாய்ப்பு இன்றி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள், நம்மவர்கள்.

நம்மிடையே வாழ்ந்து புரையோடிப்போன சமூகத்தைப் புரட்டிப்போட்டு மறைந்துபோன ஒரு பெண்ணின் புரட்சிகரமான வாழ்க்கை வரலாறு கீழே தரப்பட்டுள்ளது.

அந்த நாளில் இந்து சமூகத்தில் ஒரு கேடுகெட்ட நிலை இருந்து வந்தது. ஒரு குறிப்பிட்ட சாதியில் பிறந்த பெண்களைத் தேவதாசி என்ற பெயரில் பொட்டுக் கட்டிக் கோவிலுக்கு விட்டுவிடுவார்கள். இவர்கள் கோவில்களில் நடனமாடியும், பாட்டுப் பாடியும் வாழ்க்கை நடத்தி வந்தனர்.

தேவரடியார், பதியிலார், வேசையர், தாசிகள், கணிகைகள், நர்த்தகி, நடனமங்கை எனப் பல்வேறு பெயர்கள் சூட்டப்பட்ட பரிதாபப் பெண்கள் கோயில்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டார்கள். இந்தப் பெண்களுக்கு உடலில், திரிசூலம், ரிஷபகாளை, சங்கு, சக்கரம் போன்ற ஏதாவது ஒரு முத்திரை பதிக்கப்படும். கடவுள் சிலைகளுக்கு முன் உட்கார்ந்து தாலியைக் கட்டிக்கொள்ளக் கட்டாயப்படுத்தப்படுவார்கள். இம்முறை 'பொட்டுக்கட்டுதல்' எனப்பட்டது. கி.பி. நான்காம் நூற்றாண்டில் இருந்து இப்பழக்கம் இருந்து வந்தது. எட்டு, ஒன்பது வயதுப் பெண்கள் இவ்விதம் ஒடுக்கப்பட்டனர்.

கோயில்களில் இப்படி எல்லாம் நடந்தது என்பதை 1886ஆம் ஆண்டு முதலில் வெளியில் கொண்டு வந்தவர் ஜோசான் பட்லர். மதத்தில் தலையிடமாட்டோம் என்று விக்டோரியா மகாராணி வாக்குறுதி கொடுத்திருந்ததால், பிரிட்டிஷ் அரசு இதனைக் கண்டுகொள்ளவில்லை. மைனர் பெண்களை இப்படி ஈடுபடுத்தக்கூடாது என்றும், வயது வந்த பெண்களைக் கட்டாயப்படுத்தக்கூடாது என்றும் பிரிட்டிஷ் அரசு கூறியதே தவிர, தேவதாசி முறையை ஒழிக்க முன்வரவில்லை.

மேலும் செல்வச் செருக்குமிக்க சீமான் வீட்டு மைனர்களுக்கும், உயர்சாதி மக்கள் வீட்டுப் பிள்ளைகளுக்கும் கட்டிலறைப் பாவையராகவும் கட்டாயப்படுத்தப்பட்டனர். இது இந்து சமூகம் விதித்த விதி என்று அவர்கள் மனம் நொந்து வாழ்க்கையை நடத்தி வந்தனர். இவ்வாறு 1901ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்பு தேவதாசிகள் பற்றிக் குறிப்பிட்டுள்ளது.

இழிவான இத்தேவதாசி முறை பெண்களின் சுயமரியாதையையும், உரிமையையும், மனத்திண்மையையும் பெரிதும் பாதித்து வந்தது.

இம்முறையை எதிர்த்துப் பெரியார் பொதுமேடைகளில் பேசியும், பத்திரிகைகளில் எழுதியும் கருத்துப் புரட்சி செய்து வந்தார்.

பெரியாரின் கருத்துகளால் கவரப்பட்ட பெண்மணி இத்தேவதாசி முறையை ஒழித்துக்கட்ட உள்ளத்தில் உறுதி கொண்டார். அவர் தான் புரட்சிப் பெண்மணி டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி ஆவார்.

அக்காலத்தில் 1920ஆம் ஆண்டு வரை பெண்கள் தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிட உரிமை கிடையாது. பெண்களும் தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிடலாம் என 1920ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் சட்டம் இயற்றப்பட்டது. அதன் அடிப்படையில் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி சட்டமன்றத்திற்கு நியமிக்கப் பட்டார்.

**இந்தியாவில், முதன்முதலில், சட்டமன்றத்தில் ஒரு பெண் உறுப்பினர் இடம்பெற்றது தமிழ் நாட்டில்தான். 1926இல் சென்னை மாகாண சட்டமன்ற உறுப்பினராகவும், சட்டமன்றத் துணைத் தலைவராகவும் இவர் பொறுப்பு வகித்தார். இப்**

**பொறுப்புகளை இந்தியாவில் முதன்முதலில் வகித்த பெண்மணியும் இவரே.**

இவர் அங்கம் வகித்த அரசு நீதிக்கட்சி அரசாகும். அன்றைய முதல்வர் பனகல் அரசர் ஆவார். இவர் சூலை 11, 1921 முதல்-திசம்பர் 3, 1926 வரை முதல்வ ராக இருந்தார். அதன்பின் 1927 முதல் 1931 வரை டாக்டர் ப.சுப்பராயன் முதல்வராக இருந்தார்.

முத்துலட்சுமி ரெட்டி சென்னை மாகாணச் சட்ட மன்ற உறுப்பினராக இருந்த காலங்களில் சில புரட்சிச் சட்டங்களைக் கொண்டுவந்து நிறைவேற்றினார். அவற் றில், ''தேவதாசி முறை ஒழிப்புச் சட்டம்'', ''இருதார மணத்தடைச் சட்டம்'', ''பெண்களுக்குச் சொத்துரிமைச் சட்டம்'', ''பால்யவிவாகத் தடைச் சட்டம்'' போன்ற வை குறிப்பிடத்தக்கவை.

1927ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 5ஆம் நாள் மாகாணச் சட்டமன்றம் கூடுகிறது.

இன்றுபோல், அன்று விதி 110-இன்கீழ் அறிவிப்பு கள் கிடையா! மேசைத் தட்டல்கள் கிடையா! எதிர்க் கட்சியினரைப் பேச அனுமதிக்காது வெளியேற்றுதல் கிடையா! எதிர்க்கட்சியினரின் வெளி நடப்பும் கிடையா!

அன்றைய சட்டமன்றத்தில், அவையின் கண்ணியம் காப்பாற்றப்பட்டது. அன்று, டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி தேவதாசி முறையை ஒழிக்கச் சட்ட முன்வரைவு ஒன்றினைச் சட்டப்பேரவையில் தாக்கல் செய்தார்.

அதனை எதிர்த்து அன்றைய காங்கிரஸ் தலைவர் சத்தியமூர்த்தி ஐயர் பேசியது: ''தாசிக் குலம் தோன்றி யது நம்முடைய காலத்தில் அல்ல; நாமும் அந்தக் குலத்தைத் தோற்றுவிக்கவில்லை. வியாசர், பராசரர் காலத்திலிருந்து அந்தக் குலம் இருந்து கொண்டிருக் கிறது. இப்படிக் கூறுவதால் என்னைத் தாசிக்கள்ளன் என்றும் அழைக்கலாம். அதைப்பற்றி நான் கவலைப் படப் போவதில்லை. **தாசிகள் இல்லையென்றால் சமூகத் தின் ஒழுக்கம் கெட்டுவிடும். எனவே இச்சமூகம் கெட்டுச் சீரழியாமல் இருக்க, தாசிகள் தேவை என்பதை மீண்டும், மீண்டும் சொல்ல விரும்புகின்றேன். தாசிகள் கோயில் பணிக்கென்று ஆண்டவனால் படைக்கப்ப ட்டவர்கள். அது சாஸ்த்திர சம்பந்தமானது. தாசிகளை ஒழித்துவிட்டால், பரதநாட்டியக் கலையும், சங்கீதமும் அழிந்துவிடும். ஆண்டவன் கட்டளையை மீறுவது அடாத செயலாகும். அநியாயமாகும். இன்று தேவதாசித் தொழிலை நிறுத்தினால், இராமசாமி நாயக்கர் அர்ச்சகர் தொழிலை நிறுத்தச் சட்டம் செய்ய வந்துவிடுவாரே'' என்று பேசினார்.**

சத்தியமூர்த்தி, அந்நாளில் நாடறிந்த புகழ்பெற்ற, பேச்சாற்றல் மிக்க காங்கிரஸ் இயக்கத் தலைவர். அவர் இவ்விதம் கேவலமாகப் பேசுவார் என்று எவரும் நினைத்திருக்கவில்லை.

இவர் பேச்சுக்கு டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மிகத் தெளிவாகப் பதிலுரைத்தார். ''கனம் எதிர்க்கட்சித் தலைவர்




*அவ்வை இல்லம்*

அவர்கள் தேவதாசி ஒழிப்புத் தீர்மானத்தைத் தீவிர மாக எதிர்த்துப் பேசியுள்ளார். உங்களுக்கு அக்கா, தங்கைகள் இல்லையா? பெண்கள் இல்லையா? மனைவி இல்லையா? உங்கள் குடும்பத்திலிருந்து எந்தப் பெண்களையாவது இதுபோன்ற தொழிலுக்கு அனுப்புவீர்களா? இதுநாள்வரை, பிற்பட்ட சமூகப் பெண்கள் தேவதாசிகளாக இருந்து கடவுளுக்குப் பணியாற்றியது போதும். இனி கோயில் பணிக்காக ஆண்டவனுக்குச் சேவை செய்திட மேல்சாதிப் பெண் கள் பொட்டுக் கட்டிக்கொள்ள முற்பட்டால், மகிழ்ச்சி'' என்றார். அப்போது சட்டசபை அதிர்ந்து ஸ்தம்பித்து நின்றுவிட்டது.

எதிர்ப்புகளிடையே தீர்மானம் நிறைவேறியது. ஆண்டாண்டுக் காலமாகப் பெண்களுக்கு எதிராக நிலைத்து நின்ற கொடுமை நீங்கியது, முத்துலட்சுமி யின் கடும் முயற்சியால் அன்றோ! இவரன்றோ உண்மையில் புரட்சிப் பெண்மணி! வேறெவர் புரட்சிப் பெண் ஆவார்?

1927இல் டாக்டர் முத்துலட்சுமி தொடங்கிய போராட்டம், 1947இல் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார், சென்னை மாகாணத்தின் முதல்வரான பின்னர்தான் தேவதாசி முறை ஒழிப்புச் சட்டம் அமல் ஆனது.

டாக்டர் முத்துலட்சுமி பிறந்து வளர்ந்து வாழ்ந்த நாள்களில் பெண்கள் மிகக் கேவலமாக நடத்தப்பட்டனர். பெண்கள் அடிமைகளாக, புழுபூச்சிகளாக வாழ்ந்து வந்தனர். அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு என்று பள்ளிப் படிப்பு மறுக்கப்பட்டது. மடமையுடனும், மூடத்தனத்துடனும் வாழ்ந்து வந்தனர். பெண்களுக்கு முக்கியத்துவம் இல்லாத காலத்தில், பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக, புரட்சிப் பெண்ணாக அவர் தோன்றினார்.

புதுக்கோட்டை சமஸ்தானத்தில், திருக்கோகர்ணம் என்ற இடத்தில் 30-07-1886இல் நாராயணசாமி-சந்திரம்மாள் இணையருக்கு மூத்த மகளாகப் பிறந் தார். உடன் பிறந்தவர்கள் சுந்தரம்மாள், நல்லமுத்து என்று இரண்டு தங்கைகளும், இராமையா என்றொரு தம்பியும் ஆவர்.

இவரின் தந்தையார் நாராயணசாமி ஐயர். புதுக் கோட்டையில் மகாராஜா கல்லூரியில் முதல்வராகப் பணியாற்றினார்.

தாயார் சந்திரம்மாள் பிரபலப் பாடகர்; இசை வேளாளர் சமூகத்தைச் சேர்ந்தவர்.

முத்துலட்சுமி தனது நான்காவது வயதில் திண் ணைப் பள்ளிக்கூடத்தில் படிக்கத் தொடங்கினார். பின்னர் பள்ளியில் சேர்ந்து ஆறாம் வகுப்பை முடித்தார். அதன்பின் வீட்டிலேயே தனது தந்தையாரிடம் பாடங் கள் பயின்றார். தனியாக மெட்ரிக்குலேசன் தேர்வை எழுதி மாநிலத்திலேயே முதன்மை மாணவராகத் தேர்ச்சி பெற்றார்.

அக்காலத்தில் பெண்கள் பருவம் எய்திவிட்டால் வீட்டைவிட்டு வெளியே செல்ல அனுமதிப்பதில்லை. பின்னர் பள்ளி செல்வது எவ்விதம் இயலும்? ஆகவே அன்னை அவளுக்குத் திருமணம் செய்திட விரும்பினார்.

ஆனால், முத்துலட்சுமி கல்லூரியில் சேர்ந்து படித்திட விரும்பினார். கல்வி பயில்வதில் இவருக்கிருந்த ஆர்வத்தைக் கண்ட இவரது ஆசிரியர்கள், இவருக்குப் படிப்பதற்கு ஊக்கம் தந்தனர். இவரின் தந்தையிடம் தொடர்ந்து படிக்க வையுங்கள் என்று சிபாரிசு செய்தனர்.

புதுக்கோட்டை மகாராஜா கல்லூரியில் சேர்ந்து படிக்க விண்ணப்பித்தார். அக்கல்லூரியில் ஆண்கள் மட்டுமே படித்து வந்ததால், முத்துலட்சுமிக்கு அனுமதி தந்தால், ஆண் மாணவர்களின் ஒழுக்கம் கெட்டுவிடும் என்று கல்லூரி முதல்வர் காரணம் காட்டி அனுமதி அளிக்க மறுத்துவிட்டார்.

அதன்பின் முத்துலட்சுமியின் தந்தை, புதுக்கோட்டை மன்னர் மார்த்தாண்ட வைரவத் தொண்டைமானிடம் முறையிட்டார். முற்போக்கு எண்ணம் கொண்ட அரசர் சில கட்டுப்பாடுகளை விதித்து முத்துலட்சுமியை அனு மதிக்க ஆணையிட்டார். இறுதியாகக் கல்லூரியில் ஒரு திரைமறைவில் உட்கார்ந்து உயர்கல்வியைக் கற்றார். பல்கலைக்கழகத்தில் முதல் மாணவியாகத் தேர்வு பெற்று அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினார்.

இவருடன் அக்கல்லூரியில் சக மாணவராகப் பயின்றவர், சத்தியமூர்த்தி ஐயர் ஆவார். இவர் பின் னாளில் தமிழ்நாடு காங்கிரஸ் இயக்கத்தின் தலை வராகத் திகழ்ந்தவர் ஆவார்.

கல்லூரிப் படிப்பு முடிந்தது வெற்றிகரமாக!

“இனி என்ன செய்யப் போகிறாய்? படித்தது போதும். வயது ஏறிக்கொண்டே போகுது” - அன்னை.

“அதற்கு?” - மகள்.

“இனி இப்படியே விட முடியாது. காலாகாலத்தில் ஆகவேண்டியதைப் பார்க்க வேண்டும்” - அன்னை.

“அப்படி என்றால்?” - மகள்.

“நீ திருமணம் செய்து கொள்ள வேண்டும்” என்றார் அன்னை.

முத்துலட்சுமி தனக்குத் திருமணத்தில் நாட்டமில்லை என்று சொல்லி மேலும் படிக்கவே ஆர்வங்கொண்டார்.

இதன்பின் தந்தை, முத்துலட்சுமியை ஆசிரியப் பணிக்குப் பயிற்சி எடுத்துக் கொள்ளப் பணித்தார். அதில் முத்துலட்சுமிக்கு ஈடுபாடு இல்லை. அவரது இலட்சியம் அதைவிடப் பெரியது.

இதனை அறிந்த அவரது தந்தையின் நண்பர், முத்துலட்சுமியை மருத்துவம் படிக்க அறிவுறுத்தினார்.

அதன்பின், 1907இல் சென்னை மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து படிக்க முற்பட்டார். புதுக்கோட்டை மன்னர் அவர் படிப்பதற்குப் பொருளுதவி செய்தார்.

சென்னை மருத்துவக் கல்லூரி ஆண்களால் நிரம்பி இருந்தது. இருந்த பெண்களும் வெள்ளையராக இருந்தனர். திரை போட்டு மூடிய வாகனத்திலேயே முத்துலட்சுமி கல்லூரி வந்து செல்வார்.

கல்லூரிப் போசிரியர் கர்னல் ஜிப் போர்டு, தனது வகுப்பில் மாணவிகளை உட்கார அனுமதிக்கமாட்டார்.

அறுவை சிகிச்சைப் பாடத்தில் முழு மதிப்பெண்ணை முத்துலட்சுமி பெற்ற பின்னர்தான், பெண்களும் தன் வகுப்புக்குள் வரலாம் என மனம் மாறியுள்ளார்.

1912இல் முத்துலட்சுமி மருத்துவப் பட்டம் பெற்ற போது, ‘சென்னை மருத்துவக் கல்லூரியின் வரலாற் றில் இது பொன்னான நாள்’ என்று எழுதினார், கர்னல் ஜிப் போர்டு.

இந்திய வரலாற்றிலேயே மருத்துவப் பட்டம் பெற்ற முதல் பெண்மணி முத்துலட்சுமியே ஆவார்.

மருத்துவக் கல்லூரியில் பயிலுங்கால் டாக்டர் நஞ்சுண்டராவ் என்கின்ற தேசிய இயக்கத் தலை வரின் இல்லத்தில் மகாகவி பாரதியாரைச் சந்திக்கும் பெரும் பேறு பெற்றார். பாரதியார் முத்துலட்சுமியிடம் ‘பெண்ணுரிமை’ பற்றிச் சிந்திக்கவும் கட்டுரைகள் ஆக்கவும் பணித்தார்.

இதே காலக்கட்டத்தில் கவிக்குயில் சரோஜினி நாயுடு வைக் காணவும் அவருடன் பேசவும் வாய்ப்பினைப் பெற்றார். அவருடன் இணைந்து பெண்ணியக்கங் களைத் தோற்றுவிக்கவும், அவருடன் சேர்ந்து பணி யாற்றவும் வாய்ப்புப் பெற்றார்.

கல்லூரிக் காலத்தில், ‘காதல் கனவுகள்’ காணும் பருவத்தில் தேசியச் சிந்தனையும், பெண் விடுதலை குறித்தும் எண்ணியும் எழுதியும் வந்தார். மகளிர் மாநாடுகளில் பங்கேற்றுத் தன் கருத்துகளை, பெண்ணியச் சிந்தனைகளை சிறப்பாக எவரும் போற்றும் வகை யில் எடுத்தியம்பும் ஆற்றல் பெற்றிருந்தார்.

அந்நாளில் அவரைக் கவர்ந்த தலைவர்கள் காந்தி அடிகள், அன்னிபெசன்ட் அம்மையார், தந்தை பெரியார் ஆகியோர் ஆவர்.




*அடையாறு புற்றுநோய் மருத்துவமனையின் முகப்புத் தோற்றம்*

மருத்துவப் பட்டம் பெற்றதும், பயிற்சி மருத்துவராக எழும்பூர் தாய்-சேய் மருத்துவமனையில் முதல் பெண் மருத்துவராகச் சேர்ந்து பணியாற்றினார்.

அதன்பின், பிறந்த மண் - புதுக்கோட்டை அவரை வரவேற்றது. புதுக்கோட்டை அரசு மருத்துவமனையில் பணியைத் தொடர்ந்தார். புதுக்கோட்டையிலுள்ள எழை, எளிய மக்களுக்கான சேவையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். புதுக்கோட்டையைச் சுற்றி யுள்ள பட்டி தொட்டிகளிலுள்ள மக்கள் எல்லாம் இவர் கைகள் பட்டு நலம் பெற்றனர்.

அவரது வளர்ச்சியில், சேவையில் உள்ளம் மகிழ்ந்த பெற்றோர் அவருக்குத் திருமணம் செய்து வைக்க விரும்பினர்.

ஆனால்...

டாக்டர் முத்துலட்சுமிக்கோ, படிப்பிலும், மக்கள் சேவையிலும் இருந்த ஆர்வம், திருமணத்தில் இல்லை.

திருமணம் தனது சுதந்தரத்தையும் மக்கள் சேவை யையும் முடக்கிப் போட்டுவிடும் என்று அஞ்சினார்.

இருப்பினும், அன்றைய சென்னை மாகாண முதல்வர் மாண்புமிகு சுப்பராயலு ரெட்டியாரின் மகன் சுந்தர ரெட்டி, முத்துலட்சுமியின் தந்தையை அணுகி, ‘முத்துலட்சுமியின் மனம் அறிந்தவன் நான். அவரைத் திருமணம் செய்து கொள்ள மனங்கொண்டேன்’ என்று கூறிப் பெண் கேட்டார்.

அவரது விருப்பத்தை அறிந்த போது, முத்துலட்சுமி மூன்று நிபந்தனைகளை விதித்தார். அவை: 1. என்னைச் சரிசமமாக நடத்த வேண்டும். 2. என் விருப்பங்களுக் குத் தடையாக இருக்கக்கூடாது. 3. நான் சுதந்தர உணர் வோடு செயல்படுவதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும்.

சுந்தர ரெட்டி அந்நிபந்தனைகளை ஏற்றார்.

பிறகு, 1914 ஏப்ரலில் மூடநம்பிக்கை, அர்த்தமற்ற சடங்குகள் ஆகியவற்றைத் தவிர்த்துத் திருமணங்களை நடத்தி வந்த அடையாறு பிரம்ம சமாஜ சபையில், டாக்டர் முத்துலட்சுமி-டாக்டர் சுந்தர ரெட்டி திருமணம் நிறைவேறியது. இருவரும் சென்னையிலேயே பணி புரிந்தனர்.

இவ்விணையருக்கு இராம் மோகன், கிருஷ்ணமூர்த்தி என இரு மகன்கள். இராம் மோகன் திட்டக்குழுவில் பணியாற்றினார். டாக்டர் கிருஷ்ணமூர்த்தி அடையாறு புற்றுநோய் மருத்துவமனையை நிருவகித்து வந்தார்.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியின் அன்பான, தந்நல மற்ற மருத்துவச் சேவை, மக்கள் அனைவரையும் கவர்ந்தது. அவரது அறிவு, ஆற்றல், திறமை, ஓயா உழைப்பு ஆகியவற்றை அறிந்த சென்னை மாகாண முதல்வர் (பிரதமர்) பனகல் அரசர், (தென்னிந்திய நல உரிமைச் சங்கம்-நீதிக்கட்சியின் புகழ்பெற்ற தலைவர் களுள் ஒருவர்), உயர் கல்வி பயில இலண்டன் செல் வதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்து தந்தார். டாக்டர் முத்துலட்சுமி 1925இல் இலண்டன் சென்று அங்குள்ள செல்சியா மருத்துவமனையில் தாய்-சேய் மருத்துவ ஆராய்ச்சியும், இராயல் புற்றுநோய் மருத்துவ மனையில் புற்றுநோய் பற்றிய ஆராய்ச்சியும் செய்து வந்தார்.

இங்கிலாந்தில் இருக்கும்போது 1926ஆம் ஆண்டு பிரான்சு தலைநகர் பாரிசில் உலகப் பெண்கள் மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டில் இந்திய நாட்டின் பிரதிநிதியாக டாக்டர் முத்துலட்சுமி கலந்துகொண்டு உரையாற்றினார். அவரின் உரையில், “ஆண்களுக்கு நிகராகப் பெண்கள் முன்னேற வேண்டும். பெண்ணடி மைத்தனம் ஒழிக்கப்பட வேண்டும்” என்று வலியுறுத் தினார்.

தாயகம் திரும்பியதும், 1927இல் சட்டமன்ற உறுப் பினராக நியமிக்கப்பட்டார். சட்டமன்றத்தில் அவர் ஆற்றிய பணிகள் குறித்து முன்பே விளக்கப்பட் டுள்ளன.

இந்தியாவில் 1929ஆம் ஆண்டில் ஒத்துழையாமை இயக்கம் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது.

அப்போராட்டத்திற்கு ஆதரவாக டாக்டர் முத்துலட்சுமி சட்டமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகினார்.

பெண்களிடம் சுயமரியாதை உணர்வு எழ 'ஸ்திரி தர்மா' என்ற இதழை நடத்தினார். பெண்களுக்காகப் பாடுபட, "அனைத்து இந்தியப் பெண்கள் சங்கத் தை"த் தோற்றுவித்துப் பாடுபட்டார்.

**1930ஆம் ஆண்டு மே திங்கள் 10, 11ஆம் நாள் களில் ஈரோட்டில் இரண்டாவது மாகாண சுயமரி யாதை மாநாடு நடைபெற்றது. அதில் பெண்கள் மாநாட்டில் டாக்டர் முத்துலட்சுமி தலைமையேற்று ஆற்றிய உரை பெரியாரின் பாராட்டைப் பெற்றது.**

1933ஆம் ஆண்டில் சென்னையில் நடைபெற்ற நிர்மாண ஊழியர்கள் மாநாட்டில் கலந்துகொண்டு அம்மையார் ஆற்றிய உரை, மகாத்மா காந்தி அவர் களைப் பெரிதும் கவர்ந்தது. அதே ஆண்டில் அமெரிக் காவில், சிகாகோவில் நடைபெற்ற பெண்கள் மாநாட் டில் கலந்துகொண்டு பெண்கள் உரிமை குறித்து அரியதோர் உரை நிகழ்த்தினார்.

1937-1939 வரை சென்னை மாநகராட்சியின் நியமன உறுப்பினராக அம்மையார் பதவி வகித்து சென்னை நகரின் மேம்பாட்டிற்காக உழைத்தார். இவரது சிறப்பு மிக்க பணியினைக் கண்டு மாநகரத் தலைமை இவருக்கு 'ஆல்டர் வுமன்' (Alder-Woman) என்ற பட்டத்தைத் தந்து சிறப்பித்தது.

**அவ்வை இல்லம்**

தேவதாசி முறை ஒழிப்புச் சட்ட மசோதா சட்ட மன்றத்தில் 1929இல் நிறைவேறிய பின், அப்பெண் களைக் காப்பகத்தில் சேர்த்துக் கொள்ள விடுதிக் காப் பாளர்கள் மறுத்துவிட்டனர். அதனால் அப்பெண் களைத் தன் வீட்டிலேயே தங்க வைத்தார்.

இதன் விளைவாக, வாழ்வில் வழுக்கி விழுந்த வனிதையருக்கு வாழ்வளிக்கும் இல்லமாக அவ்வை இல்லத்தைத் தோற்றுவித்தார்.

நடத்தை தவறிய பெண்களுக்குப் பிறந்த குழந் தைகளைக் குப்பைத் தொட்டியில் வீசிவிடுவது வாடிக் கையாக இருந்து வந்தது. அத்தகைய அநாதைக் குழந்தைகளை எடுத்து வளர்த்து அவர்களுக்கு ஒளி மயமான எதிர்காலத்தை உருவாக்க உருவானதே அவ்வை இல்லம்.

இன்று பெருமையாகப் பேசப்படுகின்ற 'தொட்டில் குழந்தைத் திட்டம்', ஜெயலலிதாவின் மூளையில் உதித்த அற்புதத் திட்டம் என்று எண்ணுகின்ற தமிழ் மக்கள், இத்திட்டம் டாக்டர் முத்துலட்சுமி அவர்களால் அன்றே அவ்வை இல்லம் மூலம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்ற ஒப்பற்ற திட்டம் என்ற உண் மையை உணர்ந்து கொள்ள வேண்டும்.

பணிபுரியும் பெண்கள் தங்கும் விடுதியாகவும், குழந்தைகள் காப்பகமாகவும், ஆதரவற்று வாடிடும் முதியோர் பராமரிப்பு இல்லாமாகவும் அவ்வை இல்லம் செயல்பட்டு வருகின்றது.

அவ்வை இல்லத்தில், ஆதரவற்ற பெண்கள், குழந்தைகள், கல்வி பெற்றுத் தன்னம்பிக்கையுடன் வாழ்வில் சிறந்திட, தொடக்கப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, செவிலியர் பயிற்சிப் பள்ளி ஆகிய பள்ளிகள் செயல்படுகின்றன.

**புற்றுநோய் மருத்துவமனை**

1935ஆம் ஆண்டு சென்னை மருத்துவக் கல்லூரி யின் நூறாம் ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. அவ்வமயம் புற்றுநோய்க்குச் சிகிச்சையளிக்கச் சிறப்பு மருத்துவமனை உருவாக்க வேண்டும் என்று ஒரு தீர்மானம் கொண்டு வந்தார், டாக்டர் முத்துலட்சுமி. ஆனால், அத்தீர்மானத்திற்கு அரசின் ஒப்புதல் கிட்டவில்லை.

இருப்பினும் அவருடைய கனவு, இலட்சியம், அவரது பெருமுயற்சியால் 1952ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் அடையாறில், புற்றுநோய் மருத்துவ மனைக்கு அந்நாள் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அடிக்கல் நாட்டினார்.

1954ஆம் ஆண்டு சூன் 18ஆம் நாள் 12 படுக்கை களுடன் அம்மருத்துவமனை செயல்படத் தொடங்கியது. தற்போது ஏறத்தாழ 500 படுக்கைகள் கொண்ட பெரிய சிறப்பு மருத்துவமனையாகச் செயல்படுகிறது. அதில் சுமார் 300 படுக்கைகள் ஏழைகளுக்குச் சிகிச்சை அளிப்பதற்கென ஒதுக்கப்பட்டுள்ளன.

**ஆண்டு முழுவதும் 1,25,000 நோயாளிகள் தமிழகம் மட்டுமன்றி, பிற மாநிலங்களிலிருந்தும் வருகை தந்து சிகிச்சை பெறுகின்றனர்.**

**இவர் இந்தி மொழி எதிர்ப்புப் போர், தமிழிசை இயக்கம், தனித் தமிழியக்கம், தமிழாசிரியர் ஊதிய உயர்வு எனப் பல்வேறு களங்களில் பணியாற்றி யுள்ளார்.**

**1936ஆம் ஆண்டு சென்னை அடையாறில் குடியேறிய பின், முழு நேர மருத்துவப் பணியோடு, மீனவக் குழந்தைகளின் கல்விக்காகவும் பாடுபட்டார். படிக்கும் மாணவர் பயனுற நூலகங்கள் தோற்றுவித் தார். மருத்துவர் சௌந்திரம் இராமச்சந்திரன் துணை யோடு காந்தி கிராமப் பணிகளைத் தொடங்கினார்.**

**20ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மிகப்பெரிய பெண் சமூகப் போராளி, பெண்களின் சிறுமையைப் போக்கவும் அவர்கள் மேன்மையடையவும் தன் வாழ் நாளை அர்ப்பணித்துக் கொண்ட பெண் புரட்சியாளர் டாக்டர் முத்துலட்சுமி அம்மையார், அகவை 82இல் 1968, சூலை 22ஆம் நாள் இயற்கை எய்தினார்.**

**அவர் மறைந்தாலும் அவரது தொண்டின் மேன் மையை அவ்வை இல்லமும், அடையாறு புற்றுநோய் மருத்துவமனையும் உலகினர்க்கு உணர்த்திய வண்ண முள்ளன!**

**வாழ்க டாக்டர் முத்துலட்சுமி அம்மையாரின் தெண்டும் புகழும்!**

# பயங்கரவாதமும் வெடிகுண்டுக் கலாச்சாரமும்

- இராமியா

ஈராக் அதிபர் சதாம் உசேன் பேரழிவு ஆயுதங்களை வைத்துக் கொண்டு உள்ளதாகக் கூறி, அமெரிக்கா, பிரிட்டன் உட்பட பல முதலாளித்துவ நாடுகள் கூட்டுச் சேர்ந்து, ஈராக் மீது போர் தொடுத்தன. ஈராக் மீதான போரில் வெற்றி பெற்ற உடன் அவை அழிக்கப்படும் என்று அந்நாடுகள் உறுதி கூறின.

இப்போரில் இரு பக்கங்களையும் சேர்ந்த போர் வீரர்கள் மட்டும் அல்லாது, பதினைந்து இலட்சத்திற்கும் அதிகமான ஒன்றும் அறியாத அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர். அப்படி ஒரு கொலை பாதகத்தைப் புரிந்து விட்டு, ஈராக் நாட்டை இராணுவ ரீதியில் வென்ற பின், அந்நாட்டில் பேரழிவு ஆயுதங்கள் எவ்வளவு இருக்கின்றன என்று தெரிந்து கொள்ள உலக மக்கள் ஆர்வம் கொண்டு இருந்தனர். ஆனால் ஈராக் நாட்டில் இருந்து எந்த ஒரு பேரழிவு ஆயுதத்தையும் இன்று வரை கண்டு பிடிக்கமுடியவில்லை. அவர்கள் செய்தது எல்லாம் ஈராக் இராணுவத்தை வலுவிழக்கச் செய்தது மட்டும் தான். இது எப்படிப்பட்ட விளைவை ஏற்படுத்தி இருக்கிறது தெரியுமா? இதைப் பற்றி 7.7.2016 அன்று, பிரிட்டிஷ் வெளியுறவுத் துறை அமைச்சராக இருந்த பிலிப் ஹமேண்ட் (Philip Hammond) தன் அமைச் சரவை அதிகாரிகளுடன் பேசி இருக்கிறார்.

அரபு நாடுகளில் மறுமலர்ச்சிக் கட்சி (Ba'ath Party) என்ற அமைப்பு ஒற்றுமை, விடுதலை, சோஷலிசம் என்ற கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு உருவாகி இருக்கிறது. இவ்வமைப்பினர் இஸ்லாமிய மதக் கொள்கையில் இருந்து வெளிவராவிட்டாலும், மார்க்சியம் தான் மனித குலத்திற்கு விடுதலை அளிக்கும் தத்துவம் என்று உணரத் தொடங்கி இருந்தனர். இவ்வமைப்பினருக்கு ஈராக் இராணு வத்தில் கணிசமான அளவிற்குச் செல்வாக்கு இருந் திருக்கிறது. அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் பிற ஏகாதி பத்திய நாடுகள் ஈராக் மீது வெற்றி கண்ட பின், மிக முக்கிய வேலையாக ஈராக் இராணுவத்தில் மறுமலர்ச் சிக் கட்சியின் செல்வாக்கை ஒழித்து இருக்கின்றன. இதனால் தத்துவத் திசை காட்டியை இழந்த இராணுவ வீரர்கள் இஸ்லாமிய அரசு (I.S. - Islamic State) எனும் பயங்கரவாத அமைப்பினால் கவரப்பட்டு உள்ளனர்.

இன்று உலகை அச்சுறுத்திக் கொண்டு இருக்கும் இஸ்லாமிய அரசு எனும் அமைப்பின் கொடுஞ் செயல் களுக்கு எதிராக இஸ்லாமிய மக்கள் தான் மற்ற அனைவரையும் விட மிக வலுவாகப் போராடிக் கொண்டு உள்ளனர்.

**இந்த இஸ்லாமிய அரசு எனும் பயங்கரவாத அமைப்பு வளருவதற்கு ஈராக் மீதான போர் மிக முக்கிய காரணம் என்று பிலிப் ஹமேண்ட் கூறி இருக்கிறார்,**

இதே போன்ற நிகழ்வு ஒன்று இந்தியாவிலும் நடந்து இருக்கிறது. பாபர் மசூதி இடிக்கப்படுவதற்கு முன்னால், இந்திய மக்களுக்கு விளையாட்டுத் துப்பாக்கி, ஊசி வெடி, குருவி வெடிகளும்தான் தெரிந்து இருந்தன. ஆனால் பா.ஜ.க.வினர் பாபர் மசூதியை இடித்த பின் சமாதான முறையில் மட்டுமே பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும் என்ற கொள்கை உடையவர்கள் மதிப்பிழந்து போயினர். துப்பாக்கி, வெடிகுண்டு கலாச்சாரங்கள் தோன்றி நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே இருக்கின்றன.

சதாம் உசேன் பேரழிவு ஆயுதங்களைக் குவித்து வைத்து இருக்கிறார் என்ற இம்மி அளவும் உண்மை கலவாத-பொய்யான குற்றச்சாட்டின் அடிப்படையில் ஏகாதிபத்திய நாடுகள் ஈராக் மீது போர் தொடுத்தன. இதன் விளைவாக உலக அரங்கில் பயங்கரவாதிகளின் தலைமையில் இஸ்லாமிய அரசு எனும் அமைப்பு உருவாகி, வளர்ந்து இன்று உலக மக்களை அச் சுறுத்திக் கெண்டு இருக்கிறது.

பாபர் மசூதி இருந்த இடத்தில் தான் இராமர் பிறந்தார் என்று இம்மி அளவும் உண்மை இல்லாத-பொய்யான கற்பனைகளைப் புனைந்து கூறி, பா.ஜ.க.வினர் பாபர் மசூதியை இடித்தனர். அதன் விளைவாக இன்று இந்தியா முழுவதும் துப்பாக்கி வெடிகுண்டுக் கலாச்சாரங் கள் உருவாகி, வளர்ந்து இந்திய மக்களை அச்சுறுத்திக் கொண்டு இருக்கின்றன.

**இஸ்லாமிய அரசு எனும் பயங்கரவாத அமைப்பு உருவாகி வளர்ந்து உள்ளதால், அவ்வமைப் பினரும் அதை உருவாக்கிய ஏகாதிபத்தியவாதி களும் பாதிக்கப்படுவதை விட, அப்பாவிப் பொது மக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள்.**

அதே போல் இந்தியாவில் துப்பாக்கி வெடிகுண்டுக் கலாச்சாரங்கள் வளர்ந்ததினால் அவ்வமைப்பினரும், அது உருவாகி வளரக் காரணமான பார்ப்பன-பார்ப்பனிய ஆதிக்கவாதிகளும் பாதிக்கப்படுவதை விட, அப்பாவிப் பொது மக்கள் மிகவும் பாதிக்கப்படு கிறார்கள்.

ஆகவே இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் பொறுப்பு பொது மக்களுக்கு உண்டு

ஏகாதிபத்தியவாதிகள் முதலாளித்துவப் பொருளாதார உற்பத்தி முறை தொடர்ந்து உயிர்ப்புடன் இருக்க

வேண்டும் என்று முனைப்புடன் இருப்பதாலேயே, பயங்கரவாதத்திற்கு ஒரு முடிவு காண முடியாமல் திணறுகின்றனர். அதை மேலும் மேலும் வளர்த்துக் கொண்டு இருக்கின்றனர்.

பார்ப்பன ஆதிக்கவாதிகள் பார்ப்பன ஆதிக்கம் தளர்ந்துவிடக் கூடாது என்று முனைப்புடன் இருப்பதாலேயே துப்பாக்கி, வெடிகுண்டுக் கலாச்சாரங்களுக்கு ஒரு முடிவு காண முடியாமல் திணறுகின்றனர்; அவற்றை மேலும் மேலும் வளர்த்துக் கொண்டு இருக்கின்றனர்.

**இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் பொறுப்பு உள்ள மக்கள், முதலாளித்துவப் பொருளாதார உற்பத்தி முறையைக் காவு கொடுத்து விட்டு சோஷலிசப் பொருளாதார உற்பத்தி முறையை நிறுவுவதற்கான கருத்தியலை வளர்த்து எடுக்க வேண்டும். மேலும் பார்ப்பன ஆதிக்க அரசை ஒழித்து விட்டு, ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களின் அரசை நிறுவுவதற்கான கருத்தியலை வளர்த்து எடுக்க வேண்டும்.**

**இவையே பயங்கரவாதத்தையும், துப்பாக்கி வெடிகுண்டுக் கலாச்சாரங்களையும் வெற்றி கொள்ளும் சரியான வழிகளாகும்.**

## மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டுக் கட்சியின் முதுபெருந்தலைவர் சங்கரய்யாவின் துணைவியார் நவமணி அம்மாள் மறைந்தார்



மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டுக் கட்சியின் முதுபெருந் தலைவர் தோழர் சங்கரய்யா (95) அவர்களின் அன்புத் துணைவியார் தோழியர் நவமணி அம்மாள் (92) அவர்கள், 4.7.2016 அன்று பிற்பகல் மறைவுற்றார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தம் துணைவியாரை இழந்து துயருறும் பெருந் தலைவர் சங்கரய்யா அவர்கட்கும், அன்னையாரை இழந்து துயரடையும் அவர்தம் மக்கட்கும் மா.பெ.பொ.க. சார்பிலும், ‘‘சிந்தனையாளன்’’ ஆசிரியர் குழு சார்பிலும் ஆழ்ந்த இரங்கலை உரித்தாக்குகிறோம்.

மறைந்த நவமணி அம்மையாருக்கு நம் செவ்வணக்கம்!

## நூல்கள்

நூல் நூலாயிருந்தவரை
நூல்கள் பெருமைக்குரியனவாயிருந்தன

பஞ்சைத் திரித்த
நூல்களுக்குப் பதிலாய்
நஞ்சைத் திரித்த நூல்களால்தான்
வேறுவேறு வர்ணங்களானது
வெண்மை!

சாயம் ஏற்றப்பட்ட
நூல்களிலிருந்து தொடங்குகிறது
நிறபேதங்களின் நிறுவனமயம்

பஞ்சு ஆடைகளை
பஞ்ச ஆடைகளாய் ஆக்கிவிட்டது
உலகமய மானம்காத்த
டெர்லினும் டெரிகாட்டனும்

இராமாயணம்
கலந்துவிட்டது போலவே
இரசாயணமும் கலந்துவிட்டது
நூல்களில்

இப்போதெல்லாம்
நாகரிக நஞ்சைப் பரப்பும்
நச்சுக் கருவிகளாகிவிட்டன
நூல்கள்!

**உடுத்தாலும்
படித்தாலும்
எது உயர்வுதருகிறதோ
அதுவே நூல்!
ஆனால்...நூல்களோ
ஊடக போதையை
உள்வாங்கிய நூல்கள்
இப்போதெல்லாம்
விளம்பர றெக்கை கட்டியே
விற்பனைக்கு வருகின்றன**

கண்காட்சி எனும் பெயரில்
நூல்கள் இப்போது
நூதனக் கொள்ளையடிக்கின்றன

நூல் நூலாயிருந்தவரை
நூல்கள் பெருமைக்குரியனவாயிருந்தன

இயற்கையாய்ச் செய்த நூல்கள்
உடலுக்கும் உள்ளத்துக்கும்
உதவியாய் இருப்பன

மானத்தையும் மனிதனையும்
பிரித்துக்காட்டுகின்றன
வர்ணம் கலந்த நூல்கள்!

**ஏற்றுக்கொள்ளத் தக்கதாயிருக்கிறது
வள்ளலாரின் வர்ணம் நீங்கிய
வெண்மை நூல்!**

ஒரு சல்யூட்டும்
சொல்லிவைக்கலாம்
ராம்ராஜ்க்கு!

- பாவலர் வையவன்

# "பாரத தேவி" பகுத்துணருமா?

## (ஆம்பூர் சீ.கோ. ஜெயராமுலு)

**து**ருக்கி தூதுகோஷ்டி சம்பந்தமாக தேவி தீட்டிய துணைத் தலையங்கத்தை அறிவைக் கொண்டு அவசியம் பார்ப்போமேயானால், இந்த ஞானம் இதற்கு எப்பொழுது வந்தது என்றோ, யாருக்கு இந்த உபதேசம் என்றோ எண்ண வேண்டியிருக்கிறது. ஊருக்கு உபதேசம் செய்ய வந்த உத்தம தேவி, தனக்கும், உற்ற உறவினர்களாகிய காங்கிரஸ் தோழர்களுக்கும் அந்த உபதேசம் பயன்படுமா என்பதுதான் நமது கேள்வி. அதனுடைய உபதேசம் அறிவு கலந்த உபதேசம் தான். அது உபதேசிக்கும் முறையில் அரசியலில் மதத்தைப் புகுத்தலாகாது என்ற சீரிய நோக்கம் அந்தத் தாளுக்குரியோர்களும், அத்தாளை ஆதரிக்கும் காங்கிரஸ் தோழர்களும் ஏற்றுக்கொண்டார்களா? அல்லது ஏற்க முற்படுவார்களா? என்று, அத்தாசன் தலைப் பெயரைக் கொண்டே முடிவுகட்டப் போனால், குதிரைக் கொம்பாகத்தான் முடியும். ஏனென்றால் பல மதத்தினர்களும், பல மொழியினர்களும் கொண்ட இப்பரந்த உபகண்டமாகிய இந்நாட்டின் அரசியல் ஞானத்தை அள்ளி வீசுவதாகப் பறைசாற்றிக் கொள்ளும் தேசியத் தாள்களும்-ஏன்? குறிப்பாக "பாரத தேவி" என்ற தாள், தன் பெயர் தேச சம்பந்தமான குறிப்புப் பெயராகிய பரதன், பாரதம் என்கின்ற சொற்களினின்று வந்தது என்று உணர்ந்த பிறகும், தன் பெயரை மாற்றி உபதேசிக்கும் அளவில் நிற்குமா என்பது சந்தேகத்திற்கு இடமாகவே இருக்கின்றது.

அதுதான் போகட்டும். அது அன்றாடம் அள்ளி வீசும் அரசியல் ஞானமாகிய காந்தியமும் காங்கிரஸ் வேலைத் திட்டங்களும் எதனை அடிப்படையாகக் கொண்டு இருக்கின்றது? ஆத்மார்த்த சம்பந்தமான மதப்பிரச்சாரத்தின் பதமல்லவா? "மஹாத்மா" என்ற அடைமொழி காந்தியாருக்குத் தந்து காங்கிரஸ் வியாபாரம் நடத்தி வருகிறார்கள். இக் கலிகாலத்தில் அவர்தான் அவதாரம் செய்திருக்கிறார் என்றும், அவர் விரும்பும் இராஜ்யம் (ஆகிய) ஹிந்து தர்மமாகிய வர்ணாஸ்ரம தர்மத்தை அடிப்படையாகக் கொண்ட ராமராஜ்யம் என்னும் அத்திட்டத்தைக் கொண்ட வார்தா கல்விப் படிப்பும், மஹாத்மா சிறையினின்று மாயமாகப் போய்விட்டார் என்பதும், மஞ்சள் பெட்டி மகத்துவமும், தீபாவளிக்கு எண்ணெய் ஸ்நானம் செய்து கதர் வாங்குங்கள் என்றும், ஹரிஜனத் தொண்டு என்றும், அந்தம்மாளின் மக்கள் 40 கோடி மக்களாகிய நாம் என்று யார் சொல்லி வருகின்றார்கள் என்று வாசகர்களே முடிவு கட்ட வேண்டிய பிரச்சனையுமாகும்.

இதுவும் தவிர மதச்சம்பந்தமான தேர் திருவிழாக்களில் காந்தியங்களும் காங்கிரஸ் கொடிகளும் உபயோகிப்பது, கற்பூர ஆராதனைகள் நடத்துவது, வந்தே மாதரப் பாடல்கள் பாடுவது ஏன்? அரசியல் அறிவுமிக்க ஆச்சாரியார்கள் கூட அரசாங்கத்தில் சட்டங்கள் இயற்றுவது, அதனை ஆதரிக்கும் முறையில் காணாதது கண்டோம் எனத் தலையங்கங்கள் எழுதுவது, இவைகளைப் படித்துப் பரவசமடையும் பாமர மக்கள் மத சம்பந்தமான திருமணங்களில் கதர் திருமணங்கள் என்றும், காந்தி உருவப்படங்களுடன் திருமணத் தாள்களும் வாழ்த்துப் பாக்களும் நடத்துவது என்றால் தேவி தீட்டிய தெளிந்த ஞானத்திற்கும் மேற்படி குறித்த செயல்களுக்கும் ஒப்பிட்டுப் பார்ப்போமானால் மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசமாக மாத்திரமல்ல, ஊருக்கு உபதேசித்தேனே தவிர, உமக்கா சொன்னேன் என்ற புராணிகர் கதை தான் ஞாபகத்திற்கு வருகிறது.

**மதத்துடன் அரசியலைப் புகுத்தலாகாது என்ற அறிவான தொண்டில் ஈடுபட்ட ஈ.வெ.ரா. இயக்கத்தினர்களாகிய இந்நாட்டின் சுயமரியாதை இயக்கத்தினர்களை இழிவுபடுத்தவில்லையா? நாஸ்திகர்கள் என்றல்லவோ நாத்தழும் பேறவும் பத்திகள் நிறையவும் பழித்து வந்தார்கள்.**

இவ்வளவையும் சோற்றில் மறைத்த பூசணிக்காய் போன்று பத்தினிப் பேச்சு பேசுவது நாணயமா என்று நாம் கேட்கின்றோம்.

நம்மைத்தான் போகட்டும்-தேவி திருத்த முயலும் முஸ்லிம் லீக் தலைவராகிய முகம்மதலி ஜின்னாவை விட்டார்களா? தாடியில்லை, கோட் போட்டுக் கொள்ளுகிறார். பிற மதத்தினரை மணந்தார். ஆதலால் அவர் இஸ்லாமல்ல. அவரை இஸ்லாமியத் தலைவராக ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று பிளவு ஏற்படுத்த முயலவில்லையா என்று கேட்கின்றோம்.

**தேவக்கூட்டத்தாராகிய தேசியவாதிகள் "தேசத் துரோகிகள்" தெளிந்து முடிவு கட்டிய உபதேசமாகிய "அரசியலில் மதத்தைப் புகுத்தலாகாது" என்ற கொள்கையை ஏற்று நடப்பார்களேயானால், எளிதில் இந்நாட்டின் விடுதலை பெறுவார்கள் என்பதில் சந்தேகமில்லை.**

(- "விடுதலை", 1.2.1943)

கட்டுரைத் தொடர்-42

# திராவிடர் இயக்கங்கள்; தமிழ்த் தேசியத்திற்குத் தடைக்கல்லா? படிக்கல்லா?

- வாலாசா வல்லவன்



### சென்னையில் ஈ.வெ.ரா. சிறை சென்ற தாய்மார்களுக்குப் பாராட்டு

சென்னை, பெத்துநாயக்கன்பேட்டைத் தமிழர் கழகத்தின் ஆதரவில் 14-11-1938 அன்று நடைபெற்ற 5000 மக்கள் கொண்ட பொதுக் கூட்டத்தில் பெரியார் ஈ.வெ. ராமசாமி பேசியதாவது :

தாய்மார்களே! தோழர்களே!

அருமைச் சிறுவன் லூர்து சாமியும், சகோதரி பார்வதியம்மையாரும் பேசிய பேச்சு என் மனதை உருக்கிவிட்டது. அதனால் நான் பேசக்கருதியிருந்ததை மறந்தேன். நிற்க. காலை நடைபெற்ற சம்பவம் நடக்குமென்று நான் நினைக்கவில்லை. இரண்டு குழந்தைகளுடன் சென்ற 5 தாய்மார்கட்கும், 2 தொண்டர்கட்கும் 6 வாரம் தண்டனை விதிக்கப்பட்டது. இன்று ஒரு முத்துக்குமாரசாமிப் பாவலருக்கு 18 மாதம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. எனவே இந்த நாள் மிக வன்மத்துடன் மனதில் வைக்க வேண்டிய நாளாகும். உண்மையுடன் சிறை செல்பவருக்கு அங்கு ஒருவித கஷ்டமுமில்லை. கஷ்டமென்று நினைப்பவர்க்கு வெளியில் கூடக் கஷ்டமாய்த் தானிருக்கும். என் அனுபவத்தில் 5, 6 முறை சிறை சென்றிருக்கின்றேன். 18 ஆண்டுகளுக்கு முன் நான் சிறைசென்ற காலத்து மூத்திரம் கழிப்பது, தண்ணீர் குடிப்பது எல்லாம் ஒரே சட்டியில்தான். அவ்வளவு கொடுமையாக இருந்தது. கேள்வி முறையில்லை. ஆனால் இன்றைய சிறையோ பெரிதும் மாற்றமடைந்துள்ளது. காங்கிரஸ்காரார் சிறை சென்ற காலத்துப் பெருங் கூச்சலிட்டு, வேண்டிய வசதிகள் செய்துவிட்டார்கள். அங்குள்ள சில அதிகாரிகள் ஒருவித வன்மத்துடன் பார்த்தால், சிறிது கஷ்டம். உண்மையாகவே நடப்பார்களானால் சிறை செல்பவர்கட்கு ஒருவிதத் தொல்லையும் இல்லை. சிறையில் வார்டர்கள் நேசிக்கிறார்கள். சில அதிகாரிகள் மட்டும் வகுப்பு கருதி நம்மை வெறுக்கின்றார்களெனக் கேள்விப்படுகின்றேன்.

### கடின மனம் மாறும் விதம்

வீட்டில் ராஜாவாயிருந்தாலும் தினம் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் உணவு கிடைப்பதில்லை. சிறையில் ஏழையானாலும் நேரத்தில் உணவு; மணியடித்தால் சாப்பாடு (கைதட்டல்). அப்படிக் கஷ்டமென்றே வைத்துக் கொள்வோம். சாப்பாட்டை நினைத்தா சிறைக்குப் போகின்றோம்? காரியத்தின் மேலுள்ள ஊக்கம் உணர்ச்சி அல்லவோ நம்மைப் பிடித்துத் தள்ளுகிறது. யார்மேலும் கோபத்தாலோ அன்றி விரோதத்தாலோ நாம் சிறை செல்லவில்லை. தமிழர்கட்கு ஒரு சமூகத்தாரால் செய்யப்படும் இன்னல்களை, தொல்லைகளை ஒழிக்கவே செல்ல நேரிடுகிறது. நீங்கள் இந்தியை எதிர்ப்பது உண்மையானால், ஆயிரக்கணக்காகச் சிறை செல்ல வேண்டும். இந்நிலையில் கவர்னர் கெட்டவருமல்ல; அவ்வளவு முட்டாளுமல்ல. அவருக்கு இன்னும் தமிழர்கள் இந்தியை உண்மையில் எதிர்க்கின்றார்களா என்பது சந்தேகமாகவிருக்கின்றது. எனவே அவருக்கு நன்றாகத் தெரிவிப்பதற்காக, பல்லாயிரக்கணக்கானவர்கள் சிறை செல்ல வேண்டும். பட்டினி கிடக்கச் செல்ல வேண்டும். ஒரு சிறிதும் நன்மை கேட்கக் கூடாது. இந்த உணர்ச்சி தமிழர்கட்கிருந்தால் அவர்களது கடின மனம் மாறும். தோழர் ஆச்சாரியார் புத்திசாலி. அவர் மனத்தில் இன்னும் படவில்லை. அவர் கூறுகின்ற மாதிரி, நீங்களும் சில சமயங்களில் உணர்ச்சி மிகுதியில் நானே தான் என்று கூச்சல் போட்டு விடுகின்றீர்கள். இந்தி எதிர்ப்பை விட்டு ராமசாமி ஓடினாலும் நாங்கள் விடப்போவதில்லை என்று காட்டினீர்களானால் அவர் இந்தியை விட்டுவிடுவார்.

### ஆச்சாரியாருக்கு நடுக்கம்

இன்று பெண்கள் 5 பேர் கைது செய்யப்பட்டார்கள் என்பதைக் கேட்டவுடன் ஆச்சாரியருக்கு நடுக்கமேற்பட்டிருக்கும். மேலும் அவர்கள் உற்சாகத்துடன் சிறைக்குச் சென்றனர் என்பதைக் கேட்க அளவுக்குமீறி நடுங்கி இருப்பார். இன்று கோர்ட்டில் தாய்மார்கள் இந்தி ஒழிய வேண்டும் - அல்லது நாங்கள் ஒழிய வேண்டும் என வீரத்துடன் பதில் கொடுத்தார்கள். ஆனால் ஆச்சாரியார் இனி வேறு பெண்களில்லை எனச் சமாதானப்பட்டிருப்பார். யாராவது துர்மந்திரிகளும் அவ்வளவுதான்-இனிப் பெண்கள் வரமாட்டார்கள் என்று கூறியிருப்பார்கள். இல்லாவிட்டால், நான் பழகியவரை ஆச்சாரியார் இப்படிக் கவலையில்லாதிருக்கமாட்டார். மேலும் 2, 3 சாமியார்கள் தான் இருக்கிறார்கள்; சிலர் தான் எதிர்க்கின்றார்கள் என்று அவர் கருதக் கூடாது. அதற்காவன நீங்கள் செய்ய வேண்டும். தோழர் பொன்னம்பலம் அவர்கள் கூறியதுபோல். ஒன்றரை ஆண்டில் 4.5

கோடி கடன் வாங்கிவிட்டனர். அதைப் பார்த்து கவர் னருக்கு இப்பொழுதுதான் சிறிது தலை வலிக்க ஆரம் பித்திருக்கின்றது. இது 2 நாளில் நின்றுவிடும் என ஆச்சாரியார் நினைக்கின்றார்.

நாட்டில் இந்நிலையை அவர் உண்டாக்கி இருக்கா விட்டால், இவர்கள்-எனது தாய்மார்கள் முன் வந்திருப் பார்களா? தாய்மார்கள் வந்து எங்கட்குப் புத்தி கற்பிக்க - ஊக்கமூட்ட - வேண்டுமென்றால் இது யாருடைய தர்மம்? தோழர் ஆச்சாரியார் அளித்தது தானே! அவர் அன்புடன் நல்கியது தானே! உண்மையோடு உழைப் பதன் மூலம் வெற்றியடைந்து, இனி தமிழர்களிடத்து 'வால் நீட்டக்கூடாது' என்ற எண்ணத்தை அவர்கள் அடையுமாறு செய்ய வேண்டும். தமிழர்கள் - தமிழ்ப் பெண்கள் - சரியாகக் கவனிக்கவில்லை என்று தான் அவர் கொடுமை செய்து வந்தார். இப்பொழுது சற்று யோக்கியமாக நடந்து வருகிறார். தமிழர்கள் வெறுப் பிற்குப் பயந்து பல் பிடுங்கப்பட்ட பாம்பைப் போல் இரகசியங்களில் காரியங்கள் செய்து வருகிறார். இன்றைய தாய்மார்களைப் போல் நாமும் நடந்தால் நமது தொல்லைகள் நீங்கும். சிறை செல்லச் சிறிதும் பயப்படக்கூடாது. இத்தகைய நிலையில் பெண்களைச் சிறையிட்ட அரசு எங்கும் கிடையாது. **அரசாங்கத் திற்கு விரோதமாக ஏதாவது குற்றம் செய்தால், சட்டத்தை மீறினால் தண்டனை உண்டு. ஆனால் இன்றைய ராம ராஜ்யத்தில் தாய்மொழியிடத்து அன்பு கொண்டால் போதும்-உடனே சிறைத்தண் டனை. நமக்குப் பல காலமாகத் தொல்லை கொடுத்து வருவதோடில்லாது வீணே இன்று சிறை என்றால் என்ன நினைப்பது?**

## தமிழன் வாழ்வு அவருக்குப் பொறுக்கவில்லை

நேற்றுவரை சட்டமீறலைத் தவறெனக் கண்டித்து வந்தேன். பொதுமக்கள் மனதை அவ்வாறு வளர்க்கக் கூடாது என நினைத்து வந்தேன். இனி நீங்கள் சிறைக் கூடத்தை மாமனார் வீடுபோலவும், படுக்கையறை போவும் எண்ணிச் செல்லுங்கள். நீங்கள் வேறு ஒன்றும் செய்ய வேண்டுவதில்லை. ஒருவரை வையவோ அன்றி அடிக்கவோ வேண்டுவதில்லை. 'தமிழ் வாழ்க' என்றால் போதும் உடனே 'தம்பி! வா'வென ஆச்சாரி யார் அழைத்துக் கொள்ளுவார். நான் பிழைக்க வேண்டும் என்று நினைத்தால் போதும்; எதிரிகள் சாக வேண்டுமென நினைக்க வேண்டாம்.

தமிழன் வாழ்வு அவர்கட்குப் பொறுக்கவில்லை. என்றென்றும் நம்மை அடக்கி அடிமைப்படுத்தி ஆளவே விரும்புகின்றார்களென்று சென்ற 20 ஆண்டுகளாகச் சொல்லி வருகின்றேன். பனகல் அரசர் வெற்றி பெற்ற காலத்துப் 'பனகல் இறந்தார்' என ஒரு செய்தியைப் பரப்பிப் புகையிலை வழங்கினர். ஜஸ்டிஸ் மந்திரி களை இராட்சதர்களென்றும், அரக்கர்கள் என்றும், இராவணர் என்றும் கூறினர். ஆனால் இன்று 'உச்சிக் குடுமி ஒழிக' எனத் தொண்டர்களேக் கூறினார் களென்று ஆச்சாரியார் தனது உச்சிக்குடுமியைத் தொட்டுப் பார்த்துக் கொள்கிறார். உச்சிக்குடுமி ஒழிக என்றால், என்ன? உச்சிக்குடுமித் தன்மை தானே ஒழிய வேண்டுமென்பது-இதற்கு இவ்வளவு ரோஷம் வருவானேன்? சிறிதாவது ஞானம் வேண்டாமா? அன்று 'சரிகைக் குல்லாய் ஒழிக' என்று இவர்கள் சொல்லவில்லையா? 2000 - தர்ப்பையோ அன்றி உச்சிக்குடுமியோ ஒழிக என்றாலும் ஒரு அரக்கன் ஒழிய என்றதற்குச் சரியாகாதே! (கைதட்டல்). பிறன் மனைவியைத் தூக்கிக் கொண்டு போய்விட்டான், இராவணன் என்று எதை எழுதி வைத்து, அந்தப் பெயரால் தமிழர்களை அழைக்கும் போது உச்சிக் குடுமி, டவாலி, தர்ப்பை ஒழிக என்றால் என்ன? அத் தன்மைகள் ஒழிய வேண்டும் என்பதுதானே பொருள்.

## விநோத சாட்சியம்

இன்று காலை, கோர்ட்டு நடவடிக்கைகளை நேரில் கவனித்தேன். ஒரு சாட்சியம் கூறும் சப்-இன்ஸ்பெக் டர் தாய்மார்கள் கூறாதவற்றைச் சேர்த்துக் கூறுகின் றார். அவரது மயிர்க்காம்பிலுள்ள ஒவ்வொரு துளி இரத்தமும் நம்முடைய உழைப்பினால் கிடைத்த பணத்தினால் ஊறியது என்பதை நினைக்கவில்லை. அவர் என்ன செய்வார்? மேலே உள்ளவர்களின் தயவுக்காகக் கிளிப்பிள்ளை போல் கூறுகிறார். அது பற்றி நமக்குக் கவலையில்லை. இதுதானா சத்திய ஆட்சி, ராமராஜ்ய ஆட்சி, காந்தியின் அகிம்சா ஆட்சி எனக் கேட்கின்றேன். எனக்குச் சத்தியத்தில் சிறிதும் நம்பிக்கையில்லை. ஆனால் உண்மைக்கு மதிப்புக் கொடுக்கின்றேன். சத்தியம் என்று நினைத்தால் பழுக்கக் காய்ந்த கொழுவை உருவலாம் என்றும் பண்டைப் பெண்கள் மணலைச் சோறு ஆக்கியிருக்கின்றனர் என்றும் கூறுவதில் எனக்கு நம்பிக்கையில்லை. அதே கொழுவை இன்று சத்தியத்தில் நம்பிக்கையுள்ள சத்திய மூர்த்தியாலும் உருவ முடியாது. அல்லது காந்தியாலும் முடியாது (கைதட்டல்). எனவே எனக்கு அதில் சிறிதும் நம்பிக்கையில்லை. இன்று தாய்மார்கள் எந்தப் பையனை அல்லது உபாத்தியாயரைக் காலைக் கட்டிப் பள்ளிக்கூடத்திற்குப் போகக் கூடாதெனத் தடுத்தனர்.

ஆனால் சென்ற ஆண்டு காங்கிரஸ்காரர்கள் கிராம்பு மறியலில், கப்பலை விட்டு மூட்டைகளை இறக்கக்

கூடாதெனத் தடுத்தனர். மூட்டை ஏற்றிய வண்டியை ஓட்டவிடாது சக்கரத்தின் கீழ்படுத்துத் தடுத்தனர். கடையில் விற்கக் கூடாதென்றும், வாங்க வருபவர்களையும் தடுத்தனர். இதற்குக் காங்கிரஸ் மந்திரிகள் உத்தரவு கொடுத்தனர். தொண்டர்களைப் பாராட்டினர். அதைவிட 'இந்தி ஒழிக' என்று கூறுவது தவறானதா? இந்தி உண்மையில் ஒழிந்துவிட்டது. செத்த பாம்பை ஆச்சாரியார் ஆட்டுகிறார். இந்தி எதிர்ப்பாளர்கள் என்ன செய்தார்கள்? அவர்களுக்கு 18 மாதம், 2 வருஷம் தண்டனை விதிக்கப்படுகின்றது.

**மனம் மாறாவிட்டால்....?**

உண்மையில் சொல்லுகிறேன்

தினம் 5 பேர் வீதம் பெண்கள் ஒரு மாதம் தொடர்ச்சியாகச் சென்றால் கட்டாயம் ஆச்சாரியார் நிலை மாறும். மாறாவிட்டால் தமிழர்கள் இரத்தம் கொதிக்கும்; உணர்ச்சி பெருகும்.

உதாரணமாகச் சென்ற வாரம் நான் திருவிதாங்கூர் சென்றிருந்த போது அங்கு நடைபெற்ற அடக்குமுறை காரணமாகத் தோழர் சி.பி. ராமசாமி அய்யர் எதேச்சையாக வெளியில் வர முடியவில்லை. பொதுமக்கள் மனத்தில் உண்டாயிருக்கும் கொதிப்பு கண்டு பயப்படுகிறார். இதைச் சமாளிக்க, சிறையிட்டவர்களையெல்லாம் வெளியில் திறந்துவிட்டார். மக்கள் மீண்டும் அந்தக் காரியத்தைச் செய்ய ஆரம்பித்துவிட்டனர். மீண்டும் ஒரு வக்கீல் அம்மையார் கைது செய்யப்பட்டிருக்கின்றார். இதைப்பற்றித் தோழர் ராமசாமி அய்யரின் அடக்குமுறையைப் பற்றி எந்தப் பார்ப்பனப் பத்திரிகையாவது கண்டித்தெழுதிற்றா?

கவர்னருக்கு பயந்து தேசியக் கொடி, மூவர்ணக் கொடியாயிற்று. இன்று காந்தியார் அக்கொடியைக் கண்ட இடத்தில் கட்ட வேண்டாம்; யூனியன் ஜாக் இருந்தால், அவிழ்த்து விடுங்கள் எனக் கூறுகிறார். ஆனால் காங்கிரஸ்காரர்கள் மட்டுமே இன்னும் அதைத் தேசியக் கொடியென்றே பொய் சொல்லி வருகின்றனர். முஸ்லீம்கள் எதிர்ப்பிற்குப் பயந்து வந்தேமாதரம் கைவிடப்பட்டது. விசுவபிராமணருக்குப் பயந்து விசுவகர்மா உத்தரவு நீக்கப்பட்டது. பேரிச்செட்டிகளுக்குப் பயந்து, தணிகாசலம் ரோடின் பெயர் மாற்றம் தள்ளப்பட்டது. வக்கீல்கள் எல்லாம் சேரவே பப்ளிக் பிராசிக்யூட்டர் நியமன உத்தரவு பின்வாங்கிக்கொள்ளப்பட்டது.

1500 ரூபாய் சம்பளம் வாங்கி வந்த மாகாண அதிகாரியைத் தள்ளி வைத்தனர். நமக்கு உண்மையான உணர்ச்சியிருக்கின்றதென்று தெரிந்தால் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்பது அவர்கட்குத் தெரியும். சந்தர்ப்பத்திற்குத் தகுந்தாற்போல் நடந்து கொள்வார்கள். எதற்கும், அவர்கள் பார்ப்பார்களல்லவா! (கைதட்டல்)

**ஒரு கதை**

நிற்க. சென்னைத் தோழர்கள் சென்னையைப் பார்த்துக் கொண்டால் நான் வெளி ஜில்லாக்களில் வேலை செய்ய வசதியாயிருக்கும். இதற்கு ஒரு இடந்தானா வேண்டும்? எங்கள் ஊரில் ஒரு முதியவரிருந்தார். 'தேங்காய் மூடி' என்று அவரை ஒருவர் அழைத்தால் போதும் உடனே கோபம் வந்துவிடும். அவர் ஓடுமிடமெல்லாம் துரத்தி வருவார். எனது சிறுவயதில் இது எங்கட்கு ஒரு வேடிக்கையாக இருந்தது. அதே போல் இன்று யார் சொன்னாலும் போதும், ஆச்லரியார் அங்கு உடனே ஓடிவருவார். ஏன், இனி தேங்காய் மூடி என்றாலே போதும், அவர் நிச்சயம் வருவார் (கைதட்டல்). ஏன்? அவர் ஒரு பைத்தியக்காரர். உங்களைப் போன்ற இளைஞர்களும், தாய்மார்களும் சென்னையைப் பார்க்கிறேன் என்று வாக்குறுதி அளித்தால், நான் அடிக்கடி இங்கு வரவேண்டியதுமில்லை. வெளியில் 5, 6 ஜில்லாக்களில் வேலை செய்வேன். இப்படி 100க்கணக்காய் இருக்கின்றது தேங்காய் மூடிக் கதை.

நமது நண்பர் இராமநாதன் ஆச்சாரியார் பக்கத்திலிருந்து கொண்டு 'நெருப்பு சிலீரென்றிருக்கிறது' என்று கூறிவருகின்றார். அவருக்கும் சுட்டால் தெரியும். இன்று சென்ற தாய்மார்களைப் போல் நாளையும் தொடர்ந்து நடக்குமென்று நம்புகிறேன். தொண்டர்களும் கருத்து வேற்றுமைகளை விளக்கிக் கூறிவந்தால், இரண்டு கட்சிகளிலும் சேராது பொதுவிலிருக்கின்றவர்களும் இதலீடுபடுவார்கள். நாம் சொல்லும் காரணங்களைப் பார்த்து நம்மிடத்துக் குற்றமில்லை என்றால், தானே வருகின்றார்கள். 75 ரூபாய் வாங்கும் சில பெரியோர்களுக்குக்கூட இன்றைய நிகழ்ச்சியால் மனமிளக்கம் ஏற்பட்டிருக்கும்.

**தூங்கினால் தலையெடுக்க முடியாது**

ஒரு எம்.எல்.சி. கூறினார் : ஆச்சாரியை விட டாக்டர் ராஜன் செய்வது பிடிக்கவில்லையென்று. நம்மைப் பற்றியும், நம் தாய்மார்களைப் பற்றியும் பல பத்திரிகைகள் கேவலமாக எழுதி வருவது எனக்குத் தெரியும். கொச்சி திவான் தோழர் சண்முகம் செட்டியார் யாராலும் செய்ய முடியாத பொறுப்பாட்சியை வழங்கி சுதேச சமஸ்தானங்கட்கு வழிகாட்டினார். இதைச் செய்ய மற்ற திவான்கள் பயப்படுகிறார்கள். செட்டியார் சிறந்த அரசியல்

அறிவாளி. அவரைப் பற்றி ஒரு சமயம் ஒரு குரங்குப் பத்திரிகை அவர் சாதியை இழித்து 'செக்கு'ப் படம் போட்டுக் கேலி செய்திருந்தது. ஆனால் இன்று திரு விதாங்கூரில் ஒரு அய்யர் அமளிப்படுத்துகின்றார். பார்ப்பனப் பத்திரிகைகள் அதைப்பற்றி ஒரு வார்த்தை கூட எழுதாமல் செக்கோவைப் பற்றியும், ஸ்பெயின், சீனாவைப் பற்றியும் உருகித் தலையங்கம் எழுதுகின்றன. இந்தச் சமயம் தூங்கிவிட்டார்களானால், இனி என் றென்றைக்கும் தலையெடுக்க முடியாது. தமிழர்களைப் பற்றிப் பேச, சட்டசபையில் சர். பன்னீர்செல்வம் 6 தடவை எழுந்தார். ஆனால் அவரைப் பேச விடாது அடக்கி விட்டனர்.

**நிற்க. இன்று ''விடுதலை'' மேல் தொடுக்கப் பட்டிருக்கும் வழக்கில் வாதாட, பிரத்யேகமாக பல ஆயிரக்கணக்கான செலவில் தோழர் எத்தி ராஜைக் கோவைக்கு அனுப்பியிருக்கின்றனர். ஏன்? கோவையில் தகுந்த வக்கீலில்லையா? ''விடுதலை''யை எப்படியாவது அழித்துவிட வேண்டு மென்றுதானே எண்ணம். எனவே இன்று 'விடு தலை' மயிர்ப்பாலத்தின் மேல் தொங்கிக் கொண்டி ருக்கிறது. இவ்வழக்கில் நம்மவர் தோல்வியடைந் தால், நம் பின் சந்ததியின் கதி என்னாவது? தனிப்பட்ட முறையில் எங்கட்கு என்ன வேண்டும்? எங்கள் வாழ்க்கையை ஊரிலிருந்தே எங்களால் நடத்த முடியாதா? அல்லது தோழர் இராமநாத னைப்போல் ஆச்சாரியாரிடம் நான் சென்றால், எனக்கு ஒரு மந்திரி பதவி கிடைக்காதா? எனது காரோட்டிக்கு ஒரு மந்திரி பதவி கொடு என்றால் ஆச்சாரியார் கொடுக்க மாட்டாரா?**

**ஆகவே நாமனைவரும் ஒற்றுமையுடன் பாடு பட்டால் தான் வெற்றியடைய முடியும். நம்மை சூத்திரன் என்றும், தாசிமகனென்றும் பல விதத் தில் இழித்துக் கூறிவரும் அவர்களை, இன்றும், 'சாமி இட்லி கொண்டு வா' என்று தானே கேட் கின்றோம். நாட்டை யாராண்டாலும் நமக்குக் கவலையில்லை. நமக்கு வேண்டியது நன்மையே. எனவே நான் கூறியுள்ளவைகளை ஆராய்ந்து பாருங்கள். இன்று சென்னையை, ஏன் தமிழ் நாட்டையே சிறப்பித்த - தமிழ்ப்பெண்களின் வீரத் தை இந்தியா முழுவதும் அறியச் செய்த தாய்மார் களைத் தொடர்ந்து அவர்களுக்குக் கௌரவ மளிக்க வேண்டுகிறேன் (நீண்ட கைதட்டல்).**

**(குடிஅரசு 27-11-1938)**

- தொடரும்

**பெரியார் ஈ.வெ.இராமசாமி-நாகம்மை கல்வி ஆராய்ச்சி அறக்கட்டளைக்கு நிதி அளிக்க வங்கி கணக்கு எண்.06780200000274**
**BANK OF BARODA, Triplicane Branch CHENNAI-5.**
**IFSC Code : BARB0TIRUVA - MICR No.6012017**
எண்.277/2, சென்னை-திருவள்ளுவர் நெடுஞ்சாலை, அம்பத்தூர், சென்னை - 600 098.

### அறிவிப்பு

தமிழகத்தின் மிகச்சிறந்த அரசியல் மாத இதழ் சிந்தனை யாளன் 40 ஆண்டுகளாக வெளிவந்து கொண்டுள்ளது. இதழ் நடத்த இதுவரை ஆதரவு அளித்த அனைவருக்கும் மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இப்பொழுது நிதிநிலை மிகவும் சரியில்லாமல் உள்ளது.

அன்புகூர்ந்து சிந்தனையாளன் ஆண்டுக் கட்டணம் கட்டி புதுப்பிக்காதவர்கள் கட்டணத் தொகையை செலுத்திப் புதுப் பித்துக் கொள்ளவும். புதுப்பிக்காதவர்களுக்கு செப்டம்பர் 2016 முதல் இதழ் நிறுத்தப்படும். பத்தாண்டு சந்தா (வாழ்நாள் கட்டணம்) செலுத்தி பத்தாண்டு கடந்தவர்கள் இப்பொழுதுள்ள கட்டணத் தொகைப்படி ரூ.1,500 செலுத்திப் புதுப்பித்துக் கொள்ள வேண்டுகிறோம்.

தொகையைச் செலுத்த கீழ்க்கண்ட முறையினைப் பயன் படுத்தவும். (1) அஞ்சல் பணவிடை, (2) வங்கிக் காசோலை (அ) வங்கி முறி, (3) நேரடியாக வங்கியில் கட்டுதல், (4) சிந்தனையாளன் என்ற பெயரில் வங்கிக் கணக்கு எண் : 232007660, TNSCB Ltd. (தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்) திருவல்லிக்கேணி, சென்னை-5. IFSC Code TNSC0000001, MICR No.600091032 பயன்படுத்தி அனுப்பவும். உறுப்பினரின் தெளிவான முகவரியினை கடிதத்தில் எழுதி சந்தா எண் குறிப்பிட்டு அனுப்பவும்.

- ஆசிரியர் குழு

## வேலூர் இரா. சுந்தர் வளர்ச்சி நிதி ரூ.5,000

வேலூரில், மா.பெ.பொ.க.வின் கிளை தொடங்கப்பட்ட காலம் முதல் விருப்பத்தோடு களப்பணியாற்றி வரும் தோழர் இரா. சுந்தர் அவர்கள், சென்னை திருமுல்லைவாயிலில், திருமலை நகரில், புதிய வீடு கட்டி முடித்ததின் மகிழ்ச்சி மீதூர, ''சிந்தனையாளன்'' வளர்ச்சி நிதியாக 29.6.2016 அன்று ரூ.5,000 (அய்யாயிரம்) வழங்கினார். நன்றி.

*- ஆசிரியர் குழு*

# இலஞ்ச ஊழலும் கடவுள் நம்பிக்கையும்

- கு.ம.சுப்பிரமணியன்

தலைப்பைப் பார்த்ததும் பலரும் ஆச்சரியப்படலாம், இலஞ்சத்திற்கும் கடவுள் நம்பிக்கைக்கும் என்ன தொடர்பு இருக்க முடியும்,? என்று நினைக்கலாம். தொடர்பு இருக்கிறது!

**முதலில் இலஞ்சம் என்றால் என்ன என்பதை விளங்கிக்கொள்வோம். இலஞ்சம் என்பது தமிழ்ச் சொல்லாக இருக்கமுடியாது. தமிழில் சொல்வதானால், ''கையூட்டு'' என்று தூய தமிழில் சொல்லலாம். அதாவது கையால் ஊட்டுவது! எதை ஊட்டுவது? ஒரு தாய் தான் பெற்ற குழந்தைக்குப் பால் குடிக்கும் பருவம் தாண்டியதும் சோற்றைப் பிசைந்து ஊட்டுகிறாள். குழந்தை தானாகத் தன் உணவை உண்ண முடியாதபோது தாய் தன் கையால் ஊட்டுகிறாள். குழந்தைக்கு உணவூட்டுவதைப்போல, ஒருவருக்கு இன்னொருவர் கையால் ஊட்டுவதையே கையூட்டு என்கிறோம்! இங்கு ஊட்டப்படுவது உணவன்று, பணம்!**

உணவுப்பசிக்கு உணவு, பணப்பசிக்குப் பணம்! பணப்பசி கொண்டவர்களுக்குப் பணத்தைக் கையால் ஊட்டுவதால் கையூட்டு என்றாயிற்று! தாய் தன்பிள்ளைக்கு உணவை, ஊட்டவில்லையென்றால் குழந்தை உண்ணாது. இது போலவே, பணப்பசி கொண்டவர்கள் தாமாகத் தம் கையால் பணத்தை எடுத்துக் கொள்ளமாட்டார்கள். பணப்பசியைத் தீர்த்து வைக்கப் பணத்தைக் கையால் மற்றோர் ஊட்டுகிறார்கள். அதனால் தான் இலஞ்சத்திற்குக் 'கையூட்டு' என்று பேர் உண்டாயிற்று.

இனி, கடவுளுக்கும் இலஞ்சத்திற்கும் எப்படித் தொடர்பு என்று பார்ப்போம்! கடவுள் என ஒன்று அல்லது ஒருவர் உண்டா இல்லையா என்பது தருக்கத்திற்குரியது. கடவுளை நம்புபவர்கள் பெரும்பான்மையினர். கடவுளை நம்பாதவர்களும் இருக்கின்றார்கள். ஆனால் அவர்கள் சிறுபான்மையராய் உள்ளனர். நம்புகிறவர்கள் எல்லோரும் ஒரே கடவுளை நம்புகிறவர்களாக இல்லை. பல மதங்கள் கடவுள் பற்றிய கொள்கைகளில் வேறுபடுகின்றன. **ஆனால் எல்லா மதங்களும் கடவுள் உண்டு என்று நம்புகின்றன.**

கிறித்துவ மதத்தில் கர்த்தர் என்கிறார்கள். கர்த்தருடைய சார்பாக அவருடைய தூதர் அனுப்பப்பட்டுள்ளார் என்று நம்புகிறார்கள். முஸ்லீம்களோ அல்லா ஒருவரே என்று நம்பித் தொழுகிறார்கள். கிறித்துவம், இஸ்லாம் அல்லாத இந்தியாவில் வாழும் ஏனைய மக்கள் அனைவருக்கும் இந்துக்கள் என்றே பேர் வைத்துவிட்டார்கள், இவர்களும் ஏற்றுக்கொண்டார்கள்.

தமிழர்கள் தனித் தன்மையுடையவர்கள். அவர்கள் இயற்கையோடியைந்து வாழ்ந்து வந்தவர்கள். இடையில் தமிழரிடையே வந்து புகுந்த வந்தேறி ஆரியர்களுக்கு எப்படியோ அடிமைப்பட்டுப் போய், மக்களை நான்கு வருணங்களாகப் பிரிக்கும் வருணாசிரம தருமம் என்ற ஆரியக் கோட்பாட்டை ஏற்றுக்கொண்டு நான்கு வருணங்களாகப் பிரிந்து, அந்த வருணங்களிலும் நாலாம் வருணமான சூத்திரர் என்ற வருணத்துள்ளும் பல்வேறு சாதியினராய்ப் பிரிந்து தாழ்ந்து போயினர். ''யாதும் ஊரே யாவரும் கேளிர்!'' என்று வாழ்ந்த வந்த தமிழர்கள், ஆரியரின் வரவால் நாலாவது வருணமான சூத்திரர் என்று தாழ்த்தப்பட்டுள்ளனர். யாவரும் கேளிர் என்று கூறி, வந்தோரையெல்லாம் ஏற்று வாழ்ந்த தமிழர் இழிசாதியினராகக் காலப்போக்கில் தாழ்த்தப்பட்டுப் போயினர். உயர்வு தாழ்வின்றி யாவரும் கேளிராக எண்ணி வாழ்ந்த தமிழர், நான்கு வருணங்களில் நாலாவது வருணமாக, தமக்கு மேலேயுள்ள மூன்று வருணத்தார்க்கும் உழைக்கும் வருணமாகத் தாழ்ந்தனர்.

இது தமிழர் வரலாற்றில் நிகழ்ந்த பெருங்கேடாகும். இயற்கையோடியைந்து வாழ்ந்து வந்த தமிழர்களிடையே இறை (கடவுள்) நம்பிக்கை எப்போது, எப்படிப் புகுந்தது என்று தெரியவில்லை. ஆதிமாந்தர் இயற்கையின் சீற்றத்திற்கும் காட்டு விலங்குகளின் தாக்குதலுக்கும் அஞ்சி ஏதாவது ஒன்றைப் பற்றிக்கொண்டு வாழ்ந்திருக்க வேண்டும். அவர்தம் முன்னோரையே, அவர்கள் இறந்தபின் நடுகல்லாக நட்டு வணங்கி வழிபட்டு வந்திருக்கவேண்டும். இப்படி நட்டகல்லே, பின்னர் இறையுருவாகக் காலப்போக்கில் மாறி, மாந்தர், தெய்வமென்று வழிபடும் பழக்கம் ஏற்பட்டு நிலைகொண்டிருக்க வேண்டும். இப்படி வழிபட்டு வந்த நடுகல் பற்றிப் பற்பல விதமான கற்பனைகளை மாந்தர் புனைந்து கொண்டு தெய்வமென நம்பி வாழத் தலைப்பட்டுவிட்டனர் என்றே தெரிகிறது. இதன் நீட்சிதான் இன்றைய கடவுள்களைப் பற்றிய கதைகளாக இருக்கமுடியும்.

இப்படி மாந்தர் தமக்குத் தோன்றியவாறெல்லாம் கற்பித்துக் கொண்டவற்றைக் கண்ணை மூடிக்கொண்டு நம்புவது அறியாமை என்று நாம் சொல்வதில் என்ன தவறு உள்ளது? கடவுள் ஒரு கற்பனை என்று விளக்கினோம்.

**இப்படிக் கற்பிக்கப்பட்ட கடவுளை அல்லது கடவுள்களை இருப்பதாக நம்பியதோடு நில்லாமல், கடவுளுக்குப் பற்பல கதைகளைக் கட்டிப் பரப்பிவந்துள்ளோம்!. வணங்கி வழிபடுவதோடு நிறுத்திக்கொள்ளுவதில்லை. இறைவனுக்குக் காணிக்கையாகப் பலவற்றைப் படைக்கிறோம். இக்காணிக்கை செலுத்துவது அல்லது படையல் அனைத்தையும் நாம் கையூட்டு (இலஞ்சம்) என்கிறோம். ஒரு பழைய பாடல் எம் நினைவில் எழுகிறது. அது, ''பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை, நாலும் கலந்துனக்கு நான் தருவேன்-கோலஞ்செய் துங்கக் கரிமுகத்துத்தூ மணியே நீயெனக்குச் சங்கத் தமிழ் மூன்றும் தா'' என்ற பாடல்**

'பாலும், தேனும் நான் உனக்குப் படைக்கிறேன். நீ எனக்குச் சங்கத்தமிழ் மூன்றையும் கொடு' என்று கேட்பது பண்டமாற்று போல் இல்லையா! அறிவாளர்கள் இதில் கருத்தூன்றிப் பார்த்து, கொள்ளத்தக்க தாயின் கொள்க. அன்றேல் தள்ளதக்க தென்று கண்டால், தள்ளிவிட்டு இயற்கையோடியைந்து வாழலாமே!

# உலகிலேயே, முதன்முதலாக நாத்திகப் படிப்பிற்கான உயராய்வு இருக்கை! அமெரிக்க நாட்டு மியாமி பல்கலைக்கழத்தின் சாதனை!

அமெரிக்க நாட்டில் மதத்தினைப் புறந்தள்ளும் போக்கு அதிகரித்து வரும் நிலையில் மியாமி பல் கலைக்கழகம் ஓர் உயராய்வு இருக்கையினை ஏற் படுத்தியுள்ளது. உலகிலேயே நாத்திகம், மனிதநேயம் மற்றும் மதச்சார்பின்னை கல்வி உயராய்வு இருக்கை யாக (Study Chair Atheist) அது ஏற்படுத்தப்பட்டுள்ளது தனிச்சிறப்பாகும்.

அமெரிக்க நாட்டில் புளோரிடாவில் வசித்து வரும் 83 வயதினை எட்டியுள்ள ஓய்வு பெற்ற வணிகரும், பார்பிசன் பன்னாட்டு மாதிரிப் பள்ளியின் மேனாள் தலைவரும், சீரிய நாத்திகருமான லூயிஸ் ஜே. அப்பிக் னானி கொடையாக அளித்த 22 மில்லியன் டாலர் நிதி ஆதாரத்துடன், நாத்திக உயராய்வு இருக்கை நிறுவப் பட்டுள்ளது. பல்வேறு மனிதநேய, மதச்சார்பற்ற பணி களுக்கு நன்கொடை வழங்குவதை வாடிக்கையாக அப்பிக்னானி கொண்டிருப்பவர்.

நாத்திகர்கள் சமுதாயத்தில் வேறுபடுத்தப்பட்டு பார்க் கப்படுவதை களைவதின் நோக்கமே தம்மை நாத்திக உயராய்வு இருக்கைக்கு நன்கொடை வழங்கிட வைத்து தமது கொடை, நாத்திகம் முறையான, சட்டப்படியான வாழ்வியல் பண்பாக போற்றப்படுவதற்கான ஒரு சிறு முயற்சியே என அப்பிக்னானி கூறுகிறார்.

மியாமி பல்கலைக்கழகத்தில் நாத்திக உயராய்வு இருக்கையின் அங்கமாகச் செயல்படுவதற்கு, சான்றோர் பெருமக்களைத் தெரிவு செய்வதற்காக ஒரு குழுவினை நியமித்து, உயராய்வு இருக்கை அமைக்கப்பட்டுள்ள முறையான அறிவிப்பு விரைவில் வெளியாகும்.

பெரும்பான்மையான கல்லூரிகள் மற்றும் பல் கலைக் கழகங்களில் மதம் பற்றிய துறைகள் மற்றும் மதம் சார்ந்த கல்வி புகட்டும் பேராசிரியர்கள் செயல் படுவது ஒரு வாடிக்கையாக உள்ளது. தேவாலயங்கள் அளித்து வரும் நிதி மற்றும் பொருளுதவிகளால் அவை செயல்பட்டு வருகின்றன. தற்பொழுது நாத்திகம் மற்றும் மதச்சார்பின்மை படிப்பு ஏற்றுக்கொள்ளப்படும் கல்விக் களமாக மாறி வருகிறது. ஆராய்ச்சி, கொள்கைகள், கல்வி மாநாடுகள், பயிற்சி அளித்தல் என்ற நிலை யினை அடுத்து நாத்திகத்திற்கான உயராய்வு இருக்கை இப்பொழுது முதன்முதலாக உருவாக்கப்பட்டுள்ளது.

''மியாமி பல்கலைக்கழகம் எடுத்திட்ட ஒரு துணிச்ச லான செயல்'' என ''கடவுள் ஒரு பொய் நம்பிக்கை (The God Delusion) நூலாசிரியரும், பரிணாமவியல் உயிரியலாளரும் நாத்திகப் பெருந்தகையுமான ரிச்சர்டு டாக்கின்ஸ் பாராட்டியுள்ளார். மற்ற பல்கலைக்கழகங் களும் இப்படி நாத்திகப் படிப்பை அளித்திட முன்வரும் என நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

''மத விலங்கினை உடைத்திடும்'' நோக்கத்தில் நாத்திக உயராய்வு இருக்கை ஏற்படுத்தப்பட்டுள்ளது அதி முக்கியத்துவம் வாய்ந்தது' எனவும் ரிச்சர்டு டாக் கின்ஸ் பிரிட்டனிலிருந்து தொலைபேசி வாயிலாக செவ்வி மூலம் தெரிவித்துள்ளார்.

பி இ டபிள்யூ (PEW) ஆராய்ச்சி மய்யம் நடத்திய ஆய்வின் மூலம், அமெரிக்காவில் மதச்சார்பற்றோர் என வெளிப்படுத்திக் கொள்வோரின் எண்ணிக்கை அண்மைக்கால குறுகிய இடைவெளியில் மிகவும் அதிக மாக உயர்ந்துள்ளது எனத் தெரிய வருகிறது. அமெரிக் காவின் மொத்த மக்கள் தொகையில் மதச் சார்பற் றோரின் எண்ணிக்கை 2007ஆம் ஆண்டில் 16 விழுக் காடு என இருந்த நிலை, 2014 ஆம் ஆண்டில் 23 விழுக்காடாக உயர்ந்துள்ளது. இளையோரில் பலர் மதநம்பிக்கையில் ஆர்வம் அற்றவர்களாக உள்ளனர். புத்தாயிரம் ஆண்டு அறிபருவர் (adult) எண்ணிக்கை யினரில் 35 விழுக்காட்டினர் தம்மை நாத்திகர், கடவுள் கவலையிலார் அல்லது மத நம்பிக்கை அற்றோர் எனத் தெரியப்படுத்தியுள்ளனர்.

'மதச்சார்பற்ற அமெரிக்கர்கள் (Secular Ameri- cans)' எனும் மனிதநேய அமைப்பினர், அரசியல் பாதையில் பயணிக்க முடிவெடுத்துள்ளனர். அடுத்த மாதத்தில் அமெரிக்காவில் கடவுள் நம்பிக்கையற்றோர், தலைநகர் வாசிங்டனில் உள்ள லிங்கன் நினைவிடத் தில் பகுத்தறிவுப் பேரணி (Rally of Reason) ஒன்றை நடத்தித் தமது எண்ணிக்கை வலிமையினை அமெரிக்க காங்கிரசுக்குக் காட்டி, அரசையும் மதத்தையும் (கிறிஸ்தவ மதம்) பிரிக்கக்கோருவதாக உள்ளனர்.

'நாத்திக உயராய்வுப் படிப்பு', என்பதற்கான வித்து 15 ஆண்டுகளுக்கு முன்பு முளைத்திட ஆரம்பித்தது 'மியாமி பல்கலைக்கழத்தின் தத்துவப் பேராசிரியர் ஹார்வி சீகல் (Harvey Siegel), நாத்திகக் கொடையாளர் லூயிஸ் அப்பிக்னானியும் கலந்து பேசி அன்றே முடி வெடுத்தனர். **அமெரிக்க மக்கள் மத்தியில் நாத்திகம் பற்றிய ஒருவித அவமதிக்கும் பார்வையும், இழித் துரைக்கும் போக்கும் நிலவிடும் நிலையில், பல் கலைக்கழக உயராய்வு இருக்கைக்கு 'நாத்திகம்' எனும் பெயர் வைத்திருவதில் அதிகார நிலையாளர் களுக்குத் தயக்கம் நிலவிய சூழலில், தத்துவப் பேராசிரியர் ஹார்வி சீகல் தான் நாத்திகம் பற்றி எடுத்துரைத்து, விளக்கிச் சொல்லி 'நாத்திக உயராய்வு இருக்கை' என பெயர் ஏற்பட காரண மாக இருந்தார்.**

'நாத்திகம்' பெயர் பற்றி முடிவெடுக்கையில், பல் கலைக்கழகத்தினரை ஒத்துக்கொள்ள வைத்திட மதம்

சார்ந்த படிப்புகளில் கடைப்பிடிக்கப்படும் அணுகுமுறை யினையே பல்கலைக்கழகம் மேற்கொள்ளலாம் எனப் பரிந்துரை செய்யப்பட்டது. மதம் சார்ந்த படிப்புகளில் எந்த ஒரு மதத்தினையும் வலியுறுத்தும் வகையில் படிப்பு முறை இல்லாதது போலவே-நாத்திகப் படிப்பி லும், நாத்திகக் கொள்கையினை வலியுறுத்திடும் தன்மை இல்லாதவாறு நாத்திக உயராய்வு இருக்கை அமைக் கப்படலாம் எனப்பரிந்துரை வழங்கப்பட்டது. ''நாத்திகம்'' பெயர் கொண்டு உயராய்வு இருக்கை ஏற்படுத்தப் படுவதற்கு நாத்திகக் கொள்கையாளர்கள் எடுத்திட்ட முயற்சி போற்றுதலுக்கும் பாராட்டுதலுக்கும் உரியது.

**அமெரிக்காவில் நாத்திகம், மதச்சார்பின்மை, அய்யுறவியல் (skepticism) பற்றிய புரிதல் மற்றும் போற்றுதல் மக்களிடையே குறிப்பாகக் கல்வி நிலையங்களில் அதிகரித்து வருகிறது.**

தென் கலிபோர்னியா மாநிலத்தில் உள்ள பிட்சர் கல்லூரியில் அய்ந்து ஆண்டுகளுக்கு முன்னரே ஆயிரம் மாணவர்களைக் கொண்டு திறந்த சிந்தனைக் கலைப் பள்ளியினை நடத்தி வருகின்றனர். இந்தப் பள்ளியில் பில் சக்கர்மேன் (Phil Zuckerman) எனும் மதம் பற்றிய சமூகவியலாளர் மற்றும் மதச்சார்பின்மை பற்றிய ஆறு பேராசிரியர்கள் நான்கு பாடப் படிப்பினை நடத்தியுள்ள னர். இத்தகைய பாடப்படிப்புகளுக்கு மாணவர்களி டையே ஆர்வம் பெருகி வருகிறது. சென்ற ஆண்டு நடைபெற்ற 'மதச்சார்பின்மை & அய்யுறவியல்' பாட வகுப்பில் சேர வந்த மாணவர்களில் பெரும்பாலா னோரை, அடிப்படைக் கட்டமைப்பு வசதி இல்லாத காரணத்தால் அனுமதி மறுக்கப்பட்ட நிலை இருந்தது. நாத்திகச் சான்றோர் சிலர் மதமின்மை மற்றும் மதச் சார்பின்மை ஆராய்ச்சித் தொடர்பகம் எனும் அமைப் பின் கீழ் தங்களது நான்காவது மாநாட்டினை ஜுரிச் நகரில் நடத்திட உள்ளனர். 'மதச்சார்பின்மை மற்றும் மதமின்மை' எனும் ஆராய்ச்சி இதழினையும் அவர்கள் நடத்தி வருவது பலரது பாராட்டையும் பெற்றுள்ளது.

சமூகவியலாளர் சக்கர் மேன் மதச்சார்பற்ற படிப் பிற்கான உண்மையான தேவை ஏற்பட்டுள்ளது எனக் கூறுகிறார். மேலும் 'மதச்சார்பின்மைப் பண்பு அதி கரிப்பது தொடரும் நிலையில், அமெரிக்காவில் மட்டு மின்றி, உலகில் அனைத்து நாடுகளிலும் உள்ள மதச் சார்ப்பற்ற மக்கள், மதச்சார்பற்ற பண்பாடு, மதச்சார்ப் பின்மை ஆகியவைகளை ஒருங்கிணைத்து கொள்கை சார்ந்த அரசியல் அமைப்பு தொடங்கிட வேண்டும்' எனும் கருத்தினையும் அவர் தெரிவித்து உள்ளார்.

உலகம் முழுவதிலும் நாத்திகம், மதச்சார்பின்மை, மதமின்மை கருத்துடனான வாழ்வியல் பண்பாடு பெருகி வருகிறது என்பதற்கு ''நியூயார்க் டைம்ஸ்'' இதழில் வெளிவந்த மேற்குறிப்பிட்ட செய்திகளே சான் றாக அமைந்துள்ளன. வருங்காலம் நாத்திகம் தழைத் துச் செழித்தோங்கும்-மனிதநேயம் போற்றப்படும் காலமாக உருவாகும் என்பது உறுதியாகி வருகிறது.

## வாழ்க்கை ஒப்பந்த விழாக்கள்



### சூ.கு. வருண் - இர. இரம்யா இல்லற இணையேற்பு விழா

கோவை, சூலூர் செல்வராசு-இரா.ம. இந்திராதேவி, கோவை இராமநாதபுரம் தி.செ.நடராசு - சாந்தி ஆகி யோரின் பெயரனும்; சூலூர் சூ.செ. குமரவேல் உமா மகேசுவரி ஆகியோரின் மகனும் ஆன சூ.கு. வருண்; ஈரோடு திண்டல் கோ. கோபாலகிருட்டிணன் - தனலட்சுமி, ஈரோடு கோ.சி. நாகப்பன் - மரகதவள்ளி ஆகியோரின் பெயர்த்தியும்; ஈரோடு திண்டல் கோ. இரவி - நா. நாகலட்சுமி ஆகியோரின் மகளும் ஆன இர. இரம்யா ஆகியோரின் சாதி மறுப்பு இணையேற்பு விழா 17.8.2016 புதன் காலை 10 மணிக்கு, கோவை - சிங்காநல்லூர் திருச்சி சாலையிலுள்ள வெங்கட லட்சுமி திருமண மண்டபத்தில் நடைபெறும். செ. சுப்பிர மணியம் வரவேற்றிட, கோவை கு. இராமகிருட்டிணன் தலைமையேற்க, திருச்சி வே. ஆனைமுத்து விழாவை நடத்தி வைப்பார். சென்னை பாவலர் அறிவுமதி, புலவர் செந்தலை ந. கவுதமன் வாழ்த்துரை வழங்குவர். நா.இர. விவேக் நன்றியுரையுடன் விழா நிறைவு பெறும்.

### மே. பிரபு - தி. குறளழகி வாழ்க்கைத் துணை ஏற்பு விழா

பெரம்பலூர் மாவட்டம், வரகூர் மா. நாராயண சாமி - அலமேலு மகன் வழிப் பெயரனும், வடிவேல்- சிவகாமி மகள் வழிப் பெயரனும், மேகநாதன்-பூங்கொடி மகனுமான மே.பிரபு; பெரம்பலூர் மாவட்டம், இலந் தங்குழி த. சிவநேசன்-சரோசா மகன் வழிப் பேத்தி யும், வாலாசா நகரம் மா. மகாராசன் - இலட்சுமி மகள் வழிப் பேத்தியும், அரியலூர் பெரியார் நகர் சி. தில்லை நாயகம் - முத்தமிழ்ச்செல்வி மகளுமான தி. குறளழகி ஆகியோரின் வாழ்க்கைத் துணை ஏற்பு விழா, பெரம் பலூர், எளம்பலூர் சாலையிலுள்ள கர்ணம் சுப்பிர மணியம் சகுந்தலா திருமண மண்டபத்தில், 21-8-2016 ஞாயிறு காலை 7.30 மணிக்கு நடைபெறும்.

பா. அசோக்குமார் வரவேற்புரை ஆற்ற, வே. ஆனைமுத்து தலைமையேற்று விழாவை நடத்தி வைப்பார். தோழர்கள் பலர் வாழ்த்துரை வழங்குவர். த. செயபாலன் நன்றியுரையுடன் விழா முடிவுறும்.

### வாழ்க்கை ஒப்பந்த விழா சு. இந்திரகுமாரி - ச. மதன்குமார்

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி வட்டம், கண்ணமங்கலம், புதுப்பேட்டை K.M.A. நகர் இர. சுதாகர்-இந்திரா இணையரின் மகள் சு. இந்திரகுமாரிக் கும்; வேலூர் மாவட்டம், வேலூர் வட்டம் கீழ் அரசம் பட்டு து. சம்பத்து-சாந்தா இணையரின் மூத்த மகன் ச. மதன்குமாருக்கும் வாழ்க்கை ஒப்பந்த விழா 10.7.2016 ஞாயிறு காலை 6 மணிக்கு கீழ்வல்லம் அண்ணாமலையார் திருமண மண்டபத்தில் சிறப்புடன் நிகழ்ந்தது.

# எஸ்.வி.ஆர். ஆவணப் படத்திற்குத் தடை கருத்துரிமை மீதான கடும் தாக்குதல்

**கண. குறிஞ்சி**

"உன்னுடைய கருத்தை வரிக்கு வரி நான் மறுக்கின்றேன். ஆனால் அந்தக் கருத்தை நீங்கள் வெளியிடுவதற்கான சுதந்தரத்தைப் பெற்றுத் தருவதற்காக எனது உயிரையும் தர ஆயத்தமாக இருக்கிறேன்" என்றார், வால்டேர். ஓர் உண்மையான சனநாயகத்தில் இத்தகைய ஆரோக்கியமான அணுகுமுறைதான் இருக்க வேண்டும். ஆனால் நிலவும் சமூக வெளியில் தனக்கு உவப்பாக இல்லாத கருத்தை ஒருவர் வெளியிடுவதை ஒரு சிறிதும் சகித்துக் கொள்ளமுடியாத அவல நிலைதான் தமிழகத்தில் நடைமுறையாக உள்ளது. இதன் வெளிப்பாடுதான் 2016 சூன் 4ஆம் நாள் சென்னையில் "இடது" காலாண்டிதழ் சார்பாக வெளியிடப்படுவதாக இருந்த **மனிதநேயப் போராளி தோழர் எஸ்.வி.ஆர்.** என்னும் ஆவணப்படத்திற்குக் காவல்துறையினால் மிக அவசரமாக விதிக்கப்பட்ட தடையாகும்.

**எஸ்.வி.ராஜதுரை எனும் மாமனிதர் தமிழ்ச் சமூகத்திற்கு அளப்பரிய அறிவுக்கொடையை நல்கியவர். ஏறக்குறைய 80க்கும் மேற்பட்ட அரிய ஆய்வுநூல்களை வழங்கியவர். அகில இந்திய அளவில் மட்டுமல்லாமல், அகில உலகும் பெரியாரை அறியும் வண்ணம், அவரைப் பற்றி மிகச் செறிவான அறிமுகத்தை ஆங்கிலத்தில் அளித்தவர். பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் பெரியார் உயராய்வு மையத்தில் தலைவராக இருந்து பல்வேறு ஆய்வுத் தொடர்பான அரும்பணிகளைத் தொய்வின்றி ஆற்றியவர்.**

"சென்றிடுவீர் எட்டுத் திக்கும்; கலைச்செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்" என்னும் தமிழ்க் கவிஞனின் ஆணைக்கு ஏற்ப, மார்க்சியம் குறித்து உலகெங்கும் நிலவக்கூடிய பல்வேறு போக்குகளையும் அவற்றின் முக்கியத்துவத்தையும் தனது எழுத்துகளில் பதிவு செய்தவர். பல்வேறு நாடுகளில் உள்ள தெரிவு செய்யப்பட்ட கவிஞர்களின் அழகான கவிதைகளைச் சிறப்பான முறையில் தமிழில் அறிமுகம் செய்தவர்.

காவல்துறை அத்துமீறலை எதிர்த்து மக்களைத் திரட்டிப் போரிட்டவர். தூக்குத்தண்டனை பெற்ற பலரையும் உச்சநீதிமன்றம் வரை சென்று போராடி அவர்களது உயிரைக் காத்தவர். எங்கெல்லாம் மனித உரிமைகள் பாதிக்கப்படுகின்றனவோ அங்கெல்லாம் இன்றுவரை அவரது குரல் ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கிறது. அரசு அடக்குமுறைக்கு அஞ்சாமல் அவர் எடுத்த முன்னெடுப்புக்கள் சமூக நலனுக்காகப் போராடுபவர்களுக்கு ஆதர்சத்தையும் உத்வேகத்தையும் அளிக்கக் கூடியதாக இருக்கிறது.

இலக்கிய விமர்சனம், இசை, நவீன ஓவியம், திரைப்படம் ஆகிய துறைகளில் ஞானம் மிக்கவர் எஸ்.வி.ஆர். இப்படிப்பட்ட பன்முக ஆளுமை கொண்ட அறிவுஜீவிகள் இன்றைய தமிழ்ச் சமூகத்தில் விரல் விட்டு எண்ணக்கூடிய அளவிலேயே உள்ளனர்.

எஸ்.வி.ஆர். போன்றவர்களின் வாழ்வும் பணியும் இளைஞர்களுக்கு எதிர்காலத்தில் அவர்களது செல்நெறியைத் தீர்மானிக்கப் பெரிதும் வழிகாட்டியாக உள்ளன. தமிழ்ச் சமூகம் கொண்டாட வேண்டிய ஓர் அறிவுஜீவி குறித்த ஆவணப்படத்தை வெளியிடக்கூடாது என்று தடை செய்வது சனநாயக மரபுகளுக்கு எதிரானது மட்டுமல்ல, அடிப்படை மனித உரிமைக்கே முரணானதாகும். மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் பேராசிரியர் ஜவாஹிருல்லா, மார்க்சிஸ்டுக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தமிழகப் பொதுச் செயலாளர் ஜி. ராமகிருஷ்ணன், இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் மூத்தத் தலைவர் இரா. நல்லக்கண்ணு, திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தந்தை பெரியார் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கு. இராமகிருஷ்ணன், இந்தியக் கம்யூனிட்டு ம.லெ. (விடுதலை) பொதுச் செயலாளர் பாலசுந்தரம், கவிஞர் இன்குலாப், பேராசிரியர் வீ. அரசு, தலித் முரசு ஆசிரியர் புனிதப் பாண்டியன், ஓவியர் டிராட்ஸ்கி மருது, பத்திரிகையாளர் ஞானி, திரைப்பட ஒளிப்பதிவாளர் செழியன், தீக்கதிர் ஆசிரியர் அ. குமரேசன், தமிழ்நிலம் ஆசிரியர் பொழிலன், தமிழறிஞர் கோவை ஞானி, எழுத்தாளர் வ. கீதா, புதுவிசை ஆசிரியர் ஆதவன் தீட்சண்யா, மார்க்ஸ் நூலகப் பொறுப்பாளர் சதீஸ் ஆகியோர் எஸ்.வி.ஆருடைய அறிவு மற்றும் நடைமுறைப் பங்களிப்புக் குறித்துத் தத்தம் கோணத்தில் இந்த ஆவணப் படத்தில் பதிவு செய்துள்ளனர். இதுதான் இந்த ஆவணப் படம். இவையன்றி ஆட்சேபணைக்குரிய வேறேதும் அதில் இல்லை.

ஆவணப் படம் திரையிடப்படவிருந்த ஒரு மணிநேரத்திற்கு முன்பு சென்னைக் காவல்துறையினர் எனக்கு ஓர் அறிக்கையை அளித்தனர். அதில் கீழ்க்கண்ட சான்றிதழ்களை ஒரு மணி நேரத்திற்குள் நேரடியாக வழங்குமாறு அறிவுறுத்தினர்.

* ஆவணப்படம் திரையிடுவதற்கு மாவட்ட ஆட்சியரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ்.
* தமிழ்நாடு திரைப்படப் பிரிவுக் குழுமத்திடம் இந்த ஆவணப்படம் பதிவு செய்யப்பட்டதற்கான சான்றிதழ்.
* திரைப்படத் துறை (சினிமாடோகிராபி) சட்டம் 1952 இன்கீழ் பெறப்பட்ட தணிக்கைக்குழுச் சான்றிதழ்.
* அரசியல், மதம் அல்லது பரபரப்பான சமூகப் பிரச்சனைகளை உள்ளடக்கி சட்டம் ஒழுங்கைப் பாதிக்கக் கூடிய எவையும் இந்த ஆவணப்படத்தில் இல்லை என்னும் சான்றிதழ்.

மேற்காண் சான்றிதழ்களை ஒரு மணி நேரத்திற்குள் வழங்காவிட்டால், குறுவட்டுக்கள் மற்றும் கருவிகள் அனைத்தும் பறிமுதல் செய்யப்படும் என்றும் காவல்துறை அறிக்கை எச்சரித்தது. காவல்துறையினர் கேட்டிருந்த சான்றிதழ்கள் எந்தச் சட்டப்பிரிவுகளின் அடிப்படையில் கேட்கப்பட்டுள்ளன என்ற விவரம் இந்த அறிக்கையில் இல்லை. மேலும் எஸ்.வி.ஆர். குறித்த ஆவணப் படத்தை மிகப் பரவலாக விளம்பரம் செய்து அனைவரையும் திரட்டும் முயற்சி எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. எஸ்.வி.ஆர். மீது அன்பும் கரிசனமும் மிக்க அவரது நட்பு வட்டத்தைச் சார்ந்த நண்பர்கள் மட்டுமே இந்த ஆவணப்படத்திற்காக அழைக்கப்பட்டிருந்தனர். இத்தகைய சூழலில் இந்த ஆவணப் படத்தை மிகவும் அவசரமாக சில தொழில்நுட்பக் காரணங்களைக் காட்டித் தடை செய்ய வேண்டிய தேவை என்ன என்ற கேள்விக்கு பதிலேதும் இல்லை. எனினும் எஸ்.வி.ஆர். மீது பேரன்பும் பெருமதிப்பும் கொண்டிருந்த நண்பர்களின் வேண்டுகோளுக்கிணங்க தனிப்பட்ட முறையில் ஓர் உள் அரங்கில் இப்படம் அன்றே திரையிடப்பட்டது.

கருத்துகளைத் தடை செய்வது, அந்தக் கருத்துகளைக் கூறுபவர்களுக்குக் கடும் தண்டனை வழங்குவது போன்றதுதான். வரலாற்றில் இதைப்போன்ற தடைகள் சனநயாக சக்திகளால் தூக்கியெறியப்பட்டுள்ளன. தமிழகத்தில் கருத்துரிமைக்கான வெளி சுருங்கி வருவது ஏற்கத்தக்கதல்ல. அதுமட்டுமல்லாமல் கடும் கண்டனத்திற்கும் உரியதாகும். எஸ்.வி.ஆர். ஆவணப் படத்திற்கான தடை என்பது ஒரு தொடக்கம் தான். **இதைத் தமிழ்ச் சமூகம் அனுமதித்தால் கருத்துரிமையின் குரல்வளை எதிர்காலத்தில் முழுமையாக நசுக்கப்படும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. எனவே நெருக்கடியான இத்தருணத்தில் சனநாயக சக்திகள் இத்தடையை எதிர்த்துப் பல்வேறு தளங்களிலும் தங்களது குரலை வலிமையாகப் பதிவு செய்ய வேண்டும். இது ஏதோ எஸ்.வி.ஆர். என்ற தனி மனிதருக்கு நாம் காட்டக் கூடிய சலுகை அல்ல. மாறாக ஓர் ஆரோக்கியமான சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கான எளிய முயற்சியாக இத்தகைய எதிர்ப்புகள் பதிவு செய்யப்படவேண்டும்.**

## அரியலூரில் புத்தகக் கண்காட்சி

தமிழ்ப் பண்பாட்டுப் பேரமைப்பு மற்றும் தென்னிந்தியப் புத்தக விற்பனையாளர் பதிப்பாளர் சங்கம் சார்பில், அரியலூர் அரசு மேல் நிலைப் பள்ளி விளையாட்டுத் திடலில், சூலை மாதம் 15 முதல் 24 வரை புத்தகக் கண்காட்சி நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் எ.சரவணவேல்ராஜா தொடங்கி வைத்தார். அன் றாடம் பல்வேறு சொற்பொழிவுகள், நூல் வெளியீட்டு நிகழ்வுகள் நடைபெற்று வந்தன.

16.7.2016 சனி மாலை 6 மணிக்கு திருமழப்பாடி பாவேந்தர் பதிப்பகத்தின் சார்பில் நூல்கள் வெளியீட்டு விழா, விருது வழங்கும் விழா நடைபெற்றது. முனைவர் பொற்கோ (மேனாள் துணை வேந்தர், சென்னைப் பல்கலைக்கழகம்) தலைமை தாங்கினார். செம்மொழி க. இராமசாமி வரவேற்புரையாற்றினார். முனைவர் அ.ஆறுமுகம் முன்னிலை வகித்தார் (நூல்களின் ஆசிரியர்). ‘செம்மொழித் தமிழும் நாமும்’ என்ற நூலை இரா. இளங்குமரனார் வெளியிட்டார். முனைவர் அரங்க.பாரி பெற்றுக் கொண்டார்.

‘அண்ணல் ஆறுமுகனார் தமிழ் வளம்’ என்ற நூலை, முனைவர் சி.தங்கமுத்து (மேனாள் துணை வேந்தர், பாரதிதாசன் பல்கலைக்கழகம்) வெளியிட, மருத்துவக் கல்லூரி சிறப்பு நிலைப் பேராசிரியர் சு. நரேந்திரன் பெற்றுக் கொண்டார். பின்னர் விருதுகள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

வளர்தமிழ்ச் செம்மல் விருது இரா. இளங்குமரன் அவர்களுக்கும், மருத்துவத் தமிழ்ச் செம்மல் விருது சு.நரேந்திரன் அவர்களுக்கும், பண்பாட்டுச் செம்மல் விருது பொற்கோ அவர்களுக்கும், கருத்தரங்கச் செம்மல் விருது அரங்க. பாரி அவர்களுக்கும் வழங்கப்பட்டன. இறுதியாக, சி.ஆறு. இளங்கோவன் நன்றியுரையாற்றினார். இப்படி ஒவ்வொரு நாளும் பல நிகழ்வுகள் நடைபெற்றன. 24.7.2016 அன்றுடன் புத்தகத் திருவிழா இனிதே நிறைவடைந்தது.

## பேரா. யோக சுந்தரம் அறக்கட்டளை விழா

பேராசிரியர் செ.யோக சுந்தரம் அறக்கட்டளை 2016ஆம் ஆண்டு சிறந்த தமிழ் நூல்களுக்குப் பரிசளிப்பு விழா, 03.07.2016 ஞாயிறு காலை 9.30 மணிக்குக் குமரன் மில்லினியம் காம்ப்ளக்ஸ் அரங்கில் வேலூர் காட்பாடியில் நடைபெற்றது. விழாக் குழுவின் சார்பில் மலேசியா ஆ. கிருஷ்ணசாமி அவர்கள் பாராட்டும் பரிசும் அளித்து மகிழ்வித்தார்.

# மா.பெ.பொ.கட்சி பொதுக்குழுக் கூட்டம் தீர்மானங்களும் வேண்டுகோளும்

மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிப் பொதுக்குழுக் கூட்டம் 2.7.2016 சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு அம்பத்தூர் கட்சி அலுவலகத்தில் வே.ஆனைமுத்து தலைமையில் நடைபெற்றது.

பல தோழர்கள் கருத்துரைகளை வழங்கிய பின் கீழ்க்கண்ட முடிவுகள் ஒருமனதாக நிறைவேற்றப் பட்டன.

**தீர்மானம் 1 :** சிந்தனையாளன் இதழ் 2016 சூலை முதல் நாற்பதாம் ஆண்டைத் தொடங்குகிறது. இருப்பினும் இவ்விதழின் எண்ணிக்கை நான்காயிரத்தைத் (4000) தாண்டவில்லை. இந்தக் காரணத்தால் நம் கட்சியின் வளர்ச்சி தடைபட்டு விட்டது. இந்த ஈன நிலையை மாற்றுவதற்கு உதவியாகக் கட்சியின் கிளைகள் உள்ள மாவட்டங்களிலும் மற்ற மாவட்டங்களிலும் வருந்தி முயன்று ஆண்டுக் கட்டணமாக ரூ.180 வீதம் குறைந்தது 5000 பேர்களிடமும், பத்தாண்டுக் கட்டணம் ரூ.1500 வீதம் குறைந்தது 1000 பேரிடமும், வாழ்நாள் புரவலர்க் கட்டணம் ரூ.5000 வீதம் குறைந்தது 30 பேர்களிடமும் திரட்டுவதற்கு 2016 ஆகத்து 15 முதல் முயற்சி எடுப்பதென்று முடிவு செய்யப்பட்டது. இந்தப் பணியை 2016 நவம்பருக்குள் முடிக்க வேண்டும் என்று இப்பொதுக்குழு அனைவரையும் வேண்டிக் கொள்கிறது.

**தீர்மானம் 2 :** நம் கட்சியின் சார்பில் வழக்கத் போல் 2016 ஏப்ரல், மே மாதங்களில் அம்பேத்கர், பாவேந்தர் பிறந்த நாள் விழாக் கூட்டங்கள் நடத்தப்படவில்லை. ஆதலால் 2016 செப்டம்பர் 17 முதல் தந்தை பெரியார் அவர்களின் 138ஆம் பிறந்த நாளைக் கொண்டாடும் வகையில் கட்சிக் கிளைகள் உள்ள எல்லா மாவட்டங்களிலும் ஒரு நாள் பொதுக் கூட்டம், ஒரு நாள் மா.பெ.பொ.க. உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் சிந்தனையாளன் வாசகர்கள் ஆகியோரைக் கொண்ட கலந்துரையாடல் நடத்துவதென்றும், 3ஆம் நாள் பெரியார்-நாகம்மை அறக்கட்டளைக்கு நிதி திரட்டுவது என்றும் முடிவு செய்யப்பட்டது. இந்தப் பயணத்தின் போது பொதுக்கூட்டம் நடைபெறும் ஒவ்வொரு நாளைக்கும் மகிழுந்து வாடகை, ஓட்டுநர் ஊதியம், எண்ணெய்ச் செலவு, தோழர்களின் பயணக்கால உணவுச் செலவு இவற்றுக்காக ரூ.4000 (நான்காயிரம்) அளித்து உதவ வேண்டுமாய்த் தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் 3 :** இந்திய அரசு ஒடுக்கப்பட்டோரின் உயர்கல்வி வளர்ச்சியைத் தடுக்கும் ஒரே நோக்கத்துடன் 2017-2018 முதல் எல்லா உயர் படிப்புகளுக்குமான அனைத்திந்தியப் பொது நுழைவுத் தேர்வை நடத்த முடிவு செய்திருப்பதையும், கேடான இந்தத் திட்டத்திற்கு இந்திய உச்சநீதிமன்றம் பிடிவாதமாகத் தாங்களே வலிந்து இந்தத் திட்டத்தைத் திணிப்பதையும் மா.பெ.பொ. கட்சிப் பொதுக்குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

மேலும் இந்திய அரசினர் எல்லா மொழித்தேசிய இனங்களின் உரிமைகளைப் பறிக்கின்ற வகையிலும் வெவ்வேறுபட்ட பண்பாடுகள், மொழிகள் ஆகியவற்றை அழிக்கின்ற வகையிலும் இந்தியா முழுவதிலுமுள்ள எல்லாக் கல்வி நிலையங்களிலும் சமஸ்கிருத மொழி, இந்தி மொழி, வேதக் கல்வி ஆகியவற்றைக் கட்டாயப் பாடங்களாக ஆக்க முடிவு செய்திருப்பதையும் இப்பொதுக் குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

கல்வித்துறை அதிகாரம் இந்திய அரசுக்கு, மேலுரிமையையும் வலிமையையும் சேர்க்கின்றத் தன்மையில் 1976 முதல் பொது அதிகாரப் பட்டியலுக்கு மாற்றப் பட்டுவிட்ட காரணத்தால், அது ஒழிக்கப்பட்டு மாநில அதிகாரப் பட்டியலுக்கு கல்வி மாற்றப்படுகிற வரையில் அனைத்திந்திய அளவில் முயற்சியெடுத்தாலன்றி மேலே கண்ட பெருங்கேடான சூழ்நிலைகளை எப்படித் தவிர்ப்பது என்பது பற்றித் தமிழகத்திலும் இந்தியா முழுவதிலுள்ள மார்க்சிய-பெரியாரிய-அம்பேத்கரிய இயக்கங்களும் மற்றும் கல்வியாளர்களும் கவலையோடு சிந்தித்து மிகப் பெரிய அளவில் முயன்று ஏற்ற எதிர்ப்பு நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள எல்லா அமைப்பினரும் முன் வர வேண்டுமாய் இப்பொதுக்குழு அன்புடன் அனைவரையும் வேண்டிக் கொள்கிறது.

மேலே 3ஆவது தீர்மானத்தில் கண்டபடி இந்திய அரசின் கேடான திட்டங்களை எதிர்க்கும் தன்மையில் இம்முடிவில் உடன்பாடுள்ள தமிழ்நாட்டில் இயங்குகிற எல்லா அமைப்பினரும் 2016 ஆகத்து 16 அன்று முடிந்த எல்லா இடங்களிலும் எல்லா அமைப்பினரும் ஒரு குடைக்கீழ் நின்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு முன்வரவேண்டுமாய் இப்பொதுக்குழு வேண்டிக் கொள்கிறது.

வே. ஆனைமுத்து நன்றி கூறலுடன் மாலை 6 மணிக்குப் பொதுக்குழு முடிவுற்றது.

**- பொதுச் செயலாளர்**

# சமதர்ம உதயம் - இ. சின்னப்பன்

ஐரோப்பிய தேசங்களுள் உலகின் கவனத்தை மிகவும் ஈர்த்து நிற்பது தற்கால ருஷ்யாவேயாகும். சில நூற்றாண்டுகளுக்குமுன் வரை ருஷ்யாவானது 'அரை ஐரோப்பிய' தேசமாகவே கருதப்பட்டு வந்தது. காரணம், அதன் நாகரிகமின்மையே. பீட்டர் எனும் அரசன் காலத்திலே தான் ருஷ்யாவுக்கும் சம அந்தஸ்து அளிக்கப்பெற்றது. அதன்பின் ருஷ்யாவானது பல துறைகளிலும் முன்னேறிச் சென்று ஒரு சாம்ராஜ்யம் எனச் சொல்லும்படியாயிற்று. சமீபகாலத்தில் மகாயுத்தம் நடந்து கொண்டிருக்கும் பொழுது ருஷ்யாவில் ஒரு பலத்த உள்நாட்டுக் கிளர்ச்சி தோன்றி ருஷ்யா சக்ரவர்த்தியை துரத்திவிட்டு ஜனங்களே - அதிலும் ஏழை தொழிலாளர்களே அரசாங்கத்தைக் கைப்பற்றிக் கொண்டார்கள். அதன் பெயரே போல்ஷ்விக் ஆட்சி. அதன் கொள்கைகளில் அநேகம் சமதர்மத்தை அடிப்படையாகக் கொண்டன.

அதன் கொள்கைகளுள் சொந்த சொத்து, மூலதனம் முதலியவற்றை இவ்வுலகத்திலே இல்லாமல் செய்வது தான் தலைநிற்பதாகும். சொத்து, நிலம், பணம் முதலானவைகள் தேசத்தாருக்குப் பொது உரிமையுடையன என்பது இரண்டாவது கோட்பாடாகும். மூன்றாவதாக உலக சகோதரத்துவத்தை ஏற்படுத்துவது, எதிர்ப்பு, கிளர்ச்சி, பலாத்காரம் முதலியவைகள் எல்லாம் மேற்சொன்ன மூன்றை ஏற்படுத்தவதற்காகக் கையாண்ட உபகரணங்களேயன்றி, அக்கட்சியின் முடிவுகள் அல்ல. இத்தகைய அரசியல் முறையை ஏற்படுத்திவிட்டால், மனிதருக்குள் உயர்வு தாழ்வு, பிறப்பு வேற்றுமை, பல தேசங்களுக்குள் யுத்தம் ஆகியவைகள் ஏற்படாதென்பது அவர்கள் துணிவு. அப்பொழுது உலகமே ஒன்றாகி எல்லோரும் சகோதரர்களாய் கஷ்டம் என்பதைக் கனவிலும் கண்டறியாது சுபிட்ச வாழ்க்கையை மேற்கொள்வார்கள் என்பது திண்ணம். அவ்வரசாட்சியில் பணம் மறைந்து போய்விடும். பிரத்தியேக வரவு, செலவு வேண்டியதில்லை. வரி விதிப்பு கிடையாது. பணக்காரர்கள், ஏழைகள் என்றும், முதலாளிகள், தொழிலாளிகள் என்றும், வியாபாரிகள், விவசாயிகள் என்றும் பிரிவினை இருக்காது. எல்லா ஜனங்களும் தாங்கள் குறிப்பிட்ட நேரம் வேலை செய்ததின் பயனாய்த் தங்களுக்கு வேண்டிய பொருள்களைப் பெற்றுக் கொள்வார்கள். எல்லோருக்கும் கட்டாய வேலை; எல்லாச் சொத்துகளும் தேசத்தைச் சேர்ந்தன ஆகிய இரு கொள்கைகளான அஸ்திவாரத்தின் மேலே போல்ஷ்விக் எனும் குடியாட்சிக் கட்டடம் எழுப்பப் பெற்றிருக்கிறதென்பதை யாவரும் அறிய வேண்டும். அந்த நாட்டில் ஒருவர் வேலை செய்து சாப்பிட வேண்டும்; அல்லது பட்டினிக்கிடந்து இறக்க வேண்டும். தான் யாதொரு வேலையுஞ் செய்யாமல் பிறர் செய்யும் வேலையால் சாப்பிட்டு ஏப்பமிடும் அயோக்கியர்களுக்கும், தெரியாதவர்களை ஏமாற்றி வாய்ப்பேச்சினால் வயிறு வளர்க்கும் அன்னக்காவடிகளுக்கும், பிதுரார்ச்சிதத்தினால் வந்த சொத்தைக் கொண்டு உண்டு வண்டவாளமளக்கும் சிறுவர்களுக்கும், பணக்கார மமதையினால் உண்டு உறங்கி உடுத்தி வாழ்வதே நோக்கமாகக் கொண்டு பஞ்சணையின்மேல் சல்லாபஞ் செய்யும் வீரர்களுக்கும் அத்தேசத்தில் இடம் இல்லை.

அத்தேசத்தின் ராஜ்ய பாரம் எவ்வாறு நடக்கிறதென்பதைக் கவனிப்போம். ஒவ்வொருவருக்கும் ஒரு நோட்டுக் கொடுக்கப் பெறுகிறது. அதில் அவர்கள் ஒவ்வொரு நாளும் செய்த வேலையை நிமிஷக் கணக்குப் போட்டுப் பதிவு செய்ய வேண்டும். அதைப் பரிசோதித்த பின் தான் மேலதிகாரி உணவுச் சீட்டு அளிப்பார். தொழிலாளிகளே பொருளாதாரமான எல்லா விஷயங்களையும் கவனித்துக் கொள்கிறார்கள். தனியாக விற்கவோ வாங்கவோ வேண்டியதில்லை. சொந்த அலுவல் பார்க்க வேண்டிய அவசியமில்லை. முன்னேற்பாட்டின்படி ஒவ்வொரு வேலையும் செவ்வனே நடைபெறும்.

நிலமும், சொத்தும் சொந்தமாக அனுபவிக்கும்படி விட்டுவிடின் அமைதியும், நியாயமும் நிலவுமென்று நினைக்க இடமில்லை. ஒரு தடவை எல்லோருக்கும் சமமாகப் பகிர்ந்து கொடுத்துவிட்ட போதிலும் சிறிது காலத்திற்குள் பலவித மாறுதல் ஏற்பட்டுவிடும். இப்படியேதான் எல்லா தேசங்களிலும் காணப்பெறும் பொருளாதார வேற்றுமை உண்டானது. இதற்குப் பரிகாரம் எல்லாச் சொத்தையும் தேசத்திற்கு உரிமையாக்கிவிட வேண்டியதைத் தவிர வேறு வழியில்லை. எல்லா நிலங்களையும் அரசாங்கத்தார் கைப்பற்றி ஒவ்வொரு விவசாயப் பகுதியாகப் பிரித்து எல்லோருக்கும் சமமான வேலை விடுத்தலே நியதியாகும். அம்மாதிரியே தொழிற்சாலைகளும், அரங்கங்களும். ஏனெனில் சொந்தச் சொத்தாகக் கொடுத்துவிட்டால் மனித சுபாவமான தன்னலம் பிறரைத் தாழ்த்தித் தான் அதிக நலமடையும்படி செய்கிறது.

**அத்தேசத்தில் 16 வயது முதல் 50 வயது வரை உள்ளவர்கள்தான் வேலை செய்ய வேண்டும். நோயைப் பரிகரிப்பதற்கும் தவிர்ப்பதற்கும் ஏராளமான கவர்ன்மென்ட் டாக்டர்கள் இருக்கிறார்கள். வேலையில்லாத நேரத்தில் காலங்கழிக்க லைப்ரேரிகளும், மியூசியம்களும், பார்க்குகளும் உண்டு. எல்லோரும் தொழிலாளிகளாகவும், முதலாளிகளாகவுமிருக்கிறார்கள். சந்தோஷமே எங்கும் பரவியிருக்கிறது.**

இத்தகைய ஆட்சியின் பேரொலி நாற்புறங்களிலும் சண்டமாருதம் போன்று வீசி உலக மக்களின் மனதைத் தன்பால் திருப்பி வருகிறது. ஒவ்வொரு நாடும் சமதர்ம ஆட்சிக்கு விரைவாகச் சென்று கொண்டிருக்கிறது. அதுபோல் தென்னிந்தியாவும் தெளிர்ச்சியடைந்து உண்மைக் குடியாட்சிக்குத் தன்னைத் தயாரித்து வருகிறது என்று சொல்லின் மிகையாகா. ஆகவே எங்கணும் காட்டுத் தீபோல் பரவிவரும் சமதர்ம-சுயமரியாதை-உண்மை சுயராஜ்ய இயக்கமானது உலக மாறுபாட்டின் ஒரு பகுதியேயாகும்.

(- ''நாடார் குல மித்திரன்'', 5-1-1931)

# இரகசியங்கள் நிறைந்த வாடிகன்

**வா**டிகன் நகரம் என்று அழைக்கப்படுகிற 100 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடம், ஒரு தேசம் என்றால் ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. உலகிலேயே மிகச் சிறிய நாடு இதுதான். வாடிகன் சிறிய நகராக இருந் தாலும் இதற்கு சொந்தமான சொத்துக்கள், பல இலட்சம் மடங்கு இருக்கிறது. இவை எல்லாவற்றையும் வாடிகன் தனது சொந்தக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது.

வாடிகன் அரண்மனையில் 1,600 அறைகள் உள்ளன. இந்த அறைகளில் என்ன நடக்கிறது என்பது கடந்த ஆயிரம் வருடங்களாக யாருக்கும் சரியாகத் தெரியாது. இந்த பிரம்மாண்டமான அரண்மனைக்குள் செல்ல மூன்று கதவுகள் மட்டுமே உள்ளன. அந்தக் கதவுகளும் எப்போதும் மூடியே இருக்கும். முக்கிய மான சில நாட்களில் மட்டுமே கதவுகள் திறக்கப்படும். இந்த அரண்மனையில் என்ன நடக்கிறது என்பது ரோம் நகர மக்களுக்குக் கூட தெரியாது. அதனால் இந்தக் கதவுகள் திறக்கப்பட்டால் எட்டிப் பார்ப்பதை ரோமானியர்கள் இன்றைக்கும் வழக்கமாக வைத் திருக்கிறார்கள்.

வாடிகன் அரண்மனையைச் சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த 3,000 காவலாளிகள் கண்காணித்து வருகி றார்கள். இவர்கள் ஆறடிக்கு குறையாக உயரத்துட னும், ஏற்கெனவே இராணுவத்தில் ஒரு வருடம் பணி புரிந்த அனுபவமும் பெற்றவர்கள். இந்த அரண்மனை யில் அமர்ந்து கொண்டுதான் உலகம் முழுவதும் உள்ள மூன்று இலட்சம் தேவாலயங்களை போப் ஆட்சி செய்து வருகிறார். இந்த தேவாலயங்களின் கணக்கு வழக்குகளைப் பார்க்க மட்டும் 3,000 பணி யாளர்கள் அரண்மனையில் வேலை செய்கிறார்கள்.

இந்த அரண்மனையில் வேலை பார்க்கும் அலு வலர்கள், அதிகாரிகள் உண்மையில் கொடுத்து வைத்தவர்கள். இங்கு வேலை செய்வது மிகவும் கவுரவமானது. பத்திரமானது, நிறைய சம்பளத்தைத் தரக்கூடியது. இவர்களுக்கு வருமான வரி கிடையாது. அதனால் இங்கு வேலை செய்யும் அதிகாரிகள் உலகி லேயே சிறந்த அரசு நிர்வாகிகளாகக் கருதப்படு கிறார்கள்.

வாடிகன் அரண்மனைக்குள்தான் உலகிலேயே மிகப்பெரிய இயந்திரங்கள் இருக்கின்றன. இங்குதான் உலகிலுள்ள அத்தனை மொழிகளிலும் பைபிள், அதன் சம்பந்தமான பிரச்சார புத்தகங்களை அச்சிட்டு அனுப்பிக் கொண்டே இருக்கிறார்கள். இவர்களுக் கென்று தனியாகப் பதிப்பகம், தொலைக்காட்சி, வானொலி, இணைய தளம் என எல்லாம் இருக்கிறது.

உலகத்திலேயே மிகப்பெரிய நூலகமும் வாடிகன் அரண்மனையில்தான் உள்ளது. இந்த நூலகம் மிகப்பெரிய நூலகமாக இருந்த போதும் கி.பி.2000-ஆம் ஆண்டு வரை இதனுள் நுழைய யாருக்கும் அனுமதியில்லை. போப் இரண்டாம் ஜான்பால் தான் அந்த விதியை தளர்த்தி, படைப்பாளிகளும் விஞ்ஞானி களும் குறிப்புகள் எடுப்பதற்குப் பயன்படுத்திக் கொள்ள லாம் என்று அனுமதி வழங்கினார். அதன்றிலிருந்து ஏராளமான பேர் நூலகத்தினுள் சென்று குறிப்பெடுத்து வருகிறார்கள்.

இந்த நூலகம் ஏன் இத்தனை முக்கியத்துவம் பெறுகிறது என்றால், இரண்டாயிரம் ஆண்டுகளாக உலகில் உள்ள மற்ற மதங்களின் அபூர்வ சிந்தனைக் குறிப்புகள், ஆராய்ச்சி முடிவுகள் என்று பலவும் அந் தந்த நாட்டு மக்களும், அந்தந்த மத இன மக்களும் தெரிந்துகொள்ள முடியாதபடி இங்கு மறைத்து வைத் திருந்தார்கள். இப்போது கட்டுப்பாடு தளர்த்தப்பட்டு இருப்பதால், மக்களிடம் மறைக்கப்பட்ட பல உண்மை கள் வெளிவரும் என்று உலகம் பேரார்வமாக இருக் கிறது.

(நன்றி : தினத்தந்தி, 11.7.2016)

## தொல்காப்பியர் சிலைத் திறப்பு விழா




*தொல்காப்பியர் சிலைத் திறப்பு விழா, கன்னியா குமாரியில் 10.7.2016 ஞாயிறு காலை 10 மணிமுதல் மாலை 6 மணிவரை நடைபெற்றது. மு. மீனாட்சி சுந்தரம் தலைமை தாங்கினார். புலவர் த. சுந்தர ராசன் வரவேற்புரையாற்றினார். புலவர் கு. பச்சை மலை, ஆர்.தி. சுரேஷ் முன்னிலை வகித்தனர். எம்.ஆர். காந்தி தொல்காப்பியர் சிலையைத் திறந்து வைத்தார். தொல்காப்பியர் வாழ்க்கை வரலாற்று நூலை, பேராசிரியர் ஆறு. அழகப்பன் வெளியிட்டார். ஏ.பி.எஸ். ஆன்றோ பெற்றுக்கொண்டார்.*

*படத்திறப்பு நிகழ்வில், பனம்பாரனார் படத்தை இரா. முகுந்தன், நாம் தரும வில்பாண்டியன் படத்தை கு. வெள்ளைச்சாமி, அதங்கோட்டாசான் படத்தை முகிலை இராசபாண்டியன் ஆகியோர் திறந்து வைத்த னர். மற்றும் ஏராளமான தமிழ் அறிஞர்கள் வாழ்த் துரை வழங்கினர்.*

## நூல் அறிமுகம்

### சுயமரியாதை மண்ணின் தீராத வாசம் : ஊ.பு.அ. சௌந்தரபாண்டியனார் வரலாறு



சுயமரியாதை இயக்கத்தின் தூண்களில் ஒருவராகத் திகழ்ந்த சுயமரியாதைச் சுடரொளி ஊ.பு.அ. சௌந்திர பாண்டியனார் வரலாற்றை அவருடைய பெயர்த்தி திலகபாமா அவர்கள், “சுயமரியாதை மண்ணின் தீராத வாசம்” என்ற தலைப்பில் மிக அருமையான வரலாறாக றை எழுதியுள்ளார்.

ஏற்கெனவே முனைவர் பு. இராசதுரை “சட்டமன்றத்தில், சௌந்தர பாண்டியனார்” சுயமரியாதை இயக்கத்திற்கு நாடார்களின் பங்களிப்பு ஆகிய நூல்களில் இவருடைய செயல்பாடுகளை எழுதியிருந்த போதிலும், இந்த நூல் அதிக முக்கியத்துவம் பெறுகிறது. காரணம் அவருடைய நாட்குறிப்பிலிருந்து அன்றாட நிகழ்வுகளை இவர் பட்டியல் இட்டுள்ளார். முதல் சுயமரியாதை மாநாட்டில் இவருடைய முழுப் பங்களிப்பு இருந்தபோதிலும், மூன்றாவது சுயமரியாதை மாநாட்டை இவரே பொறுப்பேற்று 8.9.1931இல் சிறப்புற நடத்திக்காட்டினார்.

1944இல் சேலத்தில் நடைபெற்ற மாநாட்டில் பெரியாரை நீக்கிவிட்டு சௌந்தரபாண்டியனாரை தலைவராக்க முயற்சிகள் செய்தனர். சிலர் விருதுநகர் வந்து இவரிடம் பேசினர். ஆனால் பெரியாரை எதிர்க்க இவர் விரும்பவில்லை.

தி.மு.க. பிரிந்த போது தி.மு.க.விற்குச் சென்றார். 1953 பிப்ரவரி 22இல் இவர் மறைந்துவிட்டார்.

இந்த நூலில் நாடார் சமூக வரலாறு, சௌந்தர பாண்டியன் முன்னோர் வரலாறு, சுயமரியாதை இயக்க வரலாறு, நீதிக்கட்சியைப் பற்றிய செய்திகள், இந்தி எதிர்ப்புப் போராட்டச் செய்திகள் என ஏராளமான செய்திகளை அறிந்துகொள்ள முடியும். பெரியார் தொண்டர்கள் ஒவ்வொருவரின் கைகளிலும் இருக்க வேண்டிய நூல்.

திலகபாமா சௌந்திரபாண்டியனாரின் மகள் வயிற்றுப் பெயர்த்திக்கும் பெயர்த்தி ஆவார். மிகச்சிறந்த வரலாற்று ஆவணத்தை வழங்கிய அவருக்கு சிந்தனையாளன் ஆசிரியர் குழு சார்பில் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**507 பக்கங்கள் ★ விலை ரூ.500**

நூல் கிடைக்குமிடம் : **காவ்யா**
16, இரண்டாம் குறுக்குத் தெரு, டிரஸ்ட்புரம்,
கோடம்பாக்கம், சென்னை - 600 024.
தொலைப்பேசி : 044-23726882

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

### கருப்புச்சட்டை

சுயமரியாதை இயக்கத்தினர் அதிகமாகப் புதினங்கள் எழுதுவதில்லை. தொடக்கக் காலத்தில் தி.மு.க.வினர் நிறையப் புதினங்கள் எழுதினர். இளம் தோழர் வா.சி.ம.ப.த.ம. சரவணக்குமார் அவர்கள் சுயமரியாதை இயக்கத்தின் அடிப்படைக் கொள்கையான சாதி ஒழிப்பை மய்யப்படுத்தி இந்த நாவலை எழுதியுள்ளார். நாவலின் இடையிடையே பாரதிதாசன் பாடல்கள், பெருஞ்சித்திரனார் பாடல்கள் இடம்பெற்றிருப்பது அருமை.

பெரியாரின் போராட்டங்கள், வைக்கம் போராட்டம் தொடங்கி தமிழ்நாடு தமிழருக்கே வரை இடையிடையே வாய்ப்புள்ள இடங்களில் உரையாடல்களின் வழியே இடம்பெறச் செய்துள்ளார்.

நாவலில், கிராமப்புறங்களில் ஆரியப் பண்பாட்டுக்கு மாற்றாகப் பொங்கல் விழாவை மக்கள் ஆர்வமாகக் கொண்டாடுவதைப் படம் பிடித்ததுபோல் காட்டியுள்ளார். நாவலைப் படிக்கும்போது நாம் அந்தக் கிராமத்திற்கே நேரில் சென்று அந்த நிகழ்வுகளில் பங்கேற்பதைப் போன்ற உணர்வு ஏற்படுகிறது. முழுக்க, முழுக்க கிராமப் புறத்தை மையப்படுத்தி அங்கு ஒரு பண்பாட்டுப் புரட்சியை ஏற்படுத்தியுள்ளார். வா.சி.ம.ப.த.ம. சரவணக் குமார், கொளத்தூர்மணி அவர்களும், பொழிலன் அவர்களும் மிகச்சிறந்த அணிந்துரை வழங்கி உள்ளனர்.



தமிழர்கள் அனைவரும் குறிப்பாகப் பெரியார் தொண்டர்கள் அனைவரும் தவறாமல் படிக்க வேண்டிய நூல் கருப்புச்சட்டை.

**பக்கம் : 232 ★ விலை ரூ.150/-**

நூல் கிடைக்குமிடம் :
**நூல் ஆசிரியர் வா.சி.ம.ப.த.ம. சவரணக்குமார்**
தொடர்புக்கு : 9962880250

## போக்குவரத்துத் துறையின் பொய்முகம்

சென்னையிலும் மற்ற மாவட்டங்களிலும் ஓடும் அனைத்து மாநகர மற்றும் அரசுப் பேருந்துகள் மிக, மிகக் கேவலமாகப் பராமரிக்கப்படுகின்றன. நகர, மாநகர பேருந்துகளில் குப்பையும் மண்ணும் நிறைந்து காணப்படுகின்றன. சன்னல்கள் எந்தப் பேருந்திலும் சரியில்லை. மேற்கூரையும் ஓட்டை உடைச்சலு மாக உள்ளது. தினந்தோறும் விபத்துகள் ஏற்படுகின்றன.

பேருந்துகள் பெரும்பாலும் நிறுத்தத்தில் நிற்பது இல்லை. சில பணியாளர்கள் பயணிகளிடம் சரியாக நடந்துகொள் வதில்லை. பயணச்சீட்டுப் பரிசோதகர்கள், பயணச்சீட்டு இல்லாத வர்களை மட்டும் பரிசோதித்துத் தண்டனை விதிக்கின்றனர். பேருந்துக்குள் உள்ள குப்பைகளையும் ஓட்டைகளையும் கிழிந்து கிடக்கும் தகரங்களையும், நீட்டிக்கொண்டு கிடக்கும் ஆணிகளையும் கவனிப்பதில்லை. இதையும் கவனிக்க வேண்டும் என்பது ஆய்வாளர்களிடம் கூடுதலாகப் பொறுப் பாக்க கொடுக்க வேண்டும்.

அனைத்து அரசுப் பேருந்துகளும் குறிப்பிட்ட வண்ணத் துடன் இயக்க வேண்டும். நகரப் பேருந்துகள் நிற்கும் இடம் தள்ளி, புறநகர் பேருந்துகள் நிற்க வேண்டும். குறிப்பாகத் தாம்பரத்தில் நகரப் பேருந்து நிறுத்தும் இடத்திற்கு முன்பாகப் புறநகர மற்றும் விரைவு பேருந்துகள் நிற்கின்றன. புறநகர பேருந்து நடத்துநர்கள் நகரப் பேருந்து நிற்கும் இடத்தில் நிறுத்திவிட்டுக் கூவி அழைக்கின்றனர். அதனால் புறநகரப் பேருந்துகள் நகரப் பேருந்துக்கு முன்பக்கமாகச் சிறிது தூரம் தள்ளி நிறுத்தலாம்.

பேருந்துகளில் ஒரே இடத்திற்குப் பலவிதமான கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன. சாதாரணப் பேருந்துகளை குறைத்துக் கொண்டு, விரைவுப் பேருந்துகளையும், சொகுசுப் பேருந்துகளை யும், குளிர்சாதனப் பேருந்துகளையும் இயக்குகின்றனர். காலை மற்றும் மாலையில் பணிக்குச் செல்வோர்களிடம் சொகுசு பேருந்துகளை மட்டுமே இயக்கிக் கட்டணத்தை வசூலிக்கின்ற னர். சாதாரணக் கட்டணப் பேருந்துகளுக்குக் காத்திருப்போர் பணிக்கு நேரத்திற்குச் செல்ல முடியாமல் பணியையும் இழக்கின்றனர்.

**மேலும் பல பணியாளர்கள் கையூட்டுக் கொடுத்துப் பணிக்கு வந்துள்ளனர். அவர்கள் தாங்கள் கொடுத்த தொகையை வசூலிக்கப் பல வழிகளில் முயற்சிக்கின் றனர். உடந்தையாகப் பல அரசு அதிகாரிகளும் உள்ளனர். இவ்வகையில் இயங்கும் போக்குவரத்துத் துறை, மக்கள் மத்தியில் பொய்யான முகத்துடன் செயல்படு கின்றது.**

வயது முதிர்ந்தவர்களுக்கு மாதம் ஐந்து முறை பேருந்தில் போய்வர அனுமதிச் சீட்டு வழங்கப்பட்டுள்ளது. இதை மாதம் முழுவதும் நீட்டிக்கலாம். அய்ந்து வயதுக்குப் பிறகு குழந்தைகளுக்குக் கட்டண வசூல் தொடங்கலாம். பணியாளர்களும் தன் சொந்த வாகனம் போல் கவனித்துப் பணி செய்யலாம். இது மக்களுக்குப் போக்குவரத்துத் துறையின் பொய் முகத்தைப் போக்கும்.

- உழவர் மகன் ப.வ.

## சிந்தனையாளன் வளர்ச்சி நிதி ஆகத்து-2016

| | | |
|---|---|---|
| **துரை சித்தார்த்தன்** | காட்டுமன்னார்கோயில் | 1000/- |
| **இரா. குப்புசாமி** | கரூர் | 1000/- |
| **க. ஆதிமூலம்** | கீழ்ப்பென்னத்தூர் | 1000/- |
| மரு. **க.சோமாஸ்கந்தன்** | பீளமேடு, கோவை | 1000/- |
| **தமிழேந்தி** | அரக்கோணம் | 500/- |
| **இரா.பச்சமலை** | சென்னை | 500/- |
| பாவலர் **வையவன்** | திருவண்ணாமலை | 500/- |
| **தமிழ்நாடன்** | குவைத் | 500/- |
| முனைவர் **அ. ஆறுமுகம்** | திருமழபாடி | 300/- |
| **பகுத்தறிவாளன்** | திருப்பத்தூர் | 250/- |
| **மோ.சி. சங்கர்** | வேலூர் | 200/- |
| **கி. இராமச்சந்திரன்-மேகலா** | வாலாசாபேட்டை | 200/- |
| **ப.வெங்கடேசன்-அரங்கமணிமொழி** | வாலாசாபேட்டை | 200/- |
| பேரா. **ச.பொ.சீனிவாசன்** | மூணாறு | 200/- |
| **வீ. இராசாப்பிள்ளை** | சிதம்பரம் | 200/- |
| **மரு. வசந்தா மதியழகன்** | அரியலூர் | 200/- |
| **சி. இலக்கியா** | சென்னை | 100/- |
| **அ. லயா** | கிழக்கு லண்டன் | 100/- |
| **சி. அகிலா** | சென்னை | 100/- |
| திருமதி. **சகுந்தலா குப்புசாமி** | சிறுநாத்தூர் | 100/- |
| சென்ட்ரிங் **இரா.ப. கோவிந்தன்** | தாம்பரம் | 100/- |
| **மா. சுப்பிரமணி - கஸ்தூரி** | தாம்பரம் | 100/- |
| **நா. மதனகவி** | வாணியம்பாடி | 100/- |
| **இ. கபிலன்** | சிதம்பரம் | 100/- |
| **மு.செயபால்** வழக்குரைஞர் | திருவண்ணாமலை | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | 100/- |
| **இளவரசன்** தமிழ்க்களம் | அரியலூர் | 100/- |

## மா.பெ.பொ.க. வளர்ச்சி நிதி - ஆகத்து - 2016

| | | |
|---|---|---|
| புலவர் **இரா.கலியமூர்த்தி** | சிறுகடம்பூர் .... | 100/- |
| **க. குப்புசாமி** | சோளிங்கபுரம் .... | 100/- |
| **பொ.சுப்பிரமணியன்** | கீழ்ப்பென்னாத்தூர் .... | 100/- |
| **கு.சூரியன்** | பெங்களூர் .... | 100/- |
| **கு.பாரி** | சோளிங்கபுரம் .... | 100/- |
| **முத்து அன்பழகன்** | சீர்காழி .... | 100/- |
| **அழகு அன்பழகன்** | சீர்காழி .... | 100/- |
| **அறிவுக்கடல் ராஜ்குமார்** | சிதம்பரம் .... | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி .... | 100/- |

**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக** வெளிடுபவர், ஆசிரியர் **வே.ஆனைமுத்து,**
2ஆ/85, கே.எஸ்.ஆர்.நகர், எம்.டபிள்யூ.பி. 2ஆம் குறுக்குத் தெரு, அம்பத்தூர், சென்னை - 53.
அச்சிட்டோர் : **பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர் குழுமம்,** சென்னை-53. ☎ : 044-2625 2119